
'ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை...
அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்' (திபா 23: 1,2)

# தாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடல் - 07 பங்குனி - வைகாசி 2009 ஊற்று - 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம்

அன்பு உள்ளங்களுக்கு,

தவக்காலம், பாஸ்கா காலம் இரண்டு காலங்களையும் தாங்கி இத்தாகம் வருகின்றது. பங்குனி முதல் வைகாசி மாதங்களுக்கான சிந்தனைகளை இந்த நூல் கொண்டிருக்கின்றது. அந்த நாளுக்குரிய நற்செய்திப் பகுதியைப் பார்த்து அதன் பின்னணியில் சிந்தனையை வாசித்துத் தியானித்து வாழ்வோடு ஒப்பிட்டு நடைமுறை மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமென்பது எனது விருப்பம்.

**இறையனுபவம்**

எமது ஆன்மீக வாழ்வில் நாம் நிலைத்திருந்தால் அசாதாரண இறையனுபவங்களைத் தேடிச் செல்ல வேண்டியதில்லை. இறைவனை நோக்கி நாம் செல்லும்போது அவரே எம்மிடம் வந்து எம்மை வழிநடத்துவார். இறைவன் கோவிலில் உள்ளார் என்பதைவிட அவர் ஆலயமாகிய எனதுள்ளத்தில் இருக்கிறார் என்பதை நான் நம்பி இறையனுபவங்களைத் தேட வேண்டும்.

இத்தவக்காலம் இன்னுமொரு தவக்காலமாக அமையாமல் மனமாற்றங்களைக் கொண்டுவரும் காலமாக அமையட்டும். இறைவாக்கில் ஊன்றி அவை தரும் ஆழ்ந்த விளக்கங்களைப் புரிந்துகொண்டு எம் வாழ்வை ஆண்டவருக்கு அர்ப்பணிப்போம்.

இயேசுவின் இறையனுபவம் சீடர்களின் அனுபவமாகியது. அதேபோல எமது ஆன்மீக அனுபவம் அடுத்தவரது அனுபவமாகவும் மாற வேண்டும். அதற்கு நான் நற்செய்தியைத் தாங்கிச் செல்பவராக மட்டுமல்ல, நற்செய்தியாகவே மாற வேண்டும். அப்போது எனது வாழ்வே அடுத்தவர்க்கு வாழ்வு தருகின்ற ஒன்றாக விளங்கும்.

இத் தவக்காலம் அருளின் காலமாகவும், பாஸ்கா காலம் தூய ஆவியின் வழிகாட்டலை உணரும் காலமாகவும் அமைய ஆசித்து முடிக்கிறேன்.

**அருட்தந்தை நோயல் இம்மானுவேல்**
*ஆசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம்

பங்குனி ~ வைகாசி 2009

தேடல் – 07 ஊற்று – 02

ஆசிரியர்: அருட்தந்தை நோயல் இம்மானுவேல்

வெளியீடு: அருட்தந்தை நோயல் இம்மானுவேல்

அட்டைப்படம்: சகோதரர் அமில ரவிந்த

விலை: 50/-

பதிப்பகம்: Teleprints, Kandy.

உங்கள் தொடர்புகளுக்கு:

Fr. Noel Emmanuel,
"Thagam"
National Seminary,
Ampitiya 20160.
ph. 081-2219586 / 0602822160

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவக்காலம் முதல் ஞாயிறு
## 01 - பங்குனி 2009

தொநூ 9: 8-15 திபா 25: 4-9 1பேது 3: 18-22 மாற் 1: 12-15

### <u>தண்ணீர்</u>

மனமாற்றம், புதுவாழ்வு பற்றிய செய்திகளை இன்றைய ஞாயிறு வாசகங்கள் வழியாக நாம் பெற்றுக்கொள்ளலாம். நோவாவின் காலத்தில் கடவுள் பெருவெள்ளத்தை வருவித்து உலகைப் புதுப்பித்தார். இயேசுவோ மனமாற்றத்தையும் புதுவாழ்வையும் தனது வாழ்வின் மையமாகக் கொண்டிருந்தார். இவை தரும் வழிகாட்டல் என்ன?

### இறைவனின் வாக்கு

கடவுள் உலகை வெள்ளப்பெருக்கினால் அழித்தாலும் உலகைக் கைவிடவில்லை. இது கடவுள் படைத்த உலகு. அதை நல்லதெனவே அவர் கண்டார் (காண். தொநூ 1: 4, 10, 12, 18, 21, 25, 31). ஆனால் மனிதனின் பாவத்தின் விளைவாகவே அனைத்துத் தீங்குகளும் உலகில் நுழைந்தன. எனவே கடவுள் உலகை அழித்தார் என்று சொல்வதற்குப் பதிலாக உலகைப் புதுப்பித்தார் என்று சொல்வதே பொருத்தமானதாகும். ஆண்டவர் ஏற்படுத்திய உடன்படிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டது:

1. சதையுள்ள எந்த உயிரும் வெள்ளப் பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது.
2. உலகம் உள்ளவரை பருவ காலங்களும் தொடர்ந்து வரும்.
3. உடன்படிக்கையின் அடையாளம் வானவில்.

தண்ணீர் திருமுழுக்கின் முன்னடையாளம் என்று பேதுரு தனது மடலில் குறிப்பிடுகின்றார். மனித பாவம் போக்கி புதுவாழ்வு தரவல்லது இச்செயல் என்பதை உணர்ந்து வாழ அழைக்கிறது இந்த அடையாளம்.

### தண்ணீர்

சில வருடங்களுக்கு முன்பாக சுனாமி இலங்கையைத் தாக்கியபோது ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியாகின. வாழ்வில் யாரும் மறக்க முடியாத சம்பவம் இது. குழந்தைகள், முதியவர்கள் என்று குற்றமற்றவர்கள் பரிதாபமாக இறக்கக்கண்டு பலரது உள்ளங்களில் எழுந்த கேள்வி 'கடவுள் எவ்வாறு இத்தனை உயிர்களை எடுத்துக்கொள்ளலாம்?' என்பதாகும். விடை காண முடியாத ஓர் கேள்வி இது. கடவுளை பழித்தவர்கள் பலர். அனைத்துப் பழியையும் கடவுள்மீது சுமத்தியவர்கள் பலர். அன்று யார் எந்த விளக்கம் சொன்னாலும் ஏற்க முடியாத நிலையிலேயே அனைவரும் இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நோவா காலத்தவரா நாம்?**

நோவா காலத்து மக்கள் பல ஒழுக்கக் கேடான வாழ்வு வாழ்ந்து வந்தனர். பாவம் உலகில் பெருகியிருந்தது. எனவே கடவுள் உலகைத் தண்ணீரால் கழுவினார். ஆயினும் வெள்ளப்பெருக்கின் பின்பு நோவாவின் செயல் உலகில் பாவம் முற்றாக ஒழிந்துவிடவில்லை என்பதைக் காட்டுகின்றது (காண். தொநூ 9: 20). இவ்வாறு பாவம் தொடர இன்று உலகம் நோவாவின் காலத்தைவிட மிகக் கேவலமாக மாறிவிட்டது எனலாம். தண்ணீரால் பல நாடுகள், மக்கள் அழிந்தது பல உண்மைகளை இன்று எமக்கு உணர்த்தலாம். நேர்மையாக எமக்கு நாமே சில கேள்விகளைக் கேட்டு விடைகான முயல்வோம்.

☞ உலகம் கெட்டுவிட்டது, சமூகத்தில் பாவம் பெருகி விட்டது என்று குறைகூறத் துணியும் எனது வாழ்வு சுயநலமற்ற அன்பு வாழ்வா?

☞ நானும் எனது குடும்பமும் முன்னேற நான் மேற்கொள்ளும் குறுக்கு வழிகள் எத்தனை எத்தனை?

☞ பணம், பெருமை, பதவி, செல்வாக்கு, புகழ் போன்றவற்றை அடைய நான் நடத்தும் நாடகங்கள் எத்தனை?

☞ பகைவரை நான் செயலளவில் மன்னித்து தீங்கிழைக்காவிட்டாலும் மனதளவில் அவர்களுக்கு எதிராகத் தீட்டும் திட்டங்கள் எத்தனை?

**கடவுளின் உரிமை**

அனைத்தையும் தந்த கடவுளுக்கு எடுத்துக்கொள்ள உரிமையில்லையா என்று கேட்டவர் யோபு எனும் நீதிமான். உலகம் முழுதையும் அழிக்க மாட்டேன் என்று கடவுள் வாக்களித்தாலும் இன்று உலகின் போக்கைக் கண்டு கடவுள் உலகிற்கு ஓர் எச்சரிக்கை கொடுத்திருக்கலாமல்லவா? சுனாமி போன்ற பல அழிவுகளைக் கண்டும் உலகம் இன்று சிறிதளவாவது மாறி யுள்ளதா? இதற்கு எனது பதில் என்ன?

அதைவிட உலகை குறைகூறும் நான் எனது வாழ்வில் என்ன மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளேன்? கிறிஸ்தவம் என்பது அன்பை மையமாகக் கொண்டது. பகைவரையும் மனதார மன்னிக்கும் அன்பு இது. இந்த அன்பை வாழ்ந்துகாட்டுவது எனது கடமையல்லவா? நான், நாம், பங்குச் சமூகம் என்று கிறிஸ்துவை (அன்பை) வாழ்ந்து காட்டினால் உலகம் தானாகவே மாறும். இயேசு கொண்டுவந்தது மனமாற்றத்தின் நற்செய்தி. அதில் அமைதி, நம்பிக்கை, வாக்கு, மீட்பு இருந்தது. எனது அன்பு வாழ்வினால் நானே நற்செய்தியாக மாற வேண்டும். என்னால் முடியுமா? இதுவே எனக்கு வரும் சவால். ஏற்று வாழ்வேன், கிறிஸ்துவின் நற்செய்தியாவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02 - திங்கள் - பங்குனி 2009

லேவி 19: 1-2, 11-18 திபா 19: 7-9, 14 மத் 25: 31-46

## *பணி*

உலகைத் தீர்ப்பிட வரும் இயேசு எவ்வாறு செயல்படுவார் என்று உணர்த்துகின்றது இன்றைய நற்செய்தியில் வரும் உவமை. அனைவரையும் ஆச்சரியத்தில் நிலைக்க வைக்கும் ஒன்றாக இது அமையும் என்பதை இந்த உவமை உணர்த்துகின்றது.

### வாழ்ந்து காட்ட அழைப்பு

நிலைவாழ்வை அடைய தகுதிபெற வேண்டும் என்பது அனைவருக்கும் இருக்கும் ஓர் இலக்கு. உணர்ந்தோ உணராமலோ நாம் இந்த இலக்கை நோக்கிச் செல்கின்றோம். கடவுளை அடைய விவிலியத்தை முழுவதுமாகத் தெரிந்திருக்க வேண்டும் என்றோ, உலகை விட்டுவிலகி தூய வாழ்வு வாழ வேண்டுமென்றோ பல எண்ணி செயல்படுவதுண்டு. ஆனால் உவமையில் இயேசுவின் வார்த்தைகள் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது. ஏழைகள் கடவுளால் தண்டிக்கப்படுபவர்கள் எனும் யூதர்களின் சிந்தனையைத் தகர்த்தார் இயேசு. ஏழைகளில் அவர் தன்னை வெளிப்படுத்துகின்றார் என்பதையும் இயேசு இந்த உவமையின் மூலமாக வலியுறுத்துகின்றார். அன்றும் இன்றும் ஏழைகளிலும் தேவையிலிருப்பவர்களிலும் இயேசுவைக் கண்டு செயல்படுவது அவசியம் என்பது தெளிவாகின்றது. இதற்கு இரண்டு வழிகளுண்டு:

1. ***சாதாரண விடயங்களில்...:*** பசித்திருப்பவர், தாகமாயிருப்பவர், அன்னியர், நோயில் இருப்பவர், சிறையிலிருப்பவர்... இவர்களை நாம் நாளாந்த வாழ்வில் காண்கின்றோம். இவர்களுக்கு உதவுவதும் கடினமானதல்ல. இவர்களுக்கு எமது சொத்துக்கள் அனைத்தையும் கொடுக்க வேண்டிய அவசியமுமில்லை. மாறாக எம்மால் முடிந்த சிறிய உதவியே போதும். எமது மலர்ந்த முகம், புன்புறுவல், பிரசன்னம், ஆறுதல் வார்த்தைகள் போன்றன இவர்களது வாழ்வில் வசந்தங்களைக் கொண்டுவரும். இதற்கு கல்வியோ சொத்தோ தேவையில்லை.

2. ***உதவி இயல்பாக...:*** நாம் இயேசுவிற்கே செய்கிறோம், இதனால் எமக்கு நிலைவாழ்வுண்டு எனும் எண்ணம் எமக்கு இருக்க வேண்டிய அவசியமில்லை. நாம் செய்யும் உதவி எம்மிடமிருந்து இயல்பாகவே வரவேண்டும். இவர்களுக்கு நம்பிக்கை கொடுப்பதைவிட நாமே நம்பிக்கையாக வேண்டும். அதுவே உண்மையான மாற்றங்களை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03 - செவ்வாய் - பங்குனி 2009

எசா 55: 10-11 திபா 34: 3-6, 15-18 மத் 6: 7-15

### செபம்

இயேசு சீடர்களுக்கு செபிக்கக் கற்றுக் கொடுத்தார். செபம் பற்றிய அவரது போதனைகளையும் வாழ்வையும் நாம் நற்செய்திகளில் காண்கிறோம். செபத்தின்போது பிதற்றல்கள் வேண்டாம் என்று எச்சரித்தார் இயேசு.

**யூதர்களின் செபம்**

உலக நாடுகளிலும் சமயங்களிலும் யூத சமய செபங்களே மிக முக்கியத்துவம் வாய்ந்தவை எனலாம். 'செயல்களைவிட செபம் மேன்மை மிக்கது' என்றார் ஓர் ராபி. செபம், செப நேரங்கள், செபத்திற்கான இடம் இவர்கள் வாழ்வில் முன்னிலை பெற்றன.

1. ***'ஷெமா':*** இது இச 6: 4-9, 11: 13-21, எண் 15: 37-41 ஆகிய மூன்று விவிலியப் பகுதிகளைக் கொண்டுள்ளது. இவை ஒவ்வொரு யூதராலும் காலை 9 மணிக்கு முன்பும் மாலை 9 மணிக்கு முன்பும் சொல்லப்பட வேண்டும். செபத்திற்கான நேரம் முடியப் போகின்றது என்றால் அவர் எங்கிருந்தாலும் அந்த இடத்திலேயே நின்று செபத்தைச் சொல்ல வேண்டும். இந்த செபங்களை பக்தியோடு செபித்தவர்கள் பலர். ஆயினும் சிலர் அதை காலப்போக்கில் வெறும் வாய்ப்பாடாக மாற்றிவிட்டனர்.

2. ***பதினெட்டு:*** பதினெட்டு சிறிய, அழகான செபங்கள் இவை. இது தொழுகைக்கூடங்களில் மிக முக்கியமான செபம். யூதர்கள் காலையும், மதியமும், மாலையும் இந்த செபங்களைச் சொல்ல வேண்டுமென்பது சட்டம். பலர் இதை புனித செபமாகக் கொண்டாலும் சிலர் இந்த செபங்களை வெறும் வாய்ப்பாடாக மாற்றிவிட்டனர்.

3. ***வாழ்வில்:*** ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் யூதர்கள் செபம் வைத்திருந்தார்கள். தம் வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நிகழ்ச்சியிலும் கடவுளின் பிரசன்னம் இருக்க வேண்டும் என்பது இவர்களது உண்மையான நோக்கம்.

இயேசு இவர்களது செப உணர்வை எதிர்க்கவில்லை. ஆனால் அந்த செபங்கள் அர்த்தமற்ற வெறும் வாய்ப்பாடுகளாக மாறியதையே இயேசு கண்டித்தார். இன்று எமது செபங்களும் தொடக்கத்தில் நல்ல நோக்கத்தோடு ஆரம்பித்தாலும் காலப்போக்கில் வெறும் வாய்ப்பாடுகளாக மாறிவிடுகின்றன. தெளிவாயிருப்பேன், செபத்தில் ஆண்டவரின் பிரசன்னத்தை உணர்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04 - புதன் - பங்குனி 2009

யோனா 3: 1-10 திபா 51: 1-2, 10-11, 16-17 லூக் 11: 29-32

### *அடையாளம்*

இயேசுவின் காலத்து மக்கள் ஓர் அடையாளத்தை அவரிடமிருந்தே கேட்டனர். இயேசு கடவுளிடமிருந்து வந்தவர் என்பதை இந்த அடையாளத்திலிருந்து அறிந்து அவரை ஏற்றுக்கொள்ளலாம் என்பது அவர்களது எண்ணம்.

### யூதர்களின் எதிர்பார்ப்பு

இயேசுவின் காலத்திலும் அவருக்குப் பின்பும் சிலர் தாமே மீட்பர் என்று மக்களை ஏமாற்றப் பார்த்தார்கள். ஆனால் உரிய காலத்தில் அவர்களது சுயநலம் வெளிச்சத்திற்கு வந்தது. பெரிய அடையாளங்களை இவர்கள் வாக்களித்தாலும் இவர்களது முயற்சி தோல்வியில் முடிந்தது.

நினிவே மக்கள் யோனாவின் செய்தி கேட்டு அதை ஏற்று செயல்பட்டு வாழ்வு பெற்றனர். கடவுளின் அடையாளமாக யோனா அங்கு வந்தார். சாலமோனின் காலத்திலும் தென்னாட்டு அரசி அவரது ஞானத்தை அறிந்து நன்மைகள் பெற அவரிடம் வந்தார். அடையாளங்களைக் கண்டவர்கள் அதை ஏற்று வாழ்வை மாற்றிக்கொண்டார்கள்.

### இயேசுவே அடையாளம்

இயேசு கடவுளின் அடையாளமாக வருவார் என்று யூதத் தலைமை ஒருபோதும் எதிர்பார்த்திருக்காது. அவரது போதனைகள், சவால்கள் நிறைந்த வார்த்தைகள் யூதத் தலைமைக்கு பெரும் தலையிடியாகவே இருந்திருக்கும். அடையாளத்தையே நம்பாதவர்கள் இவர்கள். இவர்களின் வாழ்வில் எவ்வாறு மாற்றங்களைக் காண முடியும்? இயேசுவின் போதனைகள், புதுமைகள் முற்றிலும் வேறுபட்டவையாகவே இருந்தன. அதுவும் ஓர் சிறந்த அடையாளமே. இவற்றைப் பார்த்து, உணர்ந்து, திருந்தாத மக்கள் அவரிடமிருந்து அடையாளம் பார்த்தால் அதை மறுப்பதற்கும் ஓர் காரணம் வைத்திருப்பர். எனவே இந்தத் தலைமுறைக்கு அடையாளம் கொடுக்கப்பட மாட்டாது என்றார் இயேசு. ஏனெனில் பிடிவாதக் குணமுள்ள தலைமுறை இது.

இயேசு அடையாளமாக மட்டுமல்ல கடவுளின் அன்பாக, இரக்கமாக, நற்செய்தியாக வந்தார். இதுவரைக்கும் வந்தவர்கள் கடவுளின் செய்தியைக் கொண்டுவந்தார்கள். இங்கு இயேசுவோ செய்தியாகவே வந்தார்.

இன்று நானும் இயேசுவின் செய்தியாக மாறவேண்டும். எனது வாழ்வு அன்பும் இரக்கமும் நிறைந்த வாழ்வாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05 ~ வியாழன் - பங்குனி 2009

எஸ் (இ) 4: 17k-m,r-t திபா 138: 1-3, 7-8 மத் 7: 7-12

## இறையன்பு

தந்தையின் அன்பை இயேசு இன்றைய போதனையில் ஒப்பிட்டுக் காட்டுகின்றார். ஒரு தந்தை தன் பிள்ளைக்கு நல்லதையே செய்வார். அதைவிட மேலாக தந்தையாம் இறைவன் எமக்கு மேலானதைச் செய்வார் என்பது உண்மை. இங்கு இயேசு தரும் உதாரணங்களை ஆராய்வோம்.

**அப்பம் - கல்**

அப்பம் யூத மக்களின் வாழ்வில் அன்றாட உணவு. இதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் அப்பத்தோடு கல்லை இயேசு ஒப்பிடுவதன் காரணம் என்ன? இரண்டும் தோற்றத்தில் ஒத்திருக்கின்றது. அன்று பாலஸ்தீனாவில் கடற்கரை ஓரங்களில் உள்ள சுண்ணாம்புக்கல் அப்பங்களின் வடிவிலும் நிறத்திலும் ஒத்திருந்தன. எனவே இயேசு அப்பத்தையும் கல்லையும் ஒப்பிடுகின்றார்.

**மீன் - பாம்பு**

இங்கு பாம்பு போன்ற வடிவமுள்ள 'விலாங்கு மீன்' குறிப்பிடப் படுகின்றது. விலாங்கு மீன் செதில் இல்லாத நீர் வாழ் இனம் என்பதால் அது அருவருப்பானது (காண். லேவி 11: 12). எனவே அது தூய்மையற்றது, உண்ணத்தகாதது. இயேசு மீனை அதன் தோற்றத்தில் ஒத்திருக்கும் விலாங்கு மீனோடு ஒப்பிடுகின்றார்.

**கடவுளின் பதில்**

கடவுள் எப்போதும் எமது செபங்களைக் கேட்பார். ஏனெனில் அவர் அன்புள்ள, பராமரிக்கின்ற தந்தை. ஆனால் நாம் எதைக் கேட்கின்றோம். எமது வேண்டுதல்கள் தேவையானதா, சரியானதா? கடவுள் தனது ஞானத்தின் வல்லமையால் அவர் எமக்குத் தேவையானதை, தேவையான நேரத்தில் தருகின்றார். தொடர்ந்து கேள், தேடு, தட்டு. அப்போது எமது தேவையும், நம்பிக்கையும், விடாமுயற்சியும் வெளிப்படும். செபத்தில் நிலையாக இருக்க வேண்டும். கேட்பது தாமதமானால் அல்லது கிடைக்காவிட்டால் சோர்ந்துவிடாது கடவுளின் விருப்பத்தை அறிந்துகொள்ள முயலவேண்டும்.

✝ எனது தேவைகள் என்ன? அவை உண்மையான தேவைகளா?

✝ எனது தேவைகளைப் பெற்றுக்கொள்ள நான் எடுக்கும் முயற்சிகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06 - வெள்ளி - பங்குனி 2009

எசே 18: 21-28 திபா 130: 1-8 மத் 5: 20-26

### அதிகாரம்

இறைவனின் சட்டம் பற்றிய முரணான கருத்துகள் தெரிவிப்பது என்பது ஒருவர் தனது வாழ்வோடு விளையாடுவதைப் போன்றது. அந்தளவிற்கு கடவுளின் சட்டம் யூதர்களால் புனிதமானதாகவும் மாற்ற முடியாததாகவும் கருதப்பட்டது. இயேசுவோ தனது மலைப்பொழிவுப் போதனைகளில் அதிகாரத்தோடு பேசினார்.

### யூதர்களுக்கு சட்டம்

யூதர்களுக்கு சட்டம் என்பது புனிதமானது, தெய்வீகமானது. அது மோசே மூலமாக கடவுளால் கொடுக்கப்பட்டது. சட்டங்களின் முக்கியத்துவம் பற்றிப் பல யூத அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதை மனித சக்தியால் மாற்றவோ, மறுக்கவோ முடியும் என்று யாரும் கூறியதில்லை. மக்கள் மரியாதை செலுத்துவதற்காகச் சட்டங்கள் அடங்கிய சுருள்கள் வைக்கப்பட்டுள்ள பேழையை மக்களைச் சுற்றி பக்தியோடு பவனியாகக் கொண்டுவருவது தொழுகைக் கூடத்தில் நடைபெறும் வழிபாடுகளில் முதல் பணியாகும். இதுவே சட்டம் பற்றிய யூதர்களின் மனநிலையாகும்.

### இயேசுவின் அதிகாரம்

இயேசு அதிகாரத்தோடு பேசியதைக் கண்டு பலர் மலைத்துப் போனார்கள் (காண். மாற் 1: 22, மத் 7: 28,29). இதுவரை யாரும் இவ்வளவு அதிகாரத்தோடு பேசியதில்லை என்றனர். இயேசுவோ மோசே கொடுத்த சட்டங்களைக் குறிப்பிட்டு அதை மறுத்துப் பேசியதோடு மட்டுமல்லாமல் அதற்குப் பதிலாக தனது போதனையையும் கொடுத்தார் (காண். 5: 21, 27, 33, 38, 43). யூத உலகம் மிகப் புனிதமானது என்று கருதிய நூலிலும் பூரணமற்ற நிலையைக் குறித்துக் காட்டும் உரிமையை அவர் வலியுறுத்தினார். அதே அதிகாரத்தைக் கொண்டே இயேசு பாவங்களை மன்னித்தார், பேய்களை ஓட்டினார், நோய்களைக் குணமாக்கினார். அவரது தனித்துவமான போதனையும் வாழ்வும் மக்களை இறைத்தந்தையிடம் அழைத்து வந்தன.

☆ என்னைச் சுற்றி நடைபெறும் சம்பவங்களில் உள்ள அநீதிகளை அல்லது குறைகளை சுட்டிக்காட்டி அடுத்தவரை வழிநடத்த என்னால் முடியுமா?

☆ என்னில் நான் காணும் குறைகளை இனம்கண்டு அவற்றை அகற்றிட நான் மனதார முயலுகின்றேனா? சிந்தித்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 - சனி - பங்குனி 2009

இச 26: 16-19 திபா 119: 1-2, 4-5, 7-8 மத் 5: 43-48

### அன்பு

அன்பு பற்றிய செய்திகள் பல இருந்தாலும் ஒழுக்க வாழ்வுக்கு இயேசு தரும் மிகச் சிறந்த போதனை இதுவென்று கூறுவார்கள் விவிலிய அறிஞர்கள். நற்செய்தியில் இயேசு குறிப்பிடும் அன்பு என்ன என்பதை ஆராய்வோம்.

**பகைவரிடமும் அன்பு**

அன்பு பல வடிவங்களைக் கொண்டுள்ளது. பெற்றோர்-பிள்ளைகள் அன்பு, கணவர்-மனைவிக்கிடையே அன்பு, நட்பை மையமாகக் கொண்ட அன்பு, பகைவருக்குமான அன்பு என்று அன்பின் வடிவங்களை நாம் எண்ணிவிடலாம்.

உங்கள் பகைவருக்கும் அன்பு செய்யுங்கள் என்று இயேசு கூறியது பெரும் சவாலை முன்வைக்கின்றது என்பது உண்மை. கிறிஸ்தவர் எமக்கே வாழ்ந்துகாட்ட இந்த செய்தி. யுத்தம் வேண்டாம், சண்டை வேண்டாம் என்று கூறுவது இலகு. ஆனால் அடுத்தவரோடு நல்ல உறவை வளர்த்துக் கொள்வது கடினமானது! இது பெரும் சவாலைக் கொடுக்கின்றது. என் பகைவரிடமும் அன்பு செய்ய என்னால் முடியுமா? அந்த பக்குவத்திற்கு நான் என்னை வளர்க்க வேண்டும். நாம் அன்பு செய்பவரை அன்பு செய்வதென்பது எமக்கு இயல்பாகவே வரும் ஒன்று. இது எம் இதயத்திலிருந்து ஊற்றெடுப்பது. ஆனால் பகைவரையும் அன்பு செய்வதென்பது எமது மனோசக்தி, உறுதிப் பாட்டிலிருந்து வருவதாகும்.

**துன்புறுத்துவோருக்காக வேண்டல்**

ஆண்டவர் தரும் சவாலை செயல்படுத்த இது நல்ல சந்தர்ப்பம். என் பகைவருக்காக என்னால் செபிக்க முடியுமா? ஒருவரை வெறுத்துக்கொண்டு அவருக்காக யாரும் செபிக்க முடியாது. கடவுள் முன்னிலையில் அது உண்மையான செபமாக மாறாது. வெறும் வெளிவேடமாகவே மாறிவிடும். எனவே எமது கசப்புணர்வுகளைக் களைய அவர்களுக்காக செபிப்பதே சிறந்த வழி. கிறிஸ்தவர் எமக்கு ஆண்டவரால் தரப்பட்ட கொடை இது.

† எனது பகைவர்கள் யார் என்பதை இனம்காண வேண்டும்.

† இவர்களை நிரந்தரப் பகைவராகக் கொண்டிருப்பதால் எனக்கென்ன இலாபம்?

† பகைவரை அன்பு செய்து, அவர்களுக்காக செபிப்பதால் வரும் நன்மைகளை உணர்ந்து கிறிஸ்துவின் அன்பை வாழ்ந்து காட்டுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவக்காலம் 2ம் ஞாயிறு
## 08 - பங்குனி 2009

*தொநூ 22: 1-2, 9-13, 15-18 திபா 116: 10, 15-19 உரோ 8: 31-34 மாற் 9: 2-10*

### ***உறுதிப்பாடு***

இன்றைய ஞாயிறு வாசகங்களில் இரு பிள்ளைகளின் கீழ்ப்படிதலைப் பார்க்கின்றோம். முதல் மகன் ஆபிரகாம் இறைவனின் கட்டளைக்கும் பணிந்து தனது ஒரே மகன் ஈசாக்கைப் பலியிடத் துணிகின்றார். இரண்டாவது, இயேசு தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் குறியாக இருந்து தந்தையின் ஒப்புதலைப் பெறுகின்றார். வாசகங்கள் தரும் செய்திகளைத் தியானிப்போம்.

### ஆபிரகாமின் விசுவாசம்

விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ஆபிரகாம். இறைவன் தனது மீட்புத் திட்டத்தில் ஓர் புதிய இனத்தை உருவாக்க ஆபிரகாமைத் தெரிந்தெடுத்தார். ஆபிரகாமோ இறைவனின் வாக்குறுதிகளில் முழுமையான நம்பிக்கை வைத்திருந்தார்.

அன்று பிறமத மக்கள் மனிதரைப் பலியிடுவதை வழமையாகக் கொண்டிருந்தனர். கடவுளோ இச்செயலைக் கடுமையாகக் கண்டித்துள்ளார் (லேவி 20: 1-5). அவரது பார்வையில் இது பெரிய பாவம். ஆனாலும் ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட வேண்டுமென ஏன் கட்டளையிட்டார்? ஈசாக்கைக் கொல்ல வேண்டுமென்பது கடவுளின் விருப்பமல்ல. ஆனால் ஆபிரகாம் தன் ஒரே மகன் ஈசாக்கை தனதுள்ளத்தில் பலியிடவேண்டும். இதன் மூலமாக ஆபிரகாம் கடவுள் மீது கொண்டுள்ள அன்பும் நம்பிக்கையும் உறுதி செய்யப்படும் என்பது கடவுளின் நோக்கமாக இருந்திருக்கலாம். ஆபிரகாமின் நற்பெயரையும் நம்பிக்கையையும் உறுதி செய்ய இது நடைபெற்றது.

### கடவுளுக்குக் கீழ்ப்படிதல்

கடவுளின் கட்டளையை தயக்கமின்றி நிறைவேற்றத் துணிந்தவர் ஆபிரகாம். தன் மகன் ஈசாக் மூலமாக தனது இனத்தைப் பெருக்குவேன் என்று கூறியவர் கடவுள். மேலும் ஈசாக் தவமிருந்து பெற்ற மகன். ஆனாலும் கட்டளை தருபவர் கடவுள். கடவுளுக்குக் கீழ்ப்படிதல் என்பது பல இழப்புகளை ஏற்படுத்தலாம். ஆனால் அதன் விளைவாகக் கடவுளிடமிருந்து வரக்கூடிய நன்மைகள் நிறைவானது, ஒப்பிட முடியாதது. ஆபிரகாமும் தயங்காமல் கீழ்ப்படிந்ததால் கடவுளின் ஆசீரை நிறைவாகப் பெற்றார். அதனால் அவரது இனம் பல நன்மைகள் அடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுவின் கீழ்ப்படிதல்

இறைத்தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவது இயேசுவின் முன்னுரிமையாக இருந்தது. இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. தனது கீழ்ப்படிவுக்கு எதிரான தடைகள் அனைத்தையும் இயேசு வென்றெடுத்தார். மக்கள் அவரை அரசராக்க வேண்டுமென விரும்பி செயல்படத் தொடங்க இயேசு அவர்களை விட்டகன்றார் (காண். யோவா 6: 15). தனது பாடுகள் மரணத்திற்குத் தடையாக வந்த பேதுருவைக் கடிந்துகொண்டார் (காண். மாற் 8: 33). இவ்வாறு தந்தையின் விருப்பத்தை அறிந்து செயல்பட இயேசு ஒருபோதும் தயங்கியதில்லை. அதேவேளை இயேசு தனது பாடுகள், சாவை முன்கூட்டியே அறிந்திருந்தார். எனவே அவரது போதனைகள், முடிவுகள் சரியானவையா என்று பரீட்சித்துப் பார்க்க வேண்டிய நிலையிலும் அவர் இருந்திருக்கலாம். இது இயல்பாகவே யாருக்கும் வரக்கூடிய நிலை. ஏனெனில் இயேசு எதிர்கொள்ள இருப்பது கைது, ஏளனம், தீர்ப்பு, சாட்டையடிகள், சிலுவை, சிலுவை மரணம். இயேசுவின் முடிவு சரியானதா?

## விண்ணேற்பு தரும் உண்மைகள்

சிலுவையை ஏற்பதற்கு இயேசு எருசலேம் நோக்கிச் செல்ல வேண்டும். எனவே தனது தெரிவும் முடிவும் சரியானவையா என்று அவர் உறுதி செய்யவும் வேண்டும். இது எவ்வாறு நிறைவேறியது?

**1. *மோசே, எலியா:*** மோசே சட்டங்களையும் எலியா இறைவாக்குகளையும் அடையாளப்படுத்தினார்கள். இறைவனின் மீட்புத் திட்டத்தில் திட்டமிட்ட படியே அனைத்தும் நடைபெறுகின்றன என்பதை இவர்கள் உறுதிப்படுத்தி இருப்பார்கள். தாம் தொடங்கிவைத்தவை இயேசுவில் முழுமையடைகின்றன என்பதைப் பார்த்து இவர்கள் பூரிப்படைந்திருப்பார்கள்.

**2. *கடவுள்:*** இறைத்தந்தை இயேசுவோடு பேசினார். தனது விருப்பம் நிறைவேற வேண்டும் என்பது ஒருபோதும் இயேசுவின் இலக்காக இருக்க வில்லை. மாறாக, அவர் தந்தையின் விருப்பத்தையே நாடினார். தந்தையோ தனது ஒப்புதலை நிறைவாகக் கொடுத்தார். இது இயேசுவிற்கு மட்டுமல்ல, சீடர்களுக்கும் சிறந்த வழிகாட்டலாக அமைந்திருக்கும் என்பது தெளிவு.

## எனது கீழ்ப்படிவு

✝ எனது வாழ்விற்கு இறைத்தந்தையின் விருப்பம் என்ன என்று அறிய ஆர்வத்தோடு முயன்றுள்ளேனா?

✝ இறைத்தந்தை என்னையும் பார்த்து 'இவரே என் அன்பு மைந்தன். இவருக்கு செவிசாயுங்கள்' என்று கூறுமளவிற்கு என்வாழ்வு அமையட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 - திங்கள் - பங்குனி 2009

தானி 9: 4-11 திபா 79: 8-9, 11, 13 லூக் 6: 36-38

## தீர்ப்பு

தீர்ப்பு, கண்டனம், கொடுத்தல் பற்றிய போதனைகளை இன்றைய நற்செய்தியில் நாம் பார்க்கிறோம். இன்று தீர்ப்பிடுதல் பற்றிய போதனையையும் இரக்கம் தரும் நன்மைகளையும் தியானிப்போம்.

### தீர்ப்பிடுதல் கடினமானது

தீர்ப்பிடுதல் ஏன் கடினமானது? இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

1. தீர்ப்பிடுபவரைப்பற்றிய முழுமையான தகவல்களை நாம் ஒருபோதும் பெற்றுக் கொள்ள முடியாது. அடுத்தவர் சூழ்நிலைக்குள் செல்லாமல் அவரைப் பற்றித் தீர்ப்பிடக் கூடாது என்று ஹில்லல் எனும் புகழ்பெற்ற யூத ராபி கூறுவார். அடுத்தவர் பெறும் சோதனையின் அளவை யாராலும் கணிக்க முடியாது. நல்ல குடும்ப சூழ்நிலையில் வளர்ந்த ஒருவர் ஒழுக்கமற்ற சமூகத்தில் வாழும் ஒருவரின் உள்ளுணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியாது. சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள், மனநிலைகள் மாறலாம்.

2. தீர்ப்பிடும்போது ஒருவர் நூறு வீதம் பாரபட்சமற்றவராக இருக்க முடியாது. மனித பலவீனம், சுபாவம், அனுபவம் இதற்குக் காரணமாகும். கிரேக்கத்தில் மிக முக்கிய வழக்குகள் நடைபெறும்போது அது இருளில் நடைபெறுமாம். ஏனெனில் குற்றவாளியைப் பார்த்து நடுவர்கள் பாரபட்சம் காட்டக்கூடாது என்பதற்காக.

### இயேசுவின் போதனை

தீர்ப்பிடுவது கடவுளின் செயல் என்பது இயேசுவின் போதனை. நானும் தீர்ப்பிடேன் என்று விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணிடம் கூறி அவளுக்கு வாழ்வு கொடுத்தவர் இயேசு. இவ்வாறு தீர்ப்பிட வந்தவர்களுக்கு நல்ல பாடம் புகட்டினார் அவர்.

இன்று யாரையும், எந்த சூழ்நிலையிலும் தீர்ப்பிட நாம் துணிந்து விடுகின்றோம். ஆனால் எமது தீர்ப்பிடும் மனநிலை பற்றிச் சிந்தித்துப் பார்க்க அழைக்கின்றது இந்தத் தவக்காலம்.

☞ நான் யார் யாரையெல்லாம் தீர்ப்பிட்டுள்ளேன் என்று பட்டியலிட்டுப் பார்ப்பேன். எனது தீர்ப்புகள் நியாயமானவையா?

☞ தீர்ப்பிடுவதைவிட அடுத்தவரைப் புரிந்துகொள்வதால் வரக்கூடிய நன்மைகளை உணர்ந்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 – செவ்வாய் - பங்குனி 2009

எசா 1: 10, 16–20 திபா 50: 8–9, 16–17, 21, 23 மத் 23: 1–12

**சட்டம்**

சட்டம் பற்றிய இயேசுவின் கணிப்பை இன்றைய நற்செய்தியில் வாசிக்கிறோம். அது மக்களுக்கு பாரமாக இருக்க மக்களை எச்சரிக்கிறார் இயேசு.

### சட்டத்தின் முக்கியத்துவம்

சட்டம், விசுவாசத்தின் முக்கியத்துவத்தை பரிசேயர் எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளனர். கடவுள் தன் சட்டத்தை மோசேக்குக் கொடுக்க, மோசே யோசுவாவிற்குக் கொடுக்க, யோசுவா யூத சமூகப் பெரியோருக்குக் கொடுக்க, அவர்கள் இறைவாக்கினர்க்கும் இறைவாக்கினர்கள் சதுசேயர், பரிசேயர்களுக்கும் கொடுத்து வந்துள்ளனர்.

இயேசுவோ இந்த சட்டங்களை வெறுக்கவில்லை. மாறாக, மக்கள் இந்த சட்டங்களை முறையாகப் பின்பற்றவேண்டுமென்றே கற்பிக்கிறார். கடவுள் கொடுத்த பத்துக் கட்டளைகளை இரண்டாக வகுக்கலாம்.

1. ***பக்தி:*** கடவுளுக்கு, அவரது பெயருக்கு, அவரது நாளுக்கு, அவர் கொடுத்த பெற்றோருக்குக் கொடுக்க வேண்டிய பக்தி இது.
2. ***மரியாதை:*** மனித உயிருக்கு, மனிதருக்கு, மனிதரின் சொத்துக்கு, மனிதரின் பெயருக்கு, எனக்கு உரிய மரியாதை இது.

இவை நிலையான சட்டங்கள். சதுசேயரும் பரிசேயரும் இந்த பக்தியையும், உயரிய மரியாதையையும் போதிக்கும்போது அது சரியானவையே.

### பரிசேயர், சதுசேயரின் தவறு

இவர்கள் சமயத்தை சட்டங்களும் சம்பிரதாயங்களும் நிறைந்த ஒன்றாக மாற்றிவிட்டார்கள். இவற்றைச் சுற்றி வேலிபோட்டு மக்களுக்கு சமயத்தை பெரும் சுமையாகவே மாற்றிவிட்டார்கள். மனிதரை கடவுளிடம் கொண்டு செல்லும் சட்டங்கள் மக்கள் சுமக்க வேண்டிய பெரும் சுமையாக மாறிவிட்டது. எனவே இந்த சமயம் இயேசுவின் பார்வையில் ஓர் கேள்விக்குறியே! எனவே தான் இவர்கள் சொய்வதுபோல செய்ய வேண்டாம், சொல்வது போல செய்யுங்கள் என்றார் இயேசு.

✝ இன்று நான் சமயத் தலைவர்களையும் அவர்களது குற்றங்களையும் குறைகூறுகின்றேனா?

✝ அவ்வாறு செய்யாமல் நான் வாழ்ந்துகாட்டினால் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 - புதன் - பங்குனி 2009

எரே 18: 18-20 திபா 31: 4-5, 13, 14-15 மத் 20: 17-28

***முரண்பாடு***

இயேசு தனது பாடுகள் மரணம் பற்றி முன்னறிவிக்க அவரைச் சூழ உள்ளவர்களோ வேறு மனநிலையோடு இயேசுவின் செய்தியை அணுகினார்கள். இவை தரும் செய்திகள் என்ன?

### இயேசுவின் பாடுகள் மரணம்

காலமும் நேரமும் நெருங்க நெருங்க இயேசுவினுள் பல போராட்டங்கள். தன் நண்பர்களின் விசுவாசமின்மை, யூதத் தலைமையின் அநீத தீர்ப்புகள், உரோமையரின் சாட்டையடிகள், மக்களின் வசைமொழிகள், அவமானங்கள், சீர வாதைகள், சிலுவை, முள்முடி, சிலுவை மரணம் போன்ற எண்ணங்கள் அவரது உள்ளத்தையும் உடலையும் வதைத்திருக்கும். அதைவிட சீடர்கள் தனது இறுதிக்கால வாழ்வைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பது அவரது ஆதங்கம். இந்நிலையில் அவரைச் சுற்றியுள்ளவர்களின் மனநிலை என்ன?

### முதன்மையான இடம்

யாக்கோபு, யோவான் இருவரும் இயேசுவின் நெருங்கிய உறவினர்கள். இவர்களது தாய் இயேசுவிடம் ஓர் முக்கிய விண்ணப்பத்தை முன்வைக்கிறார். இது இவரது, ஏனைய சீடர்களின் மனநிலையை வெளிப்பத்துகின்றது. இயேசுவின் இவ்வுலக வருகைக்கான உண்மை நோக்கங்களை இவர்கள் அறிந்திருக்கவில்லை. எனவே தமது எதிர்காலத்தைப் பற்றியே கருத்தாயிருந்தார்கள் இவர்கள். இயேசுவோ அதையும் கடந்து பொறுமையோடு அவர்களை வழிநடத்தினார். பணி, தொண்டு, சீடத்துவம், தலைமைத்துவம் என்றால் என்ன என்பதை உலக சம்பவங்களையே ஆதாரமாக வைத்து அவர்களை வழிநடத்தினார் அவர். அந்த வேளையில் அவர்கள் அதை உணராதிருந்தாலும் காலப்போக்கில் அவர்கள் உணர்ந்துகொண்டனர். இந்த முரண்பாடுகள் இயேசுவை பெரிதும் பாதித்திருக்கும்.

✝ கிறிஸ்தவத்தில் தலைமைத்துவம் என்றால் என்ன என்பதை நான் அறிந்திருக்கின்றேனா? பணியாளராக மாற தயாராயுள்ளேனா?

✝ பாடுகள் மூலமே விடுதலை, மீட்பு உண்டு என்பதை உணர்ந்து வாழ்வின் சவால்களை ஏற்க நான் முன்வருகின்றேனா?

✝ ஆண்டவரின் தொண்டராய் எப்போதும் வாழ்ந்திடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 – வியாழன் - பங்குனி 2009

எரே 17: 5–10  திபா 1: 1–4, 6  லூக் 16: 19–31

### செல்வம்

செல்வரும் இலாசரும் உவமை தரும் பாடங்கள் பல. ஒவ்வொரு பகுதியும் ஒரு செய்தியைத் தாங்கி வருகின்றது. ஆராய்வோம்.

**செல்வர்**

இவர் அணிந்த செந்நிற ஆடை தலைமைக் குருக்கள் அணியும் ஆடை. இது இன்றைய பெறுமதியில் ஐந்தாயிரம் தொடக்கம் ஏழாயிரம் ரூபாவாகும். அன்று ஒருவர் ஒரு நாளைக்கு பெறும் ஊதியம் 65 ரூபா. செல்வர் தினமும் விருந்துண்டார். தினமும் விருந்துண்டார் என்பதே அவர் 4வது கட்டளையை மீறினார் என்பதைக் குறிக்கின்றது. இந்த சட்டம் ஏழாம் நாள் வேலை செய்வதை தடைசெய்வதோடு அல்லாமல் ஏனைய ஆறு நாட்களும் வேலை செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது (காண். விப 20: 9). அன்று ஆறு நாட்களும் மாடாய் உழைக்கும் பாமர மக்கள் வாரத்திற்கு ஒரு நாள் நல்ல உணவு சாப்பிட்டாலே அது அவர்களது பாக்கியம்.

**இலாசர்**

இவர் எதிர்பார்த்தது செல்வரின் மேசையிலிருந்து விழும் துண்டுகள் மட்டுமே. ஏது இந்த துண்டுகள்? அன்று மக்கள் உண்பதற்கு கத்தி, கரண்டிகளைப் பாவிக்கவில்லை. கையையே பயன்படுத்தினார்கள். பெரிய செல்வந்தர்கள் உண்டபின் தமது கைகளை பாண் துண்டுகளால் துடைத்து பின் எறிந்துவிடுவார்கள். அதுபோன்ற துண்டுகளையே இலாசர் எதிர்பார்த்து தன் பசியை ஆற்ற விரும்பினார்.

செல்வர் செய்த தப்பென்ன? அவர் இலாசரை வெளியே துரத்தவில்லை, அவமானப்படுத்தவில்லை, கொடூரமாக நடாத்தவும் இல்லை. ஆனால் இந்த செல்வர் இலாசரின் நிலை அறிந்தும் எவ்வித உணர்வும் இல்லாமல், செல்படாமல் இருந்ததே இவர் செய்த பெரும் குற்றமாகக் கருதப்படுகின்றது.

இது நாளாந்தம் நாம் சந்திக்கும் சம்பவங்களாகும். பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் ஏழைகளாக இருப்போர் பலரை நாமும் சந்திக்கிறோம். இவர்கள் பற்றிய எமது மனநிலை என்ன?

✝ அடுத்தவர் தேவையறிந்து அவர்களுக்கு உதவும் மனநிலை எனக்குண்டா?

✝ திறந்த மனதோடு அடுத்தவர்க்கு உதவுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 – வெள்ளி - பங்குனி 2009

தொநூ 37: 3-4, 12-13, 17-28 திபா 105: 16-21 மத் 21: 33-43, 45-46

## பொறுப்பு

கொடிய குத்தகைக்காரர் உவமையில் கடவுள், மக்கள், இயேசுவின் தன்மைகள் வெளிப்படுகின்றன. திராட்சைத் தோட்டப் பணிகள், குத்தகைக்கு விடப்படுதல் என்பது பாலஸ்தீனாவில் வழமையாக நடைபெறும் விடயம். இயேசுவோ இந்த உவமையின் மூலமாக யூதத் தலைவர்களினதும், மக்களினதும் தவறுகளையும் பொறுப்பையும் வலியுறுத்துகின்றார்.

### கடவுள் பற்றியது

கடவுள் நம்பிக்கையோடு யூதத் தலைவர்களிடம் பொறுப்பைக் கொடுத்தார். அவர் பொறுமையோடு காத்திருந்தார். பல இறைவாக்கினர்கள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் கடவுள் மக்களின் மனமாற்றத்திற்காகக் காத்திருந்தார். கடவுளின் தீர்ப்பும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. அவர் கொடியவர்களிடமிருந்து காணியைப் பிடுங்கி வேறு பொறுப்புள்ள தோட்டத் தொழிலாளரிடம் கொடுத்துவிடுவார்.

### மக்கள் பற்றியது

இந்த திராட்சைத் தோட்டம் அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது. வேலி, பிழிவுக்குழி, காவல் மாடம் என்று அனைத்து வசதிகளும் இருந்தன. இது மக்களுக்குக் கிடைத்த பாக்கியமே. அடுத்து மக்களுக்கு இருந்த சுதந்திரம். இந்த தொழிலாளர்கள் தமது விருப்பப்படி செயல்பட நிலக்கிழார் விட்டுவிட்டார். கடவுளும் மக்களுக்கு பணியைக் கொடுத்து சுதந்திரமாகச் செயல்படவும் தமது செயல்பாடுகளுக்குக் கடைசியில் கணக்குக் கொடுக்கவும் சுதந்திரம் கொடுத்தார்.

### இயேசு பற்றியது

இயேசுவே திராட்சைத் தோட்ட சொத்துக்குரியவர். இயேசுவிற்கு முன்பு வந்த இறைவாக்கினர்கள் பணியாளர்களே. ஆனால் இயேசுவோ உரிமையாளரின் மகன். இயேசுவின் அர்ப்பணமும் இங்கு வலியுறுத்தப்படுகின்றது. தனக்கு யூதத் தலைமையால் வரவிருக்கும் மரணத்தையும் இயேசு அறிந்து எதிர்பார்த்திருந்தார்.

✝ இந்த உவமையோடு ஒப்பிடும்போது நான் எந்த நிலையில் உள்ளேன்?
✝ எனது அழைப்பு, பொறுப்பை உணர்ந்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீக் 7: 14-15, 18-20 திபா 103: 1-4, 9-12 லூக் 15: 1-3, 11-32

## இறையன்பு

லூக்கா நற்செய்தி 15ம் அதிகாரம் முழுவதும் நற்செய்திக்குள் ஓர் நற்செய்தி என்றழைக்கப்படுகின்றது. உண்மை சூழ்நிலையிலிருந்து இந்த அதிகாரம் உருவாகியுள்ளது. அதன் விபரங்களைப் பார்ப்போம்.

### பாவிகள் பற்றி யூதத் தலைமை

கடவுளின் கட்டளைகளுக்கு ஒவ்வாத செயல்களைச் செய்வோரையும், பாவிகள், வரி தண்டுவோரையும் யூதத் தலைமை ஒதுக்கியே வைத்திருந்தது. இவர்களுக்கு திருமணத்திற்குப் பெண் கொடுப்பது ஆபத்தில் முடிந்துவிடும், இவர்களுக்கு பணம் கொடுக்கக் கூடாது, சான்றுகள் பெறக்கூடாது, இரகசியம் பகிரக்கூடாது, அனாதைக்குப் பாதுகாவலராக நியமிக்கக் கூடாது, பயணத்தில் துணைக்குச் செல்லக் கூடாது என்று பல சட்டங்கள். ஒரு பரிசேயர் இவர் களது வீட்டில் விருந்திற்குப் போகவும் கூடாது, விருந்திற்கு அழைக்கவும் கூடாது.

இந்நிலையில் இயேசு பாவிகள் வீட்டில் தங்குகிறார், உணவருந்துகிறார் என்பது யூதத் தலைமையால் நம்பவே முடியாத ஓர் விடயமாகும். மனம் திரும்பும் பாவியைக் குறித்து விண்ணகத்தில் மகிழ்ச்சி உண்டாகும் என்பதற்குப் பதிலாக ஒரு பாவி கடவுள் முன்னிலையில் அழிக்கப்படுவது குறித்து விண்ணகத்தில் மகிழ்ச்சி உண்டாகும் என்றே யூதர் கூறுவர்.

### பாவிகள் பற்றி இயேசு

பாவிகள் பற்றிய எதிர்மறையான மனநிலை கொண்டிருந்த யூதத் தலைமைக்கு இயேசு காணாமற்போன ஆடு, திராக்மா, மகன் உவமைகளைக் கூறி இறைவனின் மனநிலையை வெளிப்படுத்தினார். தவறுகின்ற பாவி ஒருவராக இருந்தாலும் இறைவன் கண்முன்னால் அவரும் புதுவாழ்வு பெற வேண்டியவர். ஒருவர்தானே என்பது எமது மனநிலையாக இருந்தாலும் அவரும் இறைவனுக்கு முக்கியமானவரே. மனம்மாறி அவர் திரும்பும்போது ஏற்படும் மகிழ்ச்சியும் மிக முக்கியமானதே.

☞ தவறும் பாவி குறித்த எனது மனநிலை என்ன? அவர் தண்டனை பெறட்டும் என்பதா அல்லது அவர் மனம்மாற என்னால் முடிந்த முயற்சியை செய்ய வேண்டும் என்பதா எனது மனநிலை?

☞ மனமாற்றத்தின் கருவியாக மாறி வாழ்வு கொடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவக்காலம் 3ம் ஞாயிறு
## 15 - பங்குனி 2009

விப 20: 1-17 திபா 19: 7-10 1கொரி 1: 22-25 யோவா 2: 13-25

**கோவில்**

கடவுள் தந்த கட்டளைகள் பல. மக்கள் இதை முறையாக, அவை தரப்பட்டதன் உள் நோக்கத்தை உணர்ந்து கடைப்பிடித்தார்களா என்று சிந்திக்கத் தூண்டுகின்றன வாசகங்கள். இயேசுவிற்கும் பரிசேயர், சட்ட வல்லுனர்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளும் சட்டங்களையே மையமாகக் கொண்டிருந்தன.

**சட்டங்களின் பின்னணி**

இஸ்ரயேல் இனம் கடவுளின் இனம். கடவுள் அந்த இனத்தை தனது விருப்பத்திற்கேற்ப வடிவமைக்க முயன்றார். அவர்கள் இதுவரை எகிப்து நாட்டில் அடிமைகளாக வாழ்ந்தாலும் பல அந்நிய சட்டங்கள், வாழ்க்கை முறை, கலாசாரங்களால் கவரப்பட்டே வாழ்ந்து வந்துள்ளனர். இந்நிலையில் இவர்களது வாழ்வு இறைவனின் சிந்தனையோடு இணைந்து போக சட்டங்கள் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகியது.

சட்டங்களின் நன்மைகளை அறிந்து நடைமுறை வாழ்வில் அவற்றைக் கடைப்பிடித்து இஸ்ரயேலர் தூய வாழ்வுக்கு இட்டுச் செல்லப்பட வேண்டும். தமது நாளாந்த உறவுகள் மலர வேண்டும், மக்கள் பொறுப்போடு தமது கடமைகளையும் நாளாந்த வேலைகளையும் செய்ய வேண்டுமென்பதும் கடவுளின் திட்டமாகும்.

இயேசுவின் காலத்து மக்களும் கடவுளின் சட்டத்தை முறையாகப் புரிந்து கொள்ளவில்லை. சட்டங்களைக் கடைப்பிடித்தால் இந்த உலகிலும் மறுவுலகிலும் செல்வங்களைப் பெறலாம் என்று எண்ணி செயல்பட்டார்கள். கடவுளின் அந்நிய ஆதிக்கத்திலிருந்தும் இயற்கை அழிவுகளிலிருந்து பாதுகாப்பையும் பெறலாம் என்றே எண்ணினார்கள். கடவுளின் அன்பு எனும் நிலையைவிட இவர்களுக்கு சட்டமே இலக்காகியது.

எகிப்தில் பல தெய்வ வழிபாடுகள் இருந்த சூழ்நிலையிலிருந்து வந்தவர்கள் யூதர்கள். 'கடவுளை வழிபடு' என்றால் அது அவர்களுக்குப் புதிதல்ல. ஆனால் 'என்னை மட்டுமே வணங்குவாயாக' என்ற கட்டளை கொடுக்கப்பட்டபோது அது இலகுவாக இருக்கவில்லை. இந்த கட்டளை இவர்களுக்குப் புதிதாக இருந்தது. ஆயினும் தம்மை விடுவித்த கடவுளில் நம்பிக்கை வைத்து இவர்கள் செயல்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எருசலேம் கோவில்

கோவில் என்பது யூதர்களின் உயிர் நாடி. இதுவே அவர்களது சமயத்தின் அடையாளம். ஆனால் அதே கோவில் பல முறைகேடுகளுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாகியிருந்தது. பணமும் அதிகாரமும் சிலரது கைகளில் மட்டும் வந்துவிட கோவில் மாசுற்றதாகியது. திருயாத்திரைக்கென்று வந்த மக்களிடமிருந்து பெருந்தொகையான வரியை கோவில் அதிகாரிகள் அறவிட்டார்கள். வியாபாரங்களுக்கு பெரிய கூலியையும் வசூலித்தனர். இவ்வாறு சிலருடைய பொருளாசைகளால் கோவிலும் தூய்மையற்றதாக விளங்கியது. எனவே கடவுளின் செப இல்லம் கள்வரின் குகையாக மாறியது. இந்நிலையில் இயேசு வியாபாரிகளை விரட்டிய சம்பவம் ஆலயத்தை மாசுபடுத்தியதற்கு கண்டனமாகவே அமைந்திருந்தது. இது பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினரின் செயலுக்கு ஒப்பிடப்படுகின்றது (காண். எரே 7: 11, செக் 14: 21, மலா 3: 1).

### புதிய கோவில் கட்டப்படல்...

'இந்தக் கோவிலை... மூன்று நாளில் இதைக் கட்டி எழுப்புவேன்' எனும் இயேசுவின் வார்த்தைகள் பல எதிர்பார்ப்புகளுக்கு அடையாளமாக விளங்குகிறது. எசே 40-46 அதிகாரங்களில் கோவிலைக் கட்டுவதற்குத் தேவையான ஆலோசனைகள் பல எதிர்பார்ப்புகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. அதே பின்னணியில் இயேசுவின் வார்த்தைகளைப் பார்க்க வேண்டும். இயேசு இதை நிலைவாழ்விற்கான எதிர்பார்ப்பாக மாற்றி தனது உடலை அந்த கோவிலாகக் குறித்துக் காட்டுகின்றார். இதுவே ஆவியிலும் உண்மையிலும் நாம் வழிபடவிருக்கும் கோவிலாகும் (யோவா 4: 23). உண்மையிலும் ஆவியிலும் வழிபடவிருக்கும் இடம் புதிய கோவிலாகும். எனவே பழைய கோவில் அழிக்கப்பட வேண்டும். புதிய கோவில் உருவாக வேண்டும். அந்த கோவில் இயேசுவின் உடலே (யோவா 2: 21).

இவ்வாறு கற்களால் கட்டப்பட்ட கோவில் அழிந்து இயேசு எனும் புதிய கோவில் எழவேண்டும். இயேசு இறந்து மூன்றாம் நாளில் இது நடைபெறும். அப்ப இரசத்தோடு கொண்டாடப்படும் நற்கருணை விருந்து இந்த புதிய வழிபாட்டின் நிரந்தர அடையாளமாகும்.

☆ இன்று இறைவனை வழிபட கோவில்கள் தேவை. ஆனால் அதையும் கடந்து ஆண்டவர் எனது உள்ளத்தில் வாழ்கிறார், நானும் அவரது உள்ளத்தில் வாழ வேண்டும் எனும் உண்மையையும் நாம் புரிந்தாக வேண்டும்.

☆ கல்களால் கட்டப்பட்ட கோவிலோ உள்ளத்தால் கட்டப்பட்ட கோவிலே அனைத்தும் தூய்மையாக வைத்திருக்க முயல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 - திங்கள் - பங்குனி 2009

2அர 5: 1-15 திபா 42: 1-2, 43: 3-4 லூக் 4: 24-30

### தடைகள்

பணிவாழ்வில் ஒருவருக்கு வரக்கூடிய தடைகள் பற்றிய விழிப்பை இன்றைய நற்செய்தி தருகின்றது. நன்மை செய்யப் போனால் இதுபோன்ற சவால்களை சந்திக்க சக்தி தருகிறார் இயேசு.

### இயேசுவிற்குத் தடைகள்

இயேசுவை ஊரார் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. அவரை மரியா யோசேப்புவின் மகன் என்றும் தமது ஊராகிய நாசரேத்தைச் சேர்ந்தவர் என்றுமே பார்த்தனர். இந்த எண்ணமும் மனநிலையும் அவரது இறைவாக்கின் பின்னால் இருக்கும் உண்மையை உணர்ந்துகொள்ளத் தடையாகியது.

இவ்வாறு தொடக்க முதல் இறுதிவரை இயேசுவிற்குத் தடைகள், சவால்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தன. அவரைப் பகைத்தவரிடமிருந்து மட்டுமல்ல, அவரது சீடர்களிடமிருந்தும் தடைகள் காலத்துக்குக் காலம் வந்தன என்பதே ஆச்சரியம். இயேசு தோற்றம் மாறியபோது இங்கேயே இருந்துவிடுவது நல்லது என்று பேதுரு அறிவுரை கூறினார். இயேசுவின் மாட்சிமையை மட்டும் எதிர்பார்த்தவர் அவர். அதேபோல இயேசு தனது பாடுகள் மரணம் பற்றி முன்னறிவித்தபோதும் இது உமக்கு நிகழக்கூடாது என்றும் பேதுரு கூறினார்.

யூதத் தலைமைக்கு இயேசுவின் போதனைகளும் புதுமைகளும் பெரும் சவாலாக இருந்ததால் அவர்களும் இயேசுவை நேரடியாகவும் மறைமுகமாகவும் எதிர்த்தனர். அவரைத் தீர்த்துக்கட்ட சூழ்ச்சிகளும் செய்து அதில் வெற்றியும் கண்டனர். யூதாசும் இதில் கலந்து கொண்டான்.

### இயேசுவின் நிலைப்பாடு

சவால்கள் எவ்வளவு வந்தாலும், யாரிடமிருந்து வந்தாலும் இயேசு ஒன்றை மட்டும் தெளிவாகக் கொண்டிருந்தார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதே எனது குறிக்கோள், உணவு. அதுவே இயேசுவின் உயிர் மூச்சு. எனவே தடைக்கற்களை அவர் படிக்கற்களாக மாற்றி தன் பயணம் தொடர்ந்தார். இவ்வாறு இயேசு எமக்கு சிறந்த உதாரணமாகின்றார்.

✝ நாம் எதிர்கொள்ளும் தடைகள் எம்மை ஆண்டவரில் இன்னும் வலுவடையச் செய்ய வேண்டும். அவரது விருப்பமே எமது இலக்காக வேண்டும்.

✝ ஆண்டவர் எம்மோடு இருக்கும்போது எமக்கேன் பயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 – செவ்வாய் - பங்குனி 2009

தானி (இணை) 1: 2, 11–19 திபா 25: 4–9 மத் 18: 21–35

### மன்னிப்பு

ஒப்புரவிற்கும் புதுவாழ்விற்கும் மன்னிப்பு மிக முக்கியமானது. இன்றைய நற்செய்தி தரும் சிந்தனைகளைப் பார்ப்போம்.

### பேதுருவின் பெருந்தன்மை

மன்னிப்பு பற்றி விளக்கம் கேட்டார் பேதுரு. இதன் மூலம் தனது பெருந்தன்மையைக் காட்ட முனைந்திருக்கலாம். இயேசுவின் பதிலோ எதிர்பாராதது.

அன்று ராபிக்களின் போதனைப்படி ஒருவர் தன் சகோதரரை மூன்று முறை மன்னிக்க வேண்டும். நான்கு தடவைகள் மன்னிக்கக் கூடாது என்றும் சிலர் கற்பித்து வந்தனர். கடவுளும் சில சந்தர்ப்பங்களில் தண்டித்துள்ளார் (காண். ஆமோ 1: 3, 6, 9, 11, 13, 2: 1, 4, 6). மனிதன் அவரைவிட இரக்கமுள்ளவனாக இருக்க முடியாது. எனவே மன்னிப்பு என்பது மூன்று முறைகள் மட்டும் என்று வரையறுக்கப்பட்டது.

ஆனால் பேதுரு இதை இரண்டு மடங்காகப் பெருக்கி இன்னுமொரு தடவை என்று சேர்த்து ஏழு முறையாக்கினார். ஏழு முறை மன்னிக்கலாமா என்று கேட்டார். ஆனால் இயேசுவின் பதில் ஏழு எனும் எண்ணையும் தாண்டி 'ஏழு முறை மட்டுமல்ல, எழுபது தடவை ஏழு முறை' என்றார். அதாவது மன்னிப்புக்கு எல்லைகள் இருக்கக்கூடாது.

### இயேசுவின் எதிர்பார்ப்பு

தனது கருத்தை விளக்க இயேசு ஓர் உவமையும் தந்தார். இறை மன்னிப்பும் மனித மன்னிப்பும் இணைந்துள்ளன என்பது இயேசுவின் போதனை. உவமையில் வரும் இருவரும் பெற்ற கடன் தொகை பெரிதும் வேறுபட்டது. ஆயினும் கடவுளின் இரக்கத்தை அனுபவிக்கும் நாம் அடுத்தவருக்கும் இரக்கம் காட்ட வேண்டுமென்பது இயேசுவின் போதனை.

☞ இறை மன்னிப்பும் மனித மன்னிப்பும் இணைந்துள்ளன. இறைவனின் மன்னிப்பையும் இரக்கத்தையும் அனுபவிக்கும் நாம் அடுத்தவர் மீது அன்பும் இரக்கமும் காட்ட முன்வர வேண்டும்.

☞ எண்ணிக்கை வேண்டாம், மன்னிக்கும் மனநிலையே வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 - புதன் - பங்குனி 2009

இச 4: 1, 5-9 திபா 147: 12-13, 15-16, 19 மத் 5: 17-19

### சட்டம்

இயேசுவும் சட்டமும் பற்றி யூதத் தலைமை மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்க இயேசு தனது நிலைப்பாட்டை விளக்குகின்றார். சட்டத்திற்கு முரணானவரல்ல இயேசு. ஆனால் சட்டத்தை தவறாக விளக்கி மக்களை குழப்பியவர்களையே அவர் எதிர்த்தார்.

**சட்டம் பற்றி இயேசு**

தொடக்கத்திலிருந்து இயேசு மோசே கொடுத்த சட்டங்களை நிறைவேற்றி வந்தவர். ஆனால் அதற்குத் தவறான விளக்கங்கள் கொடுத்து மக்களுக்கு சட்டத்தையே பெரும் பாரமாக மாற்றியிருந்தார்கள் யூதத் தலைவர்கள். இதையே இயேசு எதிர்த்தார். அதேபோல சட்டம் மனிதரின் வளர்ச்சிக்காகக் கொடுக்கப்பட்ட ஒன்று. ஆனால் அதுவே அன்பை வெளிப்படுத்தத் தடையாவதை இயேசு எதிர்த்தார். ஓய்வுநாள் சட்டம் இதற்கு உதாரணம். இயேசுவின் கண்ணோட்டத்தில் சட்டம் மனிதரை கடவுளிடம் கொண்டு செல்ல வேண்டும். அடுத்தவரையும் அன்பு செய்ய உதவ வேண்டும்.

**அன்பு எனும் சட்டம்**

அதேபோல மோசே கொடுத்த சட்டங்கள் சரித்திரத்தில் ஒரு கட்டத்தில் கொடுக்கப்பட்ட ஒன்று. இன்று நாம் அதையும் கடந்து அன்பு எனும் சட்டத்தால் ஆட்கொள்ளப்பட்டவராக வாழ்ந்து காட்ட வேண்டும். அன்பு எமது உயிர் மூச்சாக இருக்க வேண்டும். அப்போது அடுத்தவர் எமக்கு எதிராக செயல் பட்டாலும் அவர்களை எமது அன்பும் இரக்கமும் நிறைந்த மனநிலையால் திருத்தலாம். பரிசேயர்கள் விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் கொண்டுவந்தபோது அவர்களுக்கு அன்பைவிட சட்டமும், இயேசுவை சிக்கலில் மாட்டவைக்கும் சுயநல நோக்கமுமே இருந்தது. இதேபோல அன்பைப் புறந்தள்ளி சட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து செயல்பட்ட பலரை நற்செய்திகளில் காணலாம்.

❋ இன்று எம்மைச் சுற்றியும் சட்டம் இருக்கின்றது. சட்டத்தை நான் ஒரு தடையாகவோ, கடமையாகவோ பார்க்கின்றேனா?

❋ சட்டத்தையும் கடந்து இறை-மனித அன்பில் நாம் எப்போதும் நிலைத்தால் வாழ்வில் மகிழ்ச்சியைக் காணலாம்.

❋ அன்பே எம்மை ஆழட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 - வியாழன் - பங்குனி 2009

*2சாமு 7: 4-5, 12-14, 16 திபா 89: 2-5, 27, 29 உரோ 4: 13-16, 18, 22*
*மத் 1: 16, 18-21, 24*

### அழைப்பு

மரியாவின் கணவர் யோசேப்புவின் விழா இன்று. மத்தேயு, லூக்கா நற்செய்திகளில் யோசேப்பு அறிமுகம் செய்யப்பட்டாலும் அதைவிட அவரைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. யோசேப்புவின் குணநலன்களைப் பார்ப்போம்.

### நீதிமான் யோசேப்பு

யோசேப்பு ஓர் நற்பண்புள்ள மனிதர் என்று நாம் அறிகின்றோம். நீதிமானாக இவர் ஏனைய யூதரைப் போல சட்டங்களையும் யூத சம்பிரதாயங்களையும் அறிந்திருந்தார். மரியா கருவுற்றிருப்பது தெரிய வந்ததும் அவரை அவமானப்படுத்த விரும்பாமல் அமைதியாக விலகியிருக்கவே அவர் விரும்பினார். ஆயினும் இவருக்குள் குழப்பம். ஒரு சிறப்பான பணிக்காக கடவுளால் ஆயத்தம் செய்யப்பட்ட யோசேப்பு கனவில் வழிநடத்தப்பட்டார். அழைப்பு உறுதி செய்யப்பட்டது. அதில் மரியாவின் நிலை ஓர் மறையுண்மை என்பதை உணர்ந்து அவர் மரியாவை ஏற்றுக் கொண்டார்.

### இரண்டு பண்புகள்

1. இவர் முதலில் தனது நற்பண்புக்கு முன்னுரிமை கொடுத்தார்.
2. தெளிவு பெற்று ஆண்டவரின் பணிப்புக்கு முன்னுரிமை கொடுத்தார்.

யோசேப்புவின் இரண்டு செயல்களும் இன்று எமக்கு பெரும் உதாரணமே. இந்த இரண்டு பண்புகளும் பொறுமையோடு தனக்குத் தந்த பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற அவருக்கு உதவின. மனித பண்புகள் எம்மில் நிறைந்திருக்க இறைவழிகாட்டலை நாம் இலகுவாக உணர்ந்துகொள்ள முடியும் எனும் உண்மையை அறிந்து கொள்ளலாம். குழந்தையையும் தாயையும் கூட்டிக்கொண்டு எருசலேம் சென்றது, ஆபத்து வந்தபோது எகிப்திற்கு ஓடியது, ஆபத்து நீங்கியதும் நாசரேத்திற்கு வந்தது, சமயக் கடமைகளுக்காக எருசலேம் சென்றது, குழந்தை இயேசுவை பொறுமையோடு தேடிச் சென்றது என்பன யோசேப்புவின் சிறப்பான அனுபவங்கள்.

➜ நற்பண்பாளர்களாக வாழ இன்று எமக்கும் அழைப்பு உண்டு. இது அனைத்து மனிதத் தடைகளையும் தாண்டி செயல்பட வைக்க வேண்டும்.

➜ எமது நல்ல மனநிலை இறைவனின் திட்டங்களை இலகுவாகப் புரிந்து செயல்பட உதவும். நம்பிக்கையோடு செயல்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 - வெள்ளி - பங்குனி 2009

ஓசே 14: 1-9 திபா 81: 5-10, 13, 16 மாற் 12: 28-34

### அன்பு

மறைநூல் அறிஞருக்கு முதன்மையான கட்டளைகள் பற்றிய விளக்கமே இன்றைய நற்செய்தி. அனைத்து சட்டங்களும், வாழ்வும் முதன்மையான இரு கட்டளைகளில் அடங்கியிருக்கின்றன என்பதைத் தியானிப்போம்.

**இரு கட்டளைகள்**

1. ***கடவுளை அன்பு செய்வது***. இது யூத மதத்தில் மிக முக்கியமான சட்டம். இந்த கட்டளையை யூதர்கள் பெரிதும் மதித்தனர். கடவுளுக்கேயுரிய பக்தியை இது குறித்து நிற்கின்றது.

2. ***அடுத்திருப்பவரை அன்பு செய்வது***. இது யூதர்களை மட்டுமே குறித்தது. இது யூதரின் மனநிலையைக் காட்டுகின்றது. சட்டங்களுக்கு மேலதிக, நுணுக்கமான விளக்கங்கள் கொடுத்த மறைநூல் அறிஞர்கள் இந்த மனநிலையை உருவாக்கினார்கள். ஆனால் இந்த சட்டம் மனிதருக்குரிய மரியாதையை குறித்துக் காட்டுகின்றது.

இந்த இரு கட்டளைகளுக்குள் அனைத்து கட்டளைகளும் அடங்குகின்றன என்பது தெளிவு. அப்படியிருக்க சமயம், யூத இனம், சிறப்பான அழைப்பு, சட்டம் எனும் வட்டத்தினுள் யூதத் தலைவர்கள் இருந்துகொண்டு யூத மதத்தையும், யூத இனத்தையும், யூத கோவிலையும் தவிர்ந்த அனைத்தையும் வெறுத்தும் எதிர்த்தும் வந்தார்கள். இயேசுவோ தனது போதனை, செயல்கள், மனநிலை மூலமாக உண்மை வழியை மக்களுக்குக் காட்டினார். அதில் நடந்தவர்கள் வாழ்வை அடைந்தார்கள்.

**இறையாட்சிக்கு அருகில்...**

இரு முக்கிய கட்டளைகள் பற்றிய தெளிவான விளக்கத்தைக் கொடுத்த மறைநூல் அறிஞருக்கு இயேசுவின் பதில் சரியானதே. 'நீர் இறையாட்சிக்குத் தொலைவில் இல்லை.' கட்டளைகள் அனைத்தையும் இணைத்து இந்த இரு கட்டளைகளும் அமைய அவை குறிக்கும் இறை பக்தி, மனித மாண்பு ஆகிய இரண்டையும் ஒருவர் நிறைவேற்ற அதுவே இறையாட்சிக்கு அவரை அழைத்துச் செல்லும்.

✎ இறை-மனித அன்பு எனும் கட்டளையை நான் வாழ்ந்து காட்டுகின்றேனா?

✎ இந்த இரு கட்டளைகளும் எனது உயிர் மூச்சாக மாறும்போது இறைவனை அனுபவிக்க யாரும், எதுவும் தடையாக முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 ~ சனி - பங்குனி 2009

ஒசே 6: 1-6 திபா 51: 1-2, 16-19 லூக் 18: 9-14

### *செபம்*

பரிசேயரும் வரிதண்டுபவரும் செபிக்கச் சென்றனர். இருவரின் செபங்களும் இவர்களின் மனநிலைகளைத் தெளிவாகக் காட்டுகின்றன. இயேசுவும் செபம் பற்றி எமக்கு இருக்க வேண்டிய மனநிலையை விளக்குகின்றார்.

**பெரிதுபடுத்தப்பட்ட செபம்**

பரிசேயரின் செபம் தரும் பாடம் பல. இவர் செபிக்கச் சென்றார் என்று சொல்வதைவிட தன்னைப் பற்றி சான்று பகரச் சென்றார் என்றே கூறலாம். உண்மை செபம் கடவுளுக்கு மட்டுமே ஒப்புக்கொடுக்கப்படுகின்றது.

1. யூத சட்டம் வருடத்தில் ஒரு நாளையே நோன்பிருக்கும் நாளாகக் கூறுகின்றது. ஆனால் விசேட நன்மைகளுக்காக வேண்டுவோர் திங்கள், வியாழன் கிழமைகளில் நோன்பிருப்பர். இவர்களில் சிலர் சுயநலத்திற்காக வெள்ளை உடை உடுத்தி சந்தைப் பகுதிகளுக்கு வந்து மக்களின் மதிப்பையும் பெறுவதுண்டு.

2. மக்களின் வருவாயிலிருந்து பத்திலொரு பகுதியை லேவியர் பெறுவர் (எண் 18: 21, இச 14: 22). இந்த பரிசேயரோ கடமைப்படாத சொத்துக்களின் பத்திலொரு பகுதியையும் கொடுப்பதாகக் கூறுகின்றார்.

மொத்தத்தில் இந்த பரிசேயர் செபிக்கச் செல்லவில்லை. அவர் தான் எவ்வளவு நல்லவர் என்று கடவுளுக்குக் காட்டவே சென்றார்.

**பணிவான செபம்**

'கடவுளே, பாவியாகிய என்மீது இரங்கியருளும்' என்பது வரிதண்டுபவரின் செபம். இவரது தோற்றம், நிலை, பணிவு, அடக்கம், செபம் அனைத்தும் இவரின் மனநிலையைக் காட்டுகின்றது. இவரது செபமே கேட்கப்பட்டது என்றார் இயேசு. பெருமைப்படும் ஒருவர் செபிக்க முடியாது, அடுத்தவரை தூற்றும் ஒருவர் செபிக்க முடியாது. இறைவனோடு எமது வாழ்வு ஒத்துப் போகும்போதே உண்மைச் செபம் வெளிப்படும்.

இன்று செபிக்கும்போது எனது மனநிலை என்ன? உவமையோடு ஒப்பிட்டால் நான் பரிசேயரா, வரிதண்டுபவரா?

உண்மையான, பணிவுமிக்க செபத்திற்கு இந்தத் தவக்காலத்தைப் பயன்படுத்துவோம். இவ்வாறு தவக்காலத்தைப் அர்த்தமுள்ளதாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவக்காலம் 4ம் ஞாயிறு
## 22 - பங்குனி 2009

*2குறி 36: 14-16, 19-23 திபா 137: 1-6 எபே 2: 4-10 யோவா 3: 14-21*

### ***இறையிரக்கம்***

ஆண்டவரின் சினமும் நிறைவான இரக்கமும் இன்றைய ஞாயிறு வாசகங்களில் தரப்படுகின்றன. அவரது அன்பை அறிந்து உணர்ந்து அவரிடம் வருவோர் நிறைவாக அவரது இரக்கத்தை அனுபவிப்பார்கள் என்பது உண்மை. இயேசுவே அந்த உறுதிப்பாட்டைத் தருகின்றார்.

### தலைவர்களின் மெத்தனப் போக்கு

சரித்திரத்தின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் மக்களோ அல்லது மக்களின் தலைவர்களோ உலக சிற்றின்பங்களால் கவரப்பட்டு கடவுளைவிட்டு விலகிச் சென்ற சம்பவங்கள் பல. தாமாக உணர்ந்து செல்லாவிட்டாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அவர்கள் தம்மையும் அறியாமல் செயல்படுகிறார்கள். இதுபோன்ற சூழ்நிலையை முதல் வாசகத்தில் வாசிக்கிறோம்.

யூதா தன்னிடம் திரும்ப வேண்டும். தனக்கு என்றும் விசுவாசமாக இருக்க வேண்டும் என விரும்பி கடவுள் தொடர்ச்சியாக பொறுமையோடு இறைவாக்கினர்களை அனுப்புகின்றார். 'ஆண்டவர் தம் மக்களின் மீதும், தம் உறைவிடத்தின் மீதும் இரக்கம் கொண்டு, தம் தூதர்களை மீண்டும் மீண்டும் அவர்களிடம் அனுப்பினார்' என்று கூறப்பட்டுள்ளது. இறைவனின் பொறுமையும் இரக்கமும் இதில் தெளிவாகின்றது. மக்கள் அழிந்துபோக வேண்டும் என்பதல்ல, மாறாக, தனக்கு நம்பிக்கையுள்ளவர்களாக வாழ்ந்து வாழ்வு பெற வேண்டுமென்பதே அவரது விருப்பம்.

### இறைவனின் சினம்

மக்களைத் தேடி இறைவாக்கினர் வந்தாலும் அவர்களை மக்கள் இழிவுபடுத்தினார்கள். பொறுமையிழந்த இறைவன் அவர்களைத் தண்டித்தார். மக்கள், கோவில் அனைத்தும் அழிந்தன. தப்பியவர்கள் நாடுகடத்தப் பட்டார்கள். இறைவன் கொடுத்த சந்தர்ப்பங்கள், அவரது பொறுமை, இரக்கம் போன்றவற்றை உணராது இன்பத்தில் வாழ்ந்த இவர்களுக்குக் கிடைத்த தண்டனை இது. இன்று அதே சூழ்நிலைகளுக்கு நாமும் தள்ளப்படலாம். இறைவன் தண்டிக்கக் காலம் தாழ்த்துகிறார் என்றெண்ணி நாமும் எமது பாவ நிலையை உணராமல் உலகம் போகும் போக்கில் வாழலாம். ஒழுக்கம் நிறைந்த வாழ்வுக்கு அழைக்கும் இறைவனின் குரலுக்கு செவிசாய்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும் இரக்கம்

இறைவன் தனது மக்களை தண்டித்தாலும் உலகை மீட்க தன் மகனை அனுப்பினார். அவரில் நம்பிக்கை கொள்ளும் யாவரும் மீட்படைய வேண்டும். இறைவனின் உடன்படிக்கையில் அவர் மட்டுமல்ல மனிதரும் பொறுப்போடு செயல்பட வேண்டும். பாலைநிலத்தில் தண்டிக்கப்பட்டவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. மோசே உயர்த்திப் பிடித்த வெண்கலப் பாம்பை நம்பிக்கையோடு பார்த்தவர்கள் வாழ்வு பெற்றனர். சந்தர்ப்பம் கடவுளால் கொடுக்கப்பட்டது. அதைப் பயன்படுத்துவதும் விட்டுவிடுவதும் மனித சுதந்திரம்.

எகிப்தில் மக்கள் பாம்பு, முதலை, வண்டுகளை கடவுளாக வழிபட்டனர். ஆனால் அவர்கள் அவற்றினாலேயே தண்டிக்கப்பட்டனர் (காண். விப 8, 10). இஸ்ரயேலர்களும் தவறு செய்ததால் தண்டிக்கப்பட்டனர். ஆனால் பாம்பின் கடியால் தண்டிக்கப்பட்டாலும் அவர்கள் வெண்கலப் பாம்பால் மீட்கப்பட்டனர். இதுவே இறைவன் காட்டும் மீட்பு. கடவுள் மீட்பவர், குணமாக்குபவர். உயர்த்தப்பட்ட பாம்பு யூதர்களுக்கு எவ்வாறு மீட்பைக் கொடுத்ததோ அதேபோல உயர்த்தப்படும் இறைமகன் உலகிற்கே மீட்பைத் தருவார். அதற்கு மக்கள் அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

## தொடரும் மெத்தனப் போக்கு

இயேசுவின் வருகைக்குப் பின்பும் அவரை நம்பாமல் அவரிடம் வந்து வாழ்வு பெறாமல் இருந்தவர்களும் உள்ளனர். இவர்களை இயேசு இருளை விரும்பும் மக்களுக்கு ஒப்பிடுகின்றார். ஏனெனில் இவர்கள் ஒளியைத் தேடி வந்தால் ஒளியாம் இயேசு தரும் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் போய்விடும். கடவுள் நீதியுள்ளவர். அவரது நீதியை நிராகரித்தவர்களுக்கு இறைத் தண்டனை உண்டு. எனவே:

1. ஆண்டவரில் நம்பிக்கை வைத்து அதற்கேற்ப செயல்பட வேண்டும்.
2. அவரது நீதித் தீர்ப்பிற்கு மதிப்பளித்து செயல்பட வேண்டும்.

ஆண்டவரில் நம்பிக்கையில்லா தன்மை என்பது அவரது மீட்கும் அன்பை ஏற்காமல் இருப்பதாகும்.

## செயல்பட...

✞ அன்று யூதர்கள் தமது சூழ்நிலையில் கடவுளுக்கு எதிராக செயல்பட்டனர். இதனால் அவரது தண்டனைகளையும் அனுபவித்தனர். இன்று நாம் எந்த நிலையில் இருக்கிறோம்.

✞ உண்மையின் ஒளியின் ஆண்டவரில் முழுமையான நம்பிக்கைக் கொண்டு வாழவும் அடுத்தவரை ஒளியின் பாதையில் கொண்டுவரவும் முயல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 - திங்கள் - பங்குனி 2009

எசா 65: 17-21 திபா 30: 1, 3-5, 10-11, 12 யோவா 4: 43-54

***அடையாளம்***

அரச அலுவலரின் மகன் நலமடைந்தது இன்றைய நற்செய்தியில் நாம் காணும் சம்பவம். ஆனால் அதன் பின்னணியில் நற்செய்தியாளர் தரும் செய்தி என்ன என்பதைப் பார்ப்போம்.

### இரு அரும் அடையாளங்கள்

யோவான் 4: 46ல் நற்செய்தியாளர் கானாவில் நடைபெற்ற சம்பவத்தைக் குறிப்பிடுகின்றார். அதேபோல 54ல் இது இரண்டாவது அரும் அடையாளம் என்றும் காட்டுகின்றார். கானாவில் நடைபெற்ற முதல் அடையாளத்தோடு இயேசுவின் சீடர்கள் அவரில் நம்பிக்கை வைத்தனர் (காண். யோவா 2: 11-12). இங்கு இரண்டாவது அடையாளத்தோடு அரச அலுவலரும் அவரது வீட்டாரும் இயேசுவில் நம்பிக்கை வைத்தனர் என்று கூறப்படுகின்றது (4: 53).

### அரச அலுவலர் மகன்

அடையாளங்களுக்கும் அரும் செயல்களுக்கும் உள்ள தொடர்பையும் இங்கு பார்க்கிறோம். விடயங்களை சரியான கண்ணோக்கில் பார்க்க இயேசு கானாவில் தன் தாயை அழைத்தார். அரச அலுவலருக்கும் இயேசு உடன் செயல்படவில்லை. அடையாளங்களையும் கடந்து அவை தரும் உண்மைகளைக் காண இயேசு அழைக்கின்றார். 'உம் மகன் பிழைத்துக் கொள்வான்,' 'மகன் பிழைத்துக்கொண்டான்' போன்ற சொற்கள் இயேசு வாழ்வு கொடுப்பவர் என்பதைக் காட்டுகின்றன.

மக்கள் மத்தியில் உதித்த ஆண்டவர் வாழ்வு கொடுப்பவர். தன் மக்களிடம் வந்து அவர்களுக்கு வாழ்வு கொடுப்பதில் ஆண்டவர் மகிழ்கிறார். அவரில் நம்பிக்கை புதுவாழ்வில் வந்து முடியும். அவரை நம்புவதற்கு யூதத் தலைமை அடையாளங்களைக் கேட்டது. ஆனால் இயேசு அவர்களுக்கு மறுத்துவிட்டார். இங்கு நற்செய்தியில் இயேசுவின் வார்த்தையை நம்பி அரச அலுவலர் சென்றார். அவரது நம்பிக்கை வீண்போகவில்லை.

✳ இயேசுவில் நம்பிக்கை எமக்குண்டு. ஆயினும் அடையாளங்கள் தரப்படும் போது அது எமது நம்பிக்கையை வலுப்படுத்துகின்றது.

✳ ஆண்டவரில் நம்பிக்கை வைத்து வாழ்வில் நாம் காணும் சம்பவங்கள் மூலமாக அவரது அன்பையும் இரக்கத்தையும் உணர்ந்துகொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 - செவ்வாய் - பங்குனி 2009

எசே 47: 1-9, 12   திபா 46: 1-2, 4-5, 7-8   யோவா 5: 1-3, 5-16

### நம்பிக்கை

இயேசு பெத்சதா எனும் குளத்தருகில் உடல் நலமற்றவரை நலமாக்கினார். இந்த பகுதி தரும் செய்தியைப் பார்ப்போம்.

### மூட நம்பிக்கை

பெத்சதா எனும் இக்குளம் பிற இனத்தவரின் இடத்தில் அமைந்துள்ளது என்றும இது அவர்களின் நற்சுகத்தின் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு இடம் என்றும் நம்பிக்கை உண்டு. இந்தக் குளத்தில் காலத்துக்குக் காலம் நலமற்றோர் நலமடைகின்றனர் எனும் வதந்தியும் பரவி வந்தது. இந்த இடத்தில் புதுமைகள் நடைபெறுவதை பக்திமிக்க யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு நடந்தாலும் அது பிற இனத்தவரின் கடவுளால் அல்ல, மாறாக, வானதூதர் ஒருவரின் செயலாலேயே நடைபெறுகின்றது என்றனர்.

பழிபாவத்திற்கு அஞ்சாத சில யூதர்கள் நலமடைவதற்காக இந்த பிற இனக் கடவுளைத் தேடியும் சென்றுள்ளனர். இங்கு இயேசு ஏன் சென்றார்? இயேசு இங்கு நலமடைவதற்கல்ல, பாவியைத் தேடிச் சென்றார். 38 ஆண்டுகளாக நலமற்றவரைக் குணமாக்கியதும் இயேசு அங்கிருந்து மறைந்து விடுகின்றார். மீண்டும் உண்மைக் கடவுளின் கோவிலில் அவர் தன்னை வெளிப்படுத்துகின்றார்.

### நோயும் பாவமும்

'இதைவிடக் கேடானது எதுவும் உமக்கு நிகழாதிருக்க இனிப் பாவம் செய்யாதீர்' என்றார் இயேசு. இவரது நோயும் பாவமும் தொடர்புடையதா? யோவான் 9: 1-4ல் இயேசு பாவத்தையும் நோயையும் தொடர்புபடுத்தவில்லை. பாவம் ஒருவரை நோயாளியாக்கும். ஆனால் அனைத்து நோய்களும் பாவத்தினால் வருகிறது என்றும் கூற முடியாது. இயேசு இங்கு இவரது விசுவாசக் குறைவை நினைவூட்டுகின்றார். ஏனெனில் இவர் 38 வருடங்களை வீணாக்கியுள்ளார். யூதர்களும் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைவதற்கு முன்பு 38 வருடங்களை வீணடித்தனர் (காண். இச 1: 19...).

× இயேசுவில் எமக்குள்ள நம்பிக்கையை ஒப்பிட்டுப் பார்க்க இந்தப் பகுதி எமக்கு உதவுகின்றது. நாமும் எமது நம்பிக்கையின்மையால் பல வருடங்களை வீணடித்திருக்கலாம். அவரில் நம்பிக்கை கொண்டு வாழ்வோம்.

× எமது நம்பிக்கை நிறைந்த வாழ்வு அடுத்தவரையும் வழிநடத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 ~ புதன் - பங்குனி 2009

எசா 49: 8–15 திபா 145: 8–9, 13–14, 17–18 யோவா 5: 17–30

### அன்பு

தந்தையாம் இறைவனுக்கும் அவர் மகன் இயேசுவிற்கும் உள்ள உறவு அன்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பது தெளிவு. அதை இயேசு எவ்வாறு வெளிப்படுத்துகின்றார் என்பதை இன்றைய நற்செய்தி தருகின்றது. அதன் விளக்கத்தைத் தியானிப்போம்.

**தந்தை-மகன் உறவு**

தந்தைக்கும் இயேசுவிற்கும் ஆழமான உறவு இருந்தது. அதை நிரூபிக்க இயேசு அன்பை மனக்கண் முன்பாக நிறுத்துகின்றார். பொதுவாக தந்தையின் அன்பை *agapan* 'அகபான்' (காண். யோவா 3: 16) எனும் சொல் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றது. ஆனால் இங்கு அன்பிற்கு *philein* 'பிலெயின்' எனும் கிரேக்கச் சொல் பயன்படுத்தப்படுகின்றது. இது நண்பர்களுக்கிடையே இருக்கும் அன்பை அல்லது சம நிலையில் இருக்கும் இருவரின் அன்பைக் குறிக்கின்றது.

இவ்வாறு இறைத் தந்தைக்கும் இயேசுவிற்கும் ஆழமான உறவு, அன்பு இருந்தது என்பதே உண்மை. இந்த அன்பு விசுவாசம் நிறைந்த அன்பு மட்டுமல்ல, சமமான அன்புமாகும். தந்தைக்கும் மகனுக்கும் அன்பில் சமநிலை இருக்கும்போது அவர்களது பணியிலும் சமநிலை இருப்பதையும் பார்க்கின்றோம். தந்தை மகன்மேல் அன்பு கொண்டு அவருக்கு அனைத்தையும் காட்டுகின்றார், தீர்ப்பு அளிக்கும் அதிகாரமும் கொடுத்துள்ளார் என்று இயேசு குறிப்பிடுகின்றார். அதேவேளை இயேசுவும் தனது தந்தையின் விருப்பத்தையே நாடுகிறார் என்று கூறுகின்றார்.

**அன்பும் செயலும்**

இருவர் தமது அன்பை நிறைவாகப் பகிர்ந்தால் தமது நன்மை தீமைகளையும் பகிர்ந்து கொள்வர். இது இயல்பு. இயேசுவும் தந்தைமேல் கொண்டிருந்த அன்பினால் தந்தைக்குரிய பணிகளைச் செய்தார். தந்தைக்கு எப்போதும் கீழ்ப்படிந்து வாழ்ந்துள்ளார். மரணம் வரைக்கும் அவரது அன்பு வெளிப்பட்டுள்ளது என்பதே உண்மை.

✝ இயேசுவின்மேல் எனக்கிருக்கும் அன்பு ஆழமானதா?

✝ எனது அன்பை கீழ்ப்படிவின் மூலமாகக் காட்டுகின்றேனா?

✝ இயேசுவில் உள்ள அன்பு என்னை முழுமையாக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 – வியாழன் - பங்குனி 2009

*விப 32: 7–14 திபா 106: 19–23 யோவா 5: 31–47*

### ***சான்று***

இயேசுவின் செயல்களுக்கும் அவரது வாழ்வுக்கும் தந்தையாம் இறைவன் சான்று பகர்கின்றார். இயேசுவைப் பற்றிய சான்றுகளைப் பார்ப்போம். யூத சமூகத்தில் ஒரு விடயத்தை நிரூபிக்க குறைந்தது இரு சான்றுகள் அவசியம். இயேசுவும் தனது உலக வாழ்வின் நோக்கம் பற்றிய சான்றுகளை முன்வைக்கின்றார்.

### இயேசு பற்றிய சான்றுகள்

***1. இறைவன் தந்த சான்று:*** என்னை அனுப்பிய தந்தையும் எனக்குச் சான்று பகர்கிறார் என்றார் இயேசு (யோவா 5: 37).

***2. மனித சான்று:*** திருமுழுக்கு யோவான் இயேசுவிற்கு முன்னோடியாக வந்தவர். தான் ஒளி இல்லை என்றும் ஒளிக்கு சான்று பகர வந்தவர் என்றும் குறிப்பிட்டார். இயேசுவை கடவுளின் ஆட்டுக்குட்டி என்றும் (யோவா 1: 36), அவரது மிதியடிவாரை அவிழ்க்கவும் நான் தகுதியற்றவன் என்றும் (யோவா 1: 27) திருமுழுக்கு யோவான் சான்று பகர்ந்திருந்தார்.

***3. அனுபவ சான்று:*** இயேசுவின் செயல்களைப் பார்க்கும் எவரும் அவர் மெசியா என்று ஏற்க வேண்டும். அவரது செயல்கள் சிறந்த சான்றாக அமைகின்றது.

***4. மறைநூல் சான்று:*** யூதத் தலைவர்கள் மறைநூலை நன்கு அறிந்தவர்கள். மறைநூலில் இயேசுவைப் பற்றி முன்னறிவிக்கப்பட்டுள்ளது. எனவே மறைநூலும் இயேசுவிற்கு நிறைவான சான்று (யோவா 5: 39).

***5. இறைவாக்குகளின் சான்று:*** இயேசு மோசே பற்றிக் குறிப்பிடுகிறார். மோசே தனது நூல்களில் இயேசுவைப் பற்றி எழுதியுள்ளார் (இச 18: 15).

இவ்வாறு இயேசுவை நம்பாதவர்களுக்கு இயேசு இரண்டுக்கும் அதிகமான சான்றுகளைக் காட்டுகின்றார். ஆனால் இயேசுவை வெறுத்தவர்கள் அவர் எவ்வளவு சான்றுகளை முன்வைத்தாலும் அவற்றையும் இயேசுவையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

### இன்றைய சான்றுகள்

இயேசுவின் நற்செய்திக்கு சான்று பகர நான் அழைக்கப்பட்டுள்ளேன். அவரது நற்செய்தியைக் கொண்டு செல்லாமல் நானே நற்செய்தியாக மாறினால் இயேசு பற்றிய எனது சான்றுகள் உறுதியாகும்.

✯ நற்செய்தியாவேன், ஆண்டவரின் உண்மைச் சான்றாவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 - வெள்ளி - பங்குனி 2009

சாஞா 2: 1, 12-22 திபா 34: 16-20, 22 யோவா 7: 1, 2, 10, 25-30

### நம்பிக்கை

இயேசுவைப் பற்றிய பல கருத்துகள் நிலவின. மக்களும் தாம் அறிந்தது, கேட்டது, அனுபவித்ததைக் கொண்டு அவர் யாராக இருக்கலாம் என்று அவரைப் பற்றி பலவாறாகப் பேசினார்கள்.

**மக்களின் கருத்துகள்**

மக்கள் தமது கருத்துகளை வெளியிட்டதால் அவற்றில் அவர்களது ஏமாற்றம், எதிர்பார்ப்பு, மனநிலைகள் தெரிகின்றன.

1. அவர் நல்லவர் (7: 12). இயேசுவைப் பற்றிய நல்ல விடயங்களை இவர்கள் அறிந்திருக்கலாம். சிலர் தனிப்பட்ட விதத்தில் இயேசுவிடமிருந்து நன்மைகளையும் பெற்றிருக்கலாம். இவர்களது கருத்து இது.
2. அவர் மக்கள் கூட்டத்தை ஏமாற்றுகிறார் (7: 12). இயேசுவின் வருகை, ஊர், மெசியாவோடு ஒப்பிடும்போதும், அவர் பற்றிய முரண்பாடுகளைப் பார்க்கும்போதும் இவர்கள் இயேசுவை ஏமாற்றுபவராகவே பார்க்க முடிந்தது.
3. பேய் பிடித்திருக்கிறது (7: 20). இயேசுவின் போதனைகள் வேதாகமத்திற்கு முரணாக இருக்கும் போதும், இயேசுவின் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாது போகவும் இவர்கள் தமது சினத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்கள்.
4. இவர் மெசியா (7: 26). யாரும் இயேசுவை எதிர்க்காதபோது தலைவர்கள் இயேசுவை மெசியா என ஏற்றிருக்கலாம் எனும் எண்ணமே இது. தலைவர்கள் ஏற்றிருந்தால் மக்கள் ஏற்றுக் கொள்வதற்கு எத்தடையும் இருந்திராது.
5. வரவேண்டிய இறைவாக்கினர் உண்மையில் இவரே (7: 40). மக்களிடையே பிளவு ஏற்பட்டாலும் இயேசுவைப் பற்றிய பல உண்மைகள் வெளிப்பட்டன.

**மெசியாவின் பிறப்பிடம்**

மெசியா திடீரென காட்சி தருவார் எனும் பரம்பரைக் கதைகளை நம்பியவர்கள் இயேசுவின் பிறந்த ஊர் பற்றி மீக்கா இறைவர்க்கினர் குறிப்பிட்டுள்ளதைக் கவனிக்கத் தவறிவிட்டனர் (மீக் 5: 2).

✡ இயேசு பிறந்து பல வருடங்களாகி விட்டன. இந்நிலையில் விவிலியத்தை அறியும் எனது நம்பிக்கை வளர்ந்துள்ளதா?

✡ இயேசு விவிலியத்தில் மட்டுமா உள்ளார்? அவர் எனது வாழ்வில் செயல்பட நான் அனுமதித்தால் அவரது வழிகாட்டலை உணர்ந்து செயல்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 – சனி - பங்குனி 2009

எரே 11: 18–20 திபா 7: 1–2, 8–11 யோவா 7: 40–53

### உண்மை

இயேசுவைப் பற்றிய உண்மைத் தகவல்கள் தெரியாத நிலையில் மக்கள் பல கருத்துகளையும் தெரிவித்தார்கள். தலைவர்களுக்கும் ஏமாற்றம் காத்திருக்கின்றது. அவர்கள் எவ்வாறு செயல்பட்டார்கள் என்று பார்ப்போம்.

### தலைவர்களின் ஏமாற்றம்

பாலஸ்தீனா உரோமையரின் ஆட்சியில் இருந்தாலும் சிறிய சிறிய சமூக, சமய சிக்கல்களைத் தீர்த்து வைக்க யூத மதத் தலைவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருந்தன. கோவிலுக்குப் பாதுகாப்பு கொடுக்கவும், சமயத்திற்கு எதிராக குழப்பங்கள் விளைவிப்போரை கைது செய்யவும் தலைவர்கள் காவலர்களைப் பயன்படுத்தினார்கள். இயேசுவைப் பிடித்துவர இவர்கள் அனுப்பப்பட்டாலும் அவரிடமிருந்து ஒரு குற்றத்தையும் காண முடியவில்லை. எனவே இவர்கள் இயேசுவோடு திரும்பி வராமல் அவர் பற்றிய நம்பிக்கையோடும் உறுதிப்பாட்டோடும் வந்தார்கள்.

பரிசேயரின் கணிப்பின்படி காவலர்கள் ஏமாந்து போய் விட்டார்கள். உண்மைக்குப் புறம்பாகவும் செயல்பட தலைவர்கள் துணிந்துவிட்டார்கள்.

### நிக்கதேமின் துணிவு

இந்நிலையில் நிக்கதேம் எனும் பரிசேயர் ஒரு கருத்தை வெளியிட்டார். நிக்கதேம் முன்பு இயேசுவிடம் திறந்த மனதோடு வந்து வழிகாட்டலைப் பெற்றவர். இயேசுவை அறிந்த காரணத்தாலும், சட்டம் குறிப்பிடுவதையும் பின்னணியாகக் கொண்டு அவர் கேட்டார். அவரது கருத்து நியாயமானது, சட்டபூர்வமானது. ஒருவரது வாக்குமூலத்தை எடுக்காமல் அவரைத் தீர்ப்பிட முடியாது (இச 17: 4). இவர் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டு இவ்வாறு குறிப்பிட்டார். ஆனால் பரிசேயரோ நிக்கதேமையும் நிராகரித்தனர்.

'நீரும் கலிலேயரா?' என்பதே அவர்களது கேள்வி. அதாவது நீர் இயேசுவிற்கு ஆதரவாகவா பேசுகின்றீர்? என்று பொருள்படும். இவ்வாறு யூதத் தலைவர்கள் இயேசு பற்றிய தமது சினத்தை பலரிடமும் பல வார்த்தைகளிலும் வெளியிட்டனர். ஆயினும் உண்மையே நிலைத்தது.

➠ உண்மைக்காகக் குரல்கொடுக்க நான் முன்வருகின்றேனா?

➠ எனது வாழ்வில் அநீத செயல்களை அடுத்தவர் குறித்துக் காட்டும்போது எனது மனநிலை என்ன? சிந்தித்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவக்காலம் 5ம் ஞாயிறு
## 29 - பங்குனி 2009

*எரே 31: 31–34 திபா 51: 1–2, 10–13 எபி 5: 7–9 யோவா 12: 20–33*

### அர்ப்பணம்

கடவுள் தன் மக்களோடு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார். இது வித்தியாசமான ஓர் உடன்படிக்கை. இயேசு தனது வாழ்வில் இந்த உடன்படிக்கையை உறுதிசெய்து அதன் அடையாளமாகத் தன்னையே அர்ப்பணிக்கின்றார் என்பதை இன்றைய ஞாயிறு வாசகங்கள் எமக்குத் தருகின்றன. இவை தரும் செய்தியைப் பார்ப்போம்.

**புதிய உடன்படிக்கை**

கடவுள் இஸ்ரயேல் மக்களோடு செய்த உடன்படிக்கைகள் பல. கடவுள் உடன்படிக்கைகளுக்கு விசுவாசமாக இருந்தாலும் மக்கள் காலப்போக்கில் அவற்றை மறந்து இறைவனுக்கு எதிராகவே செயல்படத் தொடங்கினார்கள். இங்கு ஆண்டவர் ஓர் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி அதன் சிறப்பான அம்சங்களையும் தருகின்றார்.

பழைய உடன்படிக்கை பலகையில் எழுதப்பட்டது. பத்துக் கட்டளைகள் அடங்கிய அந்த உடன்படிக்கையை மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள். ஆனால் புதிய உடன்படிக்கை உள்ளங்களில் எழுதப்படும் என்கிறார் ஆண்டவர். இந்த அனுபவம் புதிய பிறப்பைப் போன்ற அனுபவமாகும். ஆண்டவரே இதைத் தொடங்கி வைத்து மக்களை வழிநடத்துகின்றார்.

**உடன்படிக்கை அனைவருக்கும்**

மக்கள் தமது பாவங்களால் முறித்த பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை கடவுளால் புதுப்பிக்கப்படுகின்றது. இதில் இன்னொரு அம்சம் என்னவென்றால் இது யூதரை மட்டுமல்ல பிற இனத்தாரையும் உள்ளடக்குகின்றது. இந்த புதிய உடன்படிக்கை மக்களின் இதயங்களில் எழுதப்படும்போது அனைவரும் அறிந்து கொள்ள வாய்ப்புண்டு. அதையே தூய பவுலும் உரோமையருக்கு எழுதிய திருமடலில் பிற இனத்தாரைப் பற்றிக் குறிப்பிட்டபோது சட்டம் அவர்களது உள்ளங்களில் எழுதியுள்ளது என்றார். 'திருச்சட்டம் கற்பிக்கும் ஒழுக்கநெறி தங்கள் உள்ளத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் தங்கள் நடத்தையில் காட்டுகிறார்கள்' என்றார் (உரோ 2: 15).

இயேசு வந்து இந்த உடன்படிக்கையை நிறுவும் நாளை எரேமியா இறைவாக்கினரும் எதிர்பார்த்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிற இனத்தார் வருகை**

இன்றைய நற்செய்தியில் வரும் சம்பவம் இயேசுவின் பணிவாழ்வில் மிகவும் முக்கிய திருப்புமுனையாக அமைந்துள்ளது. யூதருக்கு மட்டும் மீட்பு எனும் நிலையில் இருந்து இப்போது பிற இனத்தார் இயேசுவைத் தேடிவந்த சம்பவத்தை நற்செய்தி காட்டுகின்றது. கிரேக்கர் இயேசுவைத் தேடி வருகின்றனர். அவர்களை அழைத்து வருவது அவரது சீடர்களே. இந்த பிற இனத்தாருக்கான செய்தி பலராலும் இறைவாக்கக் கூறப்பட்டுள்ளது.

1. 'இக் கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன' (யோவா 12: 16) என்று இயேசுவே கூறியுள்ளார்.

2. '...சிதறி வாழும் கடவுளின் பிள்ளைகளை ஒன்றாய்ச் சேர்க்கும் நோக்குடன் அவர்களுக்காகவும் இறக்கப் போகிறார்...' (யோவா 11: 53) என்றார் கயபா.

3. உலகம் முழுவதுமே அவருக்குப் பின்னால் செல்கின்றது (யோவா 12: 19) என்று யூதர்களே கூறினார்கள்.

கிரேக்கர் இயேசுவைத் தேடிவந்த இந்த நிகழ்ச்சியோடு இயேசுவின் பொதுப் பணிவாழ்வு முடிந்து அவர் தனது பாடுகள் மரணத்திற்கு தன்னை ஆயத்தம் செய்யும் நேரம் தொடங்குகின்றது. அதை இயேசுவே இறைவாக்காக 'மானிட மகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது' (யோவா 12: 23) என்றார். இதே விடயத்தை நாம் 13: 1, 17: 1இலும் இயேசு குறிப்பிடுவதைக் காணலாம்.

**கோதுமை மணி...**

இயேசு தனது பாடுகள், மரணத்தை முன்னறிவிக்கின்றார். ஏனைய மூன்று நற்செய்திகளிலும் இருப்பதைப் போல யோவான் நற்செய்தியில் இயேசு கெத்சமெனித் தோட்டத்தில் துன்பம் அனுபவித்ததை காணமுடியாது. அதை இங்கு யோவான் இந்த வசனங்களில் குறிப்பிடுகின்றார். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிய வேண்டும். அது கனி தரவேண்டுமென்றால் மடிந்தாக வேண்டும். இயேசுவும் உலகிற்கு வாழ்வு கொடுக்க இறக்க வேண்டும். அந்த வாழ்வு யூதருக்கு மட்டுமல்ல பிற இனத்தாருக்குமானது.

**எமது அர்ப்பணங்கள்**

கிறிஸ்துவில் வாழ்வு பெற்று அடுத்தவர்க்கு வாழ்வு கொடுப்பது ஒவ்வொரு கிறிஸ்தவரின் கடமை. அதை ஒருவர் இறந்தால்தான் கொடுக்கலாம் என்றில்லை. மாறாக நாளாந்தம் எமது அர்ப்பணிப்புகள் மூலமாகவும் கொடுக்கலாம். இத்தவக்காலத்தில் எனது அர்ப்பணம் என்ன? ஆண்டவரின் அர்ப்பணம் என்னை வழிநடத்தட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானி (இணை) 2: 1-9, 15-17, 19-30, 33-62 திபா 23: 1-6 யோவா 8: 1-11

## மன்னிப்பு

விபசாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணை யூதர்கள் இயேசுவிடம் கொண்டு வந்தனர். தீர்ப்பிடச் சொல்லி இயேசுவை வற்புறுத்தினார்கள். இயேசுவின் செயல்பாடு, பதில், மனநிலை எவ்வாறு இருந்தது என்பதைப் பார்ப்போம்.

### யூதத் தலைமையின் மனநிலை

பரிசேயரும் மறைநூல் அறிஞரும் இயேசுவிடம் குறை கண்டுபிடிக்க வேண்டும் எனும் நோக்கோடு இப் பெண்ணைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்த எந்தப் பதிலை இயேசு சொன்னாலும் இயேசுவை சிக்கலில் மாட்டலாம் எனும் நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. கல்லால் எறியுங்கள் என்றால் உரோமையரிடம் அவரை மாட்டிவிடலாம். வேண்டாம் என்றால் அவர் மோசே கொடுத்த சட்டத்திற்கு எதிரானவர் என்று யூத மக்களைத் தூண்டிவிடலாம். இது இவர்களது மனநிலை. இங்கு இவர்களே தமது செயலால் சட்டத்திற்கு எதிராகப் போகின்றார்கள். தவறு செய்த இருவரும் தண்டிக்கப்பட வேண்டுமென்பது சட்டம் (காண். லேவி 20: 10, இச 22: 22). அதை இவர்கள் முறையாகக் கடைப்பிடிக்கவில்லை.

### இயேசுவின் மனநிலை

இயேசு தெளிவாகவே இருந்தார். தனது முடிவில் அவர் அன்பை வெளிப்படுத்தினார். 'உங்களுள் பாவம் இல்லாதவர்...' (8: 7). இயேசு தரையில் எதை எழுதினார்? சில சிந்தனைகள்:

1. அங்கு கூடிவந்த தலைவர்களின் பாவங்களை எழுதிப் பார்த்தார்.
2. தீர்ப்பை முதலில் எழுதி பின் வாசிப்பது உரோமையரின் வழக்கம்.
3. 'உம்மைவிட்டு அகன்றோர் தரையில் எழுதப்பட்டோர் ஆவர்...' (எரே 17: 13) எனும் இறைவாக்குப் பகுதியை எழுதியிருக்கலாம்.
4. 'பொய், புரளியை நீ கிளப்ப வேண்டாம். அநியாயமாய்ப் பொய்ச்சாட்சியாகி, நீ தீயவருக்குக் கைகொடுக்க வேண்டாம்' (விப 23: 1) எனும் பகுதியையும் எழுதியிருக்கலாம்.
5. அன்பு செய், மன்னித்து புதுவாழ்வு கொடு எனும் புதிய சட்டத்தை எழுதியிருக்கலாம். இது அவரது உண்மையான மனநிலையைக் காட்டுகின்றது.

☞ கடவுள் மட்டுமே மனிதரது உள்ளங்களை அறிபவர் என்பதை உணர்ந்து இயேசு கொண்டிருந்த மனநிலையை எமதாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண் 21: 4-9 திபா 102: 1-2, 15-17, 18-20 யோவா 8: 21-30

## இயேசு

இருக்கிறவர் நானே எனும் தன்னை நம்பும்படி இயேசு மக்களை அழைத்தார். அவரை நம்பியவர்கள் பலர். நம்ப மறுத்தவர்களும் பலர். இயேசுவின் தொடக்கம், பணி, எதிர்காலம் பற்றிய சிந்தனைகளை நற்செய்தி தருகின்றது. அவற்றைத் தியானிப்போம்.

### 'இருக்கிறவர் நானே'

இயேசு தந்தையிடமிருந்து வந்தவர். இறைவன் தன்னை மோசேக்கு 'இருக்கிறவராக இருக்கிறவர் நானே' என்று வெளிப்படுத்தியுள்ளார். நிலையாக இதுவே என் பெயர் என்றும் தலைமுறை தலைமுறையாக தன் நினைவுச் சின்னமும் இதுவே என்றும் கூறியுள்ளார் (காண். விப 3: 14-15). இவ்வாறு இயேசுவே கடவுளின் பெயரைத் தாங்கி வருபவர். அவரே சிலுவையில் உயர்த்தப்பட்ட பின்பு தந்தையாம் இறைவனிடம் உலகை உயர்த்தவிருப்பவர் என்றும் பார்க்கிறோம்.

இயேசுவே கடவுளிடமிருந்து வருபவர். அவர் அன்பு எனும் கொடையோடு மானிடத்தைத் தேடி வருகிறார். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணுக்குப் புதுவாழ்வு கொடுத்ததுபோல மனிதத்தை கடவுள் நிலைக்கு அவரே உயர்த்துவார். அவர் இந்த உலகை தீர்ப்பிட்டு அழிக்கவோ, குற்றங் காணவோ வரவில்லை. மாறாக அதை மீட்கவே வந்தார். ஆனால் அவர் தன்னை வெளிப்படுத்தியும் மக்கள் அவரில் நம்பிக்கை கொள்ளாவிட்டால் அவர்கள் பாவத்திலேயே வாழ்வார்கள். இவ்வாறு அவர்கள் தங்களுக்குத் தாங்களே தண்டனையை வருவிக்கிறார்கள் என்று வலியுறுத்துகின்றார் இயேசு.

### மனிதரின் நிலை

பாவத்தில் வாழ்பவர் இருளில் வாழ்கிறார். ஒளியை நோக்கி வருவதில்லை. இதன் மூலமாக கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே பிளவு ஏற்படுகின்றது. அன்பின் செய்தியை மக்களுக்குக் கொண்டுவந்தார் இயேசு. அந்த செய்தியை பெறுவதும், வாழ்ந்து காட்டுவதும், ஒளியின் மக்களாக இயேசுவில் நிலைப்பதும் அவரவர் சுதந்திரம். ஏற்றுக்கொள்வோர் வாழ்வர். ஏற்க மறுப்போர் தண்டனைத் தீர்ப்புப் பெறுவர்.

- இயேசு இன்று எனது எல்லாமாக இருக்கிறார் என்று என்னால் கூறமுடியுமா?
- இருக்கிறவரான இயேசுவை நான் வாழ்ந்து காட்டுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானி 3: 14-20, 24-25, 28 தானி (பதிலுரை) (இ) 3: 52-56 யோவா 8: 31-42

## உண்மை

இயேசு நற்செய்தியில் தன்னைப் பற்றியும் மக்களைப் பற்றியும் பல உண்மைகளை வெளிப்படுத்தினார். அவற்றில் பல விடயங்கள் அடங்கியுள்ளன. அவை தரும் விளக்கங்களைப் பார்ப்போம்.

**உண்மை**

1. இயேசுவின் வார்த்தைகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம்.

அ. அவரது சீடராகலாம்,

ஆ. உண்மையின் வழியில் நடக்கலாம்.

இ. விடுதலையும் பெற்றுக் கொள்ளலாம்.

உண்மையின் ஊற்றாகிய இயேசுவே எம்மை விடுவிப்பவர். அவரே உண்மையின் வடிவம். அவர் பாவத்தின் விளைவுகளிலிருந்தும், வஞ்சிக்கப்படுவதிலிருந்தும், அலகையின் சூழ்ச்சிகளிலிருந்தும் எம்மை மீட்பவர். கடவுளை அடையவும் நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ளவும் தேவையான வழிகளைக் காட்டுபவரும் அவரே. கடவுளை நோக்கிச் செல்லத் தேவையான சுதந்திரத்தையும் தருகிறார்.

2. பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை. எம்மை அடிமையாக்கவும், கட்டுப்படுத்தவும், எமது வாழ்வின் போக்கை வலிந்து ஏற்கச் செய்யவும் பாவத்திற்கு வலுவுண்டு. ஆயினும் இயேசுவால் அதையும் அடக்கியாள முடியும். இந்த அடிமை நிலையிலிருந்து விடுதலை பெற இயேசுவின் வார்த்தைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு ஒருவர் ஆன்மீக விடுதலை பெறுவார்.

**உரிமைக் குடிமகன்**

இயேசுவில் முழுமையான நம்பிக்கை வைத்து அந்த நம்பிக்கையை வாழ்ந்து காட்டும்போது ஒருவர் உரிமைக் குடிமகனுக்குரிய நன்மைகளை உணர்ந்து அனுபவிப்பார். அந்த முழுமையான வாழ்விற்கே இயேசு தினமும் எம்மை அழைக்கிறார்.

* தினமும் நாம் எதிர்கொள்ளும் சோதனைகளையும் சவால்களையும் எப்போதும் செபத்தில் ஆண்டவரோடு நிலைத்திருந்து வென்றெடுப்போம்.

* ஆண்டவரின் வழிகாட்டலையும் ஆசீரையும் நாளாந்தம் உணர்ந்து மகிழ்ந்து செயல்படுவோம், அவர் வழி சென்று உண்மையைக் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02 - வியாழன் - சித்திரை 2009

தொநூ 17: 3-9 திபா 105: 4-9 யோவா 8: 51-59

### இறைவாக்கு

இயேசுவின் வார்த்தைகளைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார் என்றார் இயேசு. இன்று நாம் எதிர்கொள்ளும் மரணத்திற்கும் இயேசு குறிப்பிடும் வாழ்வுக்கும் உள்ள சம்பந்தம் என்ன என்பதைத் தியானிப்போம்.

**வாக்காக இருந்தவர்**

தொடக்கத்தில் வாக்காக இருந்தவர் இயேசு. அவரே காலம் நெருங்கிய போது உலகில் மனிதனாக வந்து பிறந்தார். வாக்காக நித்தியத்திற்கும் இருப்பவர் மனிதனாகப் பிறந்ததால் இறக்கவும் செய்தார். இயேசு இந்த உலகில் வாழ்ந்து இறந்தாலும் அவர் இறுதிவரையும் தந்தையின் விருப்பத்தையே நாடினார், அதையே நிறைவேற்றினார். அதில் எந்த சந்தேகமும் இல்லை. தந்தையும் இயேசுவை மரணத்திலிருந்து உயிர்க்கச் செய்து தனது வலப்பக்கத்தில் அமரச் செய்தார் (காண். மத் 25: 31, திப 7: 56). இதுவே இயேசு எமக்குக் காட்டும் நிலைவாழ்வு. நான் சென்று தந்தையின் இல்லத்தில் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்வேன் என்றும் தன் சீடர்களுக்கு இயேசு வாக்களித்தார் (காண். யோவா 14: 1-3).

**எமக்கும் வாழ்வு**

இன்றைய நற்செய்தியில் என் வார்த்தைகளைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார் என்றார் இயேசு. இங்கு அவர் குறிப்பிடுவது ஆன்மீக மரணமல்ல, மாறாக, அது உடல் ரீதியான மரணம்.

அதாவது இயேசுவின் வார்த்தைகள் நிலையானவை, வாழ்வு தருபவை, நிலைவாழ்விற்கு அழைத்துச் செல்பவை. நாம் இந்த உலகில் ஒருநாள் பிறந்தோம், ஒருநாள் இறப்போம் என்பதும் உண்மை. ஆனால் இந்த உலகில் வாழும் நாம் அவரது வார்த்தையில் நிலைத்திருந்து அவரது கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் சந்தேகமில்லாமல் நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்வோம். இதுவே ஆன்மீக நிலைவாழ்வு.

- இயேசுவின் வார்த்தையில் நிலைத்திருந்து எந்த சவால்கள் வந்தாலும் உண்மைக்காக வாழ்வேன் எனும் உறுதியோடு என்னால் வாழ முடிகிறதா?
- இயேசுவின் வாக்கும் கட்டளைகளும் தரும் வாழ்வை இந்த உலக மரணத்தோடு ஒப்பிடாமல் தெளிவாக நாம் வாழ வேண்டும்.
- மரணம் வரும். ஆனால் அவரது வாக்கு நிலைவாழ்வு தரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03 - வெள்ளி - சித்திரை 2009

எரே 20: 10-13 திபா 18: 2-7 யோவா 10: 32-42

### நற்செயல்கள்

இயேசுவின்மேல் எறிய யூதர்கள் கற்களை எடுத்தனர். இயேசுவின் செயல்களைவிட அவரது வார்த்தைகளில் யூதர்கள் முரண்பாட்டைக் கண்டதால் இவ்வாறு செய்தனர். நற்செய்தி தரும் சிந்தனை என்ன?

**இயேசு நண்பர்**

கடவுள் என்றால் தொலைவில் இருப்பவர். அவரைக் காண்பவர் இறந்துவிடுவார் எனும் எண்ணமே யூதர்கள் உள்ளத்தில் காலாகாலமாக நிலவி வந்தது. அதிலிருந்து அவர்கள் விடுபடுவது கடினமானது. இதனால் ஒருவர் தன்னை கடவுள் என்றோ, கடவுள் மகன் என்றோ, மெசியா என்றோ கூறினால் அதை அவர்கள் பொறுத்துக் கொள்ளவும் மாட்டார்கள். தேவநிந்தனையாகக் கருதி தண்டிக்கவும் செய்வார்கள். ஸ்தேவானுக்கு நடந்த மரணம் இந்த பின்னணியைக் கொண்டது (திப 6: 8 - 7: 60).

ஆனால் இயேசுவோ மனிதனாகப் பிறந்தாலும் தொடக்கத்திலிருந்து தந்தையோடு மிக நெருங்கிய தொடர்பில் இருந்தார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதே அவரது முன்னுரிமை. அதே இயேசு தன் சீடர்களை தன் நண்பர்களென அழைக்கின்றார். இந்த நட்பு நிறைந்த உறவுக்கு எம்மையும் அழைக்கின்றார். இதற்கு அவர் முன்வைக்கு ஒரேயொரு நிபந்தனை செயல். 'நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள்' (யோவா 15: 14). இவ்வாறு கடவுள் மனிதன் எனும் பாரிய இடைவெளியை இயேசு நிரப்பி ஆழமான உறவுக்கு எம்மை அழைத்துச் செல்கின்றார். எம்மையும் கடவுளாக மாற அழைக்கிறார்.

**நாம் அவராக...**

கடவுளின் செயல்களைச் செய்ததால் இயேசு கடவுளைத் தன் தந்தையென அழைத்தார். இவ்வாறு செயல்பட அவருக்கு இருந்த ஒரே ஆதாரம் அவரது தூய்மையான செயல்கள். இதை யூதர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் கடவுளைப் பழித்துரைக்கிறார் என்றனர்.

- இயேசு என் நண்பர் என்று இன்று என்னால் தயக்கமின்றி கூற முடியுமா?
- இயேசுவை எனது நண்பராக்க இந்த தவக்காலத்தில் முயன்றாலென்ன?
- நண்பராம் இயேசு என்னைக் கைவிட மாட்டார். ஆனால் நான் என் பாவ வாழ்வால் அவரைக் கைவிடுவதில்லையா? சிந்தித்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04 - சனி - சித்திரை 2009

எசே 37: 21-28 எரே (பதிலுரை) 31: 10-13 யோவா 11: 45-57

### மரணம்

அன்றும் இன்றும் பல மரணங்கள் நடைபெறுகின்றன. ஆனால் அடுத்தவருக்காக மரணம் என்று சில மரணங்களையே காண்கிறோம். இயேசுவின் மரணம் அனைவருக்குமானது என்பதை இன்றைய நற்செய்தி தரும் சிந்தனையிலிருந்து பார்ப்போம்.

**அனைவருக்குமானது...**

இயேசுவைக் கொல்லத் திட்டம் தீட்டப்படுகின்றது. அந்த சந்தர்ப்பத்தில் இயேசுவின் செயல்கள் தரும் உண்மையை, அவற்றில் இறைவனின் கைவன்மையை அறிந்துகொள்ள யூதத் தலைமை தவறிவிடுகின்றது. ஏனெனில் அவர்கள் இருளில் தொடர்ந்து இருந்தனர். இயேசுவின் பிறப்பிலிருந்து இறப்பு வரை இறைவாக்குகளிலிருந்தோ (காண். மத் 2: 5-6), இறைவாக்குகளிற்கு வெளியேயிருந்தோ இயேசு பற்றிய உண்மையைக் கண்டுணர முடியவில்லை. அவர்களது சுயநலம் அவர்கள் கண்களை மறைத்திருந்தது.

இயேசுவின் புதுமைகளும் போதனைகளும் மக்களில் இடைக்கிடையே குழப்பங்களையும் ஏற்படுத்தியது. யூதத் தலைமைக்கு உரோமைய அதிகாரிகளிடமிருந்து சில அதிகாரங்கள் இருந்தாலும் நிலமை கட்டுக் கடங்காமல் போனால் எதிர்விளைவுகளையும் சந்திக்க வேண்டிவரும்.

இந்நிலையில் கயபா எனும் தலைமைக் குரு இயேசுவைப் பற்றி முன்னறிவித்தார். அவரது மரணம் உலகம் அனைத்துக்குமானது என்பதை இறைவாக்காகச் சொன்னார். இயேசுவும் மக்களின் ஆன்மீக விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்திருந்தார். காலம் நெருங்கியபோது யூதர்களின் திட்டமும் இறைவனின் விருப்பமும் நிறைவேறின.

**யூதத் தலைமையின் சுயநலம்**

யூத மதம், பொதுநலம் எனும் பெயரில் தமக்கு சவாலாக வந்த இயேசுவை அழித்துவிட யூதத் தலைமை செயல்பட்டது. மக்களையும் அச்சுறுத்தி பணிய வைத்தனர். தமது திட்டங்களை நிறைவேற்ற இவர்கள் அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தினார்கள்.

☆ இயேசு எனக்குத் தரும் சவால்கள் என்ன? அவற்றிலிருந்து நான் விலகிச் செல்கின்றேனா அல்லது முகம் கொடுத்து திருந்தி வாழ்கின்றேனா?

☆ இயேசுவே எனது வாழ்வாக மாறட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு
## 05 - சித்திரை 2009

*எசா 50: 4-7 திபா 22: 7-8, 16-19, 22-23 பிலி 2: 6-11 மாற் 14: 1-15: 47*

### ***துன்பம்***

இயேசுவிற்கு எதிரான சூழ்ச்சிகள் தொடர்கின்றன. இயேசுவோ தனது கடைசி நாட்களை மனதில் கொண்டு தன்னை சிறப்பாக ஆயத்தம் செய்கின்றார். தன் சீடர்களையும் வழிநடத்துகின்றார். புனித வாரத்தினுள் நாம் இன்று முதல் நுழைகின்றோம். இயேசுவோடு இணைந்து அவரது பாடுகளில் பங்கேற்போம்.

### துன்புறும் ஊழியர்

மெசியா பற்றி எசாயா இறைவாக்கினர் முன்னறிவிக்கிறார். அவரை துன்புறும் ஊழியராகக் காட்டுகின்றார். துன்பம் என்பது யூத மதத்திலும் கிறிஸ்தவத்திலும் பின்னிப் பிணைந்த ஒன்று எனலாம். பழைய ஏற்பாட்டில் யூதர் தம்மைத் தவிர உலக மக்களை வெறுத்தனர். அதேபோல உலகில் அதிகம் வெறுக்கப்பட்ட இனமானால் யூத இனமே. இதுபோன்ற மனநிலைகளால் பல முரண்பாடுகளும் வன்முறைகளும் உருவாகின. எகிப்து நாட்டில் அடிமை வாழ்வு தொடங்கி, பாலைநிலப் பயணம், வாக்களிக்கப்பட்ட நாட்டில் அடிமை நிலைகள் என்று பல துன்பங்களுக்கும் இவர்கள் ஆளாகியிருந்தார்கள். இந்நிலையில்தான் யூத இனம் மெசியாவின் வருகைக்காகவும் தமது நிலையான மீட்புக்காகவும் ஏங்கியிருந்தது. ஆனால் வரவிருக்கும் மெசியா துன்புறும் மனிதராவார் என இவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். துன்பத்தின் மூலமாக மீட்பு என்பது ஆண்டவரின் திட்டம். எனவேதான் 'அடிப்போருக்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோருக்கு என் தாடையையும் ஒப்புவித்தேன்...' என்று இறைவாக்காகக் கூறப்படுகின்றது.

### துன்பத்திலும் நம்பிக்கை

'என் தலைவர் துணைநிற்கிறார்... இழிநிலை அடைவதில்லை' என்றும் இறைவாக்காகக் கூறப்படுகின்றது. இறைவனில் நம்பிக்கை கொண்டுள்ள ஊழியர் துன்புறவும் தயங்க மாட்டார். ஏனெனில் இறைவனின் அருட்கரம் அவரை வழிநடத்தும் எனும் நம்பிக்கை அவருக்கு இருக்கும். இயேசுவும் தனது துன்ப வேளைகளில் சிறப்பாக தந்தையோடு ஒன்றித்திருந்தார். துன்பத்திலிருந்து விடுதலை பெறவல்ல. மாறாக, தந்தையின் விருப்பத்தை அறிந்து அதை நிறைவேற்றுவதில் குறியாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயேசுவின் இறுதி நாட்கள்**

இயேசு தனது இறுதி நாட்களை துடிப்போடு எதிர்கொண்டிருப்பார். தனக்குள் இருந்த போராட்டம், தன் சீடர்களிடமிருந்து வந்த தடைகள், தன்னை எதிர்த்தவர்களிடமிருந்து வந்த பகைமை என்று பல கோணங் களிலிருந்தும் சவால்கள். அனைத்தையும் துணிந்து, தந்தையின் துணையோடு இயேசு எதிர்கொண்டார்.

***1. தனக்குள் போராட்டம்***

கெத்சமனித் தோட்டத்தில் இயேசுவின் செபம் உருக்கமானது. 'இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும், அனாலும் என் விருப்பப்படி அல்ல. உம் விருப்பப்படியே நிகழட்டும்' என்று செபித்தார். அனைத்தையும் கடந்து அந்தத் துன்ப வேளையிலும் தந்தையின் விருப்பத்தை நாடியதே அவரது தனிச் சிறப்பாகும்.

***2. சீடர்கள் தடையாக...***

இயேசுவோடு மூன்று வருடங்களாக வாழ்ந்தவர்கள் அவரது சீடர்கள். அவரது போதனைகள், புதுமைகள், வாழ்வைப் பார்த்தவர்கள் இவர்கள். அவருக்குத் துணையாக விழித்திருந்து செபிக்கவும் பலமில்லாமல் போய்விட்டது. சீடர்களுள் யூதாசு காட்டிக் கொடுத்தான், பேதுரு மறுதலித்தார்.

***3. அவரை எதிர்த்தவர்கள்...***

யூதத் தலைமை இயேசுவிற்கு தொடக்கத்திலிருந்தே தடையாக வந்தது. இயேசுவிற்கு எதிராக சூழ்ச்சிகள் செய்து, பல பொய் சாட்சிகளையும் சோடித்து, சட்டத்திற்கு முரணாக விசாரணைகளையும் வைத்து இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றனர் யூதத் தலைவர்கள்.

உரோமைய அதிகாரிகளுக்கு தமது பதவி பற்றிய கருத்து அதிகம் இருந்திருக்கும். இயேசு யார் என்பதைவிட இயேசுவின் பெயரால் நாட்டில் குழப்பங்கள் வரக்கூடாது, சட்டமும் ஒழுங்கும் பேணப்பட வேண்டும் என்பதே அவர்களது கருத்தாக இருந்திருக்கும்.

காவலர்களுக்கோ இயேசு இன்னொரு கைதி, கள்வன், சட்ட விரோதி. எனவே அவர்கள் தங்கள் பொழுதைக் கழித்தனர். இயேசுவைத் தமது விருப்பப்படி சித்திரவதை செய்தனர்.

***4. இன்று நாம்...***

இயேசுவின் காலத்தில் வாழ்ந்தவர்கள் பற்றி இன்று எம்மால் கருத்து வெளியிட முடியும். ஆனால் ஏழைகளிலும், துன்புறுவோரிலும் இயேசு இருக்க எனது மனநிலை, செயல்பாடுகள் எவ்வாறு உள்ளன? இது இன்று எனக்கு வரும் சவால். எதிர்கொள்ளத் தயாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06 - புனித வாரம் - திங்கள் - சித்திரை 2009

எசா 42: 1-7 திபா 27: 1-3, 13-14 யோவா 12: 1-11

### மனநிலை

நற்செய்தியில் இலாசரின் சகோதரி மரியா இயேசுவின் காலடிகளை நறுமண தைலத்தால் பூசி தனது கூந்தலால் துடைத்தார். இதைக் கண்ட யூதாசு மரியாவின் செயலைக் கண்டித்தான். மரியா, யூதாசுவின் செயல்களையும் மனநிலைகளையும் பற்றித் தியானிப்போம்.

### மரியாவின் செயல்

இயேசு ஒரு சாதாரண மனிதரல்ல. மார்த்தா, மரியா, இலாசரின் குடும்ப நண்பர் இயேசு. அவர் இலாசரை உயிர்ப்பிக்கச் செய்துள்ளார். தமது சகோதரனையே மீண்டும் அவர்களுக்குக் கொடுத்துள்ளார். இந்த செயல், மற்றும் இயேசுவின் பணிவாழ்வில் நடைபெற்ற செயல்களைப் பார்க்கும்போது யாரும் இயேசுவை இறைமனிதராகவே பார்த்திருப்பர். இயேசு குறிப்பிட்டவாறே அவர்கள் என்றும் இவர்களோடு இருக்கப் போவதில்லை. இந்நிலையில் மரியா தனது நன்றியையும் பெருந்தன்மையையும் வெளியிட இவ்வாறு செயல்பட்டிருக்கலாம்.

### யூதாசுவின் மனநிலை

மரியாவின் செயலை யூதாசு கண்டித்தான். இதற்கு செலவழித்த பணத்தைக் கொண்டு ஏழைகளுக்கு உதவியிருக்கலாம் என்பதே அவனது வாதம். ஆனால் அதே யூதாசு ஆண்டவரின் உயிரையே முப்பது வெள்ளிக் காசுக்கு விற்றான். இதன் மூலம் யூதாசுவின் மனநிலை வெளிப்படுகின்றது.

### இயேசுவின் பதில்

இயேசுவோ மரியா தனது மரணத்தைக் குறித்து இவ்வாறு செயல்பட்டார் என்று தன் மரணத்தை முன்னறிவிக்கிறார். ஏழைகளை கவனிக்க வேண்டாமென அவர் கூறவில்லை. இந்த செயல் தினமும் தொடரப் போவதில்லை. இயேசு தொடர்ந்து இருக்கப் போவதுமில்லை. இந்த பின்னணியில் இயேசு மரியாவின் செயலை நியாயப்படுத்தினார். இவ்வாறு யூதாசுவிற்கு இயேசு நல்ல பாடம் புகட்டினார்.

☞ ஏழைகள் பற்றிய எமது மனநிலை என்ன?

☞ ஏழைகளுக்கு உதவுவதில் எமது சுயநலம் முன்னுரிமை பெறுகின்றதா என்பதில் எப்போதும் நாம் தெளிவாயிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 - புனித வாரம் - செவ்வாய் - சித்திரை 2009

எசா 49: 1-6 திபா 71: 1-6, 15, 17 யோவா 13: 21-33, 36-38

### யூதாசு

யூதாசு செய்யப்போகும் துரோகத்தை இயேசு முன்னறிவிக்கின்றார். சீடர்கள் இதைப் புரிந்துகொள்ளாவிட்டாலும் யூதாசு செயல்பட்ட விதத்தை ஆராய்ந்து தியானிப்போம்.

**இயேசுவின் நிலை**

யூதாசுவும் பேதுருவும் செய்யப் போவது இயேசுவிற்குத் தெரிந்திருந்தது. ஆனால் இயேசு அனைத்தையும் அப்படியே விட்டுவிட்டார். சூழ்நிலையை மாற்றவில்லை. அவர்கள்மீது கோபம் கொள்ளாமல் தொடர்ந்து அன்பு செய்தார்.

**யூதாசுவின் நிலை**

இயேசு மெசியா என்பதை யூதாசு நம்பினாலும் இந்த உலகை உலக அரசுகளிலிருந்து மீட்பார் என்றே எதிர்பார்த்தான். எனவே அவனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. கடைசி நாட்களில்கூட இயேசு இறையாட்சி, மாட்சிமை போன்றவற்றைக் கூறுவதைவிட தனது பாடுகள் மரணம் பற்றியே அதிகம் பேசினார். உலக அரசியல் வெற்றி பற்றி இயேசுவின் கரங்களை பலப்படுத்த விரும்பினான் யூதாசு. ஆனால் அது முடியவில்லை. இயேசுவின் வாழ்வு இந்த் உலகோடு முடிந்துவிடும், அது தோல்வியிலேயே முடியும் என்று அலகை யூதாசுவைத் தூண்டியிருக்கும். எனவே யூதாசு இருளில் இருந்தான்.

**அப்பத் துண்டைப் பெற்றதும்...**

யூதாசு அப்பத் துண்டைப் பெற்றதும் அவனுள் சாத்தான் நுழைந்தது என்று வாசிக்கிறோம். இயேசுவின் உணவு வாழ்விப்பது. எவ்வாறு யூதாசுவை தவறாக வழிநடத்தும் எனும் கேள்வி எமக்குள் எழலாம். இயேசுவின் உடல் வாழ்வைக் கொடுத்தாலும் அதைப் பெறுபவரின் விசுவாசமும் மனநிலையும் அவர் பெறவிருக்கும் வாழ்வில் தங்கியுள்ளது. அப்பத் துண்டைப் பெற்றாலும் யூதாசினுள் அவவிசுவாசமே குடிகொண்டிருந்தது. எனவே அவனால் இயேசுவின் நல்லெண்ணத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

☆ இன்று எனது நிலை என்ன? இயேசுவைப் புரிந்து கொள்வதிலா அல்லது இயேசு என்னைப் புரிந்து என் விருப்பப்படி செயல்பட வேண்டும் என எதிர்பார்த்தா நான் நடக்கிறேன்?

☆ ஆண்டவரில் நம்பிக்கை வைத்து வாழ்வு பெறுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08 - புனித வாரம் - புதன் - சித்திரை 2009

எசா 50: 4-9 திபா 69: 7-9, 20-21, 30, 32-33 மத் 26: 14-25

### யூதாசு

தொடர்ந்து யூதாசுவின் செயலையும் மனநிலையையும் பார்ப்போம். யூதாசு தலைமைக் குருக்களிடம் சென்று தான் காட்டிக் கொடுப்பதாகக் கூறி அவர்களுக்கு ஒத்துழைப்பதாக வாக்களிக்கின்றான்.

### யூதாசுவின் எதிர்பார்ப்பு

யூதாசு பல காரணங்களுக்காக இயேசுவைக் காட்டிக் கொடுத்திருக்கலாம். இவற்றுள் பணம் ஒரு காரணமாக இருக்கலாம். இயேசுவின் கால்களை மரியா நறுமணத் தைலத்தால் கழுவிய அந்த சம்பவத்திலிருந்து யூதாசு செயல்பட்டான் என்று பார்க்கிறோம். இயேசுவும் தனது மரணத்தைச் சுட்டிக் காட்டினார். அல்லது யூதாசுவில் ஏற்பட்ட ஏமாற்றத்தின் விளைவாக இருக்கலாம். இயேசு மெசியா. அவர் அரசியல் விடுதலையைக் கொடுப்பார் என்று எண்ணிய யூதாசு ஏமாந்திருக்கலாம்.

யூத மதத்தில் தீவிரமாக இருந்த பலர் உரோமையரின் ஆட்சிக்கு எதிராக கிழர்ச்சி செய்தனர். அல்லது கிழர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக செயல்பட்டனர். இவ்வழியில் சென்ற யூதாசுவும் இயேசு தனது எண்ணப்படி செயல்படவில்லை என அறிந்ததும் என்ன செய்வதென்று தெரியாமல் செயல்பட்டான்.

### யூதாசு வழியில் இயேசு

இயேசு தனது திட்டப்படி செயல்பட வேண்டுமென யூதாசு விரும்பினான். ஆனால் அது நடைபெறவில்லை. யூதாசுவின் திட்டப்படி இயேசு அல்ல, இயேசுவின் திட்டப்படி யூதாசு செயல்படுவதே முறையானது. இருப்பினும் இறைவனின் திட்டங்கள் முறையாக நிறைவேற இயேசு அமைதி காத்து அனைத்தையும் அனுமதித்தார் என்பதே உண்மை. இவ்வாறு யூதாசு இன்றைய உலகத்தின் போக்கினையும் மனநிலையையும் எடுத்துக் காட்டுகின்றான்.

தம் போக்கின்படி கிறிஸ்தவப் போதனைகள் அமைந்திருக்க வேண்டுமென உலகம் விரும்புகின்றது. போதனைகள் முரணாகவோ, சவாலாகவோ அமைந்தால் கிறிஸ்தவத்தை கண்டிக்கவும் செய்கின்றது உலகம்.

❋ உலகின் போக்கிலா அல்லது ஆண்டவரின் போக்கிலா நான் வாழ விரும்புகின்றேன்? எனது வழியில் இயேசு வரவேண்டும் என்று எண்ணுவதை விட இயேசுவின் வழியில் நான் செல்வதே முறையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவரின் திருப்பாடுகளின் பெரிய வியாழன்
## 09 - சித்திரை 2009

*விப 12: 1-8, 11-14   திபா 116: 12-13, 15-18   1கொரி 11: 23-26   யோவா 13: 1-15*

### *அன்பு*

இயேசு சீடர்களோடு பந்தியில் அமர்ந்தார். இது அவருக்கும் அவரது சீடர்களுக்கும் இறுதி இரவுணவு. இங்கு அனைவரும் நல்ல நிலையில் இல்லை. இயேசுவைக் காட்டிக் கொடுக்க யூதாசு ஆயத்தமாகின்றான். யூதர்களின் பாரம்பரிய பாஸ்கா விழாவின் பின்னணியில் இந்த இரவுணவு ஆரம்பமாகின்றது. இயேசுவின் அன்பு, யூதாசின் மனநிலை, சீடர்களின் குழப்பம் போன்ற பின்னணிகளையும் இந்த இரவுணவில் பார்க்கலாம்.

### பாஸ்கா விருந்து

கடவுள் தனது மக்களுக்கு செய்த அளப்பரிய நன்மையை நினைத்து யூதர்கள் வருடாவருடம் பாஸ்காவைக் கொண்டாடினார்கள். இது ஒரு விருந்து. இந்த விருந்திற்கு மாசற்ற செம்மறி கொல்லப்பட வேண்டும், அதன் இரத்தம் கதவு நிலைகளில் பூசப்படவும் வேண்டும், விருந்தில் புளியாத அப்பமும் கசப்புக் கீரையும் சேர்க்கப்படும். இயேசு இந்த பாஸ்காவை புதிய பாஸ்காவாகக் கொண்டாடினார். யோவான் நற்செய்தியாளர் தரும் இரவுணவின் விளக்கம் ஆழமானது. இயேசு தன் சீடர்களின் காலடிகளைக் கழுவினார். அதன் விளக்கங்களைப் பார்ப்போம்.

### சில முரண்பாடுகள்

பொதுவாக கீழைத்தேய வழக்கத்தின்படி ஒருவர், விசேடமாக வீட்டுத் தலைவர், விருந்தின்போது எழுந்திருக்கக் கூடாது. அவ்வாறு எழுந்தால் விருந்து முடிந்துவிட்டது என்பது அர்த்தமாகும். இங்கு இயேசு வழமைக்கு மாறாக பந்தியிலிருந்து எழுந்தார். அவர் சம்பிரதாயத்தை முறித்தார். ஏனெனில் இங்கு வழக்கத்திற்கு மாறானது நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தொடக்கத்திலேயே யூதாசின் உள்ளத்தில் காட்டிக் கொடுக்கும் எண்ணத்தை அலகை விதைத்திருந்தது. இயேசு அப்பத்தை பலுகச் செய்தபோதே 'பன்னிருவராகிய உங்களை நான் தேர்ந்துகொண்டேன் அல்லவா? ஆயினும் உங்களுள் ஒருவன் அலகையாய் இருக்கிறான்' (யோவா 6: 70) என்று கூறியிருந்தார். யூதாசுவின் சிந்தனைகளை அறிந்த இயேசு இவ்வாறு கூறியிருந்தார். இப்போது அந்த சிந்தனை முதிர்ந்த நிலையில் இருந்தது. இதுவரை அன்புக்குப் பதிலாக யூதாசு பகைமையே வளர்த்து வந்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நற்செய்தி சிந்தனைகளுக்கு முரணானது. 'பாவம் செய்பவர் அலகையைச் சார்ந்தவர்' (1யோவா 3: 8). அன்பு இறைவனையும் மனிதனையும் இணைக்கிறது (காண். 1யோவா 4: 20). விவிலிய மொழியில் விருந்திற்கு முன்பாக ஒப்புரவு அமைய வேண்டும்.

## இயேசுவின் அன்புப் பரிசு

இயேசு இந்த இரவுணவின்போது தனது கடைசி அன்பை வெளிப் படுத்தினார். ஆனால் யூதாசின் எண்ணம் வேறு. இயேசுவின் நண்பர்கள் அல்லது சீடர்கள் தனக்கெதிராக பகையை வளர்த்திருக்கும்போது அவர் எவ்வாறு விருந்தில் தனது வாழ்வின் பரிசைக் கொடுக்க முடியும்? எனவே இயேசு நடைமுறைக்கு மாறாக பந்தியிலிருந்து எழுந்து யூதாசிடம் சென்று பணிந்து அவனது கால்களைக் கழுவினார். அவ்வாறே அனைத்து சீடர்களின் கால்களையும் கழுவினார். ஏனெனில் அவர்களும் தூய்மையாயில்லை.

இயேசு அதிகம் அன்பு செய்த சீடர்கள் அவரது மார்புப் பக்கமாய் சாய்ந்திருந்தார். அவ்வாறு சாய்ந்திருப்பது கீழைத்தேய முறையில் ஆழமான அன்பை அடையாளப்படுத்துகின்றது. தன்னைக் காட்டிக் கொடுப்பவர் பற்றி இயேசு குறிப்பிட்டபோது பேதுரு இவருக்கு சைகை காட்டினார் (காண். யோவா 13: 24) என்று வாசிக்கிறோம். எனவே பேதுரு சற்று தொலைவில் இருந்திருக்க வேண்டும்.

## யூதாசுவின் இடம்

ஆனால் யூதாசு எங்கிருந்தான்? இதற்கு ஒரு விளக்கம் தருவார்கள். யூதாசு இயேசுவின் இடப்பக்கத்தில் அமர்ந்திருந்தான் என்றும் இயேசு யூதாசு மார்பில் சாய்ந்தார், அதாவது தனது ஆழமான அன்பை வெளிப்படுத்தினார், என்றும் கூறுவார்கள். சம்பிரதாயப்படி தலைவரின் இடது பக்கத்தில் அமர்வது என்பது பெருமதிப்பு மிக்க ஒன்றாகும். இயேசு அந்த மதிப்பை யூதாசுக்குக் கொடுத்தார். இயேசு இவ்வாறு யூதாசு மார்பில் சாய்ந்ததும் அவனது காலடிகளைக் கழுவியதும் ஒப்புரவின் அடையாளங்களாகும். அன்றைய மரபுப்படி ஒருவர் முன்பாக முழந்தாளிட்டு, கால்களைக் கழுவி, மன்னிப்புக் கேட்பதென்பது மிகவும் அவமானமான செயலாகும். அதற்குப் பதிலாக ஒருவர் மரணத்தையே விரும்புவார். ஆனால் இயேசுவோ யூதாசுவிற்கு வாழ்வு கொடுப்பதற்காக இந்த நிலைக்கும் தன்னைத் தாழ்த்தினார். யூதசோ இருளில் நடப்பதையே விரும்பினான்.

☞ இன்று நானும் யூதாசுவைப் போல செயல்படலாம். ஆனால் இயேசுவின் அன்பு எப்போதும் குறையாது என்பதை உணர்ந்து திருந்தி வாழ்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவரின் திருப்பாடுகளின் பெரிய வெள்ளி
## 10 ~ சித்திரை 2009

எசா 52: 13–53: 12 திபா 31: 1, 5, 11–12 எபி 4: 14–16, 5: 7–9 யோவா 18: 1–19: 42

### மரணம்

இயேசுவின் மரணம் இன்று உலகிற்கு வாழ்வைத் தருகின்றது. அவரது மரணத்தின் பின்பு சீடர்கள் பயந்து வாழ்ந்தார்கள். அவரது மரணம் சிலுவை மரணம். சிலுவை அவமானத்தின் சின்னம், அது கொடூர மரணம். துன்பங்களின் எல்லைக்கே சென்று வாழ்வை முடித்துக் கொள்ளும் நிலை. இதுபோன்ற மரணத்தை யாரும் ஏற்க விரும்ப மாட்டார்கள். ஏனெனில் சிலுவை மரணம் சட்ட விரோதிகளுக்குக் கொடுக்கப்படும் ஒன்று.

இன்று மரணம் மனிதனுக்கு பல வடிவங்களில் வருகின்றது. இயேசுவின் மரணத்தோடு எமது வாழ்வையும் மரணத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

**ஒருவர் இறக்கும்போது நடப்பதென்ன?**

✞ '...எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப் போல் நீங்களும் துயருறக்கூடாது... இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார்' (1தெச 4: 13~18).

✞ '...இறந்தோர் அழிவற்றவர்களாய் உயிருடன் எழுப்பப்படுவர்' (1கொரி 15: 52). மேலும் திவெ 14: 9~12, 20: 15, 21: 3.

**மரணத்திற்கு நான் ஏன் பயப்பட வேண்டும்?**

✞ அறியாத ஒன்றைப் பற்றி பயம்கொள்வது இயல்பு. மரணம் பற்றிய பயம் எம்மை கடவுளிடம் அழைத்துவந்தால் அது நல்லதே. மரணம் என்பது ஒரு முடிவு என்று எண்ணுவதைவிட அது நிலைவாழ்விற்கான தொடக்கம் என்று எண்ணுவது நல்லது. (கொலோ 3: 1~3, 2கொரி 5: 1~10).

✞ கடவுளுடன் இருக்கும் முழுமையற்ற உறவு எமக்கு மரணத்தைப் பற்றிய பயத்தைக் கொடுக்கும் (பிலி 1: 21). மரணத்திற்கு நான் ஆயத்தமானால் வாழ்வையும் ரசிப்பேன்.

✞ கிறிஸ்துவை விசுவசித்து அவரை என் மீட்பராக ஏற்று வாழ்ந்து காட்டும்போது எனக்கு நிலைவாழ்வு நிச்சயம் (உரோ 8: 10). இதனால் எனது இவ்வுலக மரணத்திலிருந்து தப்ப முடியாது. ஆனால் இந்த நம்பிக்கை எனக்கு ஆண்டவரில் வாழ்விற்கான நம்பிக்கையைத் தரும்.

✞ மரணத்தை இயேசு வென்றார். அவர் வழியில் சென்று நானும் எனது மரணத்தை வெல்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 - சனி - சித்திரை 2009

யோவா 19: 38-42

### மரியா

இயேசுவின் வாழ்வோடும் துன்பங்களோடும் இணைந்திருந்தவர் அவரது தாய் மரியா. சிலுவையடியில் யோவானுடன் நின்று தன் மகனுக்கு ஆறுதலாக இருந்தவர் அவர். அவருக்குள்ளும் பல போராட்டங்கள், துன்பங்கள், கேள்விகள். அவரது துன்பங்களினூடே அவரது அமைதியைத் தியானிப்போம்.

**மரியாவும் குழப்பமும்**

தொடக்கத்திலிருந்து மரியா பல குழப்பமான சூழ்நிலைகளை சந்தித்தார். அழைப்பின்போது சமூகத்திற்கு முரணான செய்தி கிடைத்தது. அவர் கர்ப்பமாயிருந்த விடயம் பாரதூரமானது.

குழந்தை பிறப்பு, எகிப்துக்குத் தப்பியோடியது, எருசலேம் ஆலயத்தில் குழந்தை காணாமல் போனது போன்ற அனுபவங்கள் மரியாவுக்குப் பல துன்பங்களைக் கொடுத்திருக்கும். அதற்கும் மேலாக மகன் துன்பங்கள் பல அனுபவித்ததும், சிலுவையில் தொங்கியதை நேரடியாகப் பார்த்ததும் அவருக்குப் பெரும் துன்பத்தைத் தந்திருக்கும். மகனது அடக்கத்திலும் அவர் இருந்திருக்கலாம்.

**மரியாவின் அமைதி**

துன்பங்கள் பல மரியா அனுபவித்தாலும் அவற்றைப் பெரிதுபடுத்தி அந்த துன்பங்களுக்கான காரணங்களையோ விளக்கங்களையோ அவர் தேடவில்லை. மாறாக, அமைதியில் அனைத்தையும் தனது உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வந்தார். இதுவே மரியாவின் சிறப்பான தன்மையாகும்.

குழந்தை பிறப்பின்போது (காண். லூக் 2: 19), எருசலேம் அனுபவத்திற்குப் பின்பு (காண். லூக் 2: 51), சிலுவையடியில் நின்றபோது (காண். யோவா 19: 25-26). இந்த அமைதியில் மரியா இறைவழிகாட்டல்களைப் பெற்றிருப்பார் என்பது உண்மை. பொறுமை, பணிவு இவரது அணிகலன்கள்.

இன்று நாமும் பல துன்பங்களை அனுபவிக்கிறோம். இவற்றிற்குக் காரணம் தேடியும், கடவுளை நிந்தித்தும், பழிவாங்கத் துடித்தும் எமது காலத்தையும் சக்தியையும் விரயம் செய்கின்றோம். ஆனால் நாம் செய்ய வேண்டியதென்ன? மரியாவைப் போல அமைதி காத்து செபத்தில், தியானத்தில் கடவுளின் விருப்பத்தை அறிய முன்வர வேண்டும்.

துன்பங்களை அனுபவித்த மரியா போல எமது துன்பங்களிலும் இறைவனில் முழுமையான நம்பிக்கை வைத்து அவரது வழிகாட்டலைப் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவரின் உயிர்ப்பு ஞாயிறு
## 12 - சித்திரை 2009

*திப 10: 34, 37–43 திபா 118: 1–2, 16–17, 22–23 1கொரி 5: 6–8 யோவா 20: 1–9*

### ***உயிர்ப்பு***

இன்றைய நற்செய்தியில் மூன்று மனிதர்களின் விசுவாச அனுபவங்கள் தரப்படுகின்றன. மகதலா மரியா, பேதுரு, யோவான். மூவருடைய அனுபவமும் வேறு எனலாம்.

**மகதலா மரியா**

விடியற் காலையில் இருள் நீங்கும் முன்பே மரியா அங்கு வந்ததாகக் கூறப்படுகின்றது. யோவான் நற்செய்தியில் இருள் என்பது நம்பிக்கை யின்மையை அடையாளப் படுத்துகின்றது (1: 5, 3: 2, 6: 17, 9: 4, 8: 12, 11: 10, 12: 35, 13: 30, 19: 39). (மாற் 16: 1–2 பகுதியோடு ஒப்பிடவும்). மகதலா மரியா இயேசுவின் மூடிய கல்லறையையும் இறந்த உடலையுமே எதிர்பார்த்து சென்றார். இவரை இரவில் இயேசுவிடம் வந்த நிக்கதேமுடன் ஒப்பிடலாம். கல்லறையின் வாயிலில் கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்ட மரியா அவரது உடலை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்றே எண்ணினார். எனவே அவர் ஓடிச் சென்று ஏனைய சீடர்களிடம் சொன்னார். சீடர்கள் கல்லறையை நோக்கி ஓட மரியாவோ கல்லறையை விட்டு எதிர்த்திசையில் சென்றார்.

**பேதுருவும் யோவானும்**

இருவரும் கல்லறை நோக்கி ஓடினார்கள். யோவான் முன்பே சென்றாலும் அவர் பேதுரு வரும்வரை கல்லறை வாயிலில் நின்றார். உள்ளே செல்ல வில்லை. பின் பேதுரு உள்ளே சென்று அங்கிருந்த துணியைக் கண்டாலும் ஆண்டவர் உயிர்த்துவிட்டார் என நம்பியதாகக் கூறப்படவில்லை. ஆனால் யோவான் உள்ளே நுழைந்தார். 'சென்றார், கண்டார், நம்பினார்.' இவர் நம்பிக்கை கொண்டவராக கல்லறைக்கு வெளியே வந்தார். பேதுரு பார்த்தது வெறும் பார்வை. நம்பிக்கையோடு சம்பந்தப்படவில்லை. யோவான் கண்டதோ ஆன்மீகப் பார்வை. அவர் அடக்கத் துணிகளைப் பார்த்து ஆண்டவரின் உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டார்.

🕊 ஆண்டவரில் எமது நம்பிக்கை எதில் தங்கியுள்ளது? காணாமல் நம்பிய யோவானைப் போல எந்நாளும் வாழ்வின் சம்பவங்களில் ஆண்டவரையும் அவரது வழிகாட்டலையும் நம்ப முடியுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 – திங்கள் – சித்திரை 2009

திப 2: 14, 22–23 திபா 16: 1–2, 5, 7–8 மத் 28: 8–15

### சூழ்ச்சி

இயேசு உயிர்த்துவிட்டார். அவரது உயிர்ப்பு பற்றிய தகவல்களை வானதூதர் பெண்களுக்குக் கூறினார். தொடர்ந்து இயேசுவும் தன்னை பெண்களுக்கு வெளிப்படுத்தி சீடர்களுக்கான செய்தியைக் கொடுத்தார்.

**பெண்களுக்குப் பரிசு**

மகதலா மரியா, மற்றொரு மரியா இருவரும் ஆண்டவரின் உயிர்ப்பு பற்றிய செய்தியைப் பெற ஆசீர் பெற்றிருந்தனர். இவர்கள் சிலுவையடியில் ஆண்டவருக்குத் துணையாக இருந்தவர்கள். அடக்கத்தின்போதும் இவர்கள் நின்றார்கள். இப்பணிக்குப் பரிசாக ஆண்டவர் தன்னை வெளிப்படுத்தினார். இவர்கள் இயேசுவின் பணிவாழ்வில் பல உதவிகளைச் செய்துள்ளனர்.

**தலைமைக் குருக்களின் சூழ்ச்சி**

ஆண்டவரின் உயிர்ப்பு பற்றிய செய்தியை காவலர்கள் தலைமைக் குருக்களிடம் கூற அவர்கள் குழம்பிப் போய்விட்டார்கள். இந்த செய்தியை எப்படியாவது அடக்க வேண்டும். எனவே காவலர்களுக்கு பணம் கொடுத்து அவர்களது வாயை அடைத்தனர். இவ்வாறு இயேசு விடயத்தில் பல சூழ்ச்சிகளை இவர்கள் செய்துள்ளனர்.

1. யூதாசுவின் நம்பிக்கைத் துரோகத்தைப் பயன்படுத்தி இயேசுவைப் பிடித்தனர்.
2. இயேசுவைத் தீர்ப்பிடுவதற்காக அநீத முறைகளைப் பயன் படுத்தி யிருந்தார்கள். பொய்ச் சான்றுகள், இரவில் விசாரணை போன்றன.
3. இயேசுவின் மீது இல்லாத அவதூறுகளையும் பழியையும் சுமத்தி பிலாத்துவை தீர்ப்பிட வைத்தார்கள்.
4. உயிர்ப்பிற்குப் பின் பணத்தைக் கொடுத்து உண்மையை மறைக்கப் பார்க்கின்றார்கள். ஆயினும் அவர்களது முயற்சி தோற்றது.

உண்மை பொய்க்காது, என்றும் நிலைக்கும் என்பதற்கு இது சிறந்த உதாரணம். இயேசு வேறு வேறு சந்தர்ப்பங்களில் காட்சி தந்து தன்னை வெளிப்படுத்தினார். அதை யூதத் தலைமையால் தடுக்க முடியவில்லை. இயேசுவின் உயிர்ப்புக் காட்சிகள் பலரது நம்பிக்கையை வலுப்படுத்தியது. வெறுமையான கல்லறை, வானதூதர், காட்சிகள் எல்லாம் இதற்கு உதவின.

உயிர்த்த ஆண்டவரில் நாமும் நம்பிக்கை வைத்து நன்மைகள் பல அனுபவிக்க வேண்டும். நம்பிக்கை வாழ்வு தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 ~ செவ்வாய் - சித்திரை 2009

*திப 2: 36-41 திபா 33: 4-5, 18-19, 20, 22 யோவா 20: 11-18*

### மகதலா மரியா

மகதலா மரியாவின் உயிர்த்த இயேசு அனுபவம் தொடர்கின்றது. உயிர்த்த ஆண்டவர் அவருக்குத் தோன்றி தன்னை வெளிப்படுத்தினார். நற்செய்தியில் நாம் காணும் உண்மைகளைப் பார்ப்போம்.

**இருளில் மரியா**

மரியா இன்னும் நம்பிக்கையற்றவராகவே காட்டப்படுகின்றார். இன்னும் இருளில் அவர் இருந்தார். கல்லறை அருகே அவர் அழுதுகொண்டிருந்தார். அவர் இயேசுவைக் கண்டும் அவர் தோட்டக்காரர் என்றே எண்ணினார். அவரது துயர் அவர் கண்களை மறைத்திருந்தது. அதோடு அவர் ஆண்டவரை எதிர்பார்க்கவும் இல்லை. உரையாடல் தொடர இயேசு 'மரியா' என்றழைத்தார். இயேசு அவரை பெயர் சொல்லி அழைத்தார். ஆயர்கள் தமது மந்தையை அவ்வாறே அழைப்பர். அப்போது மரியா உயிர்த்த ஆண்டவரை அறிந்துகொள்கிறார். உயிர்த்த ஆண்டவர் தனித்துவ உறவின் மூலமாகவும், இறைவாக்கின் மூலமும் அறியப்படுகின்றார் (காண். லூக் 24: 13... எம்மாவு அனுபவம்).

**தெளிவற்ற மரியா**

இயேசுவைக் கண்டதும் மரியா அவரை சரித்திர இயேசுவாகவே பார்த்தார். ஆனால் இயேசுவோ தனது உயிர்ப்போடு சரித்திரத்தைக் கடந்து சென்றுவிட்டார். அவர் உயிர்த்துவிட்டார். 'என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே...' என்றார் இயேசு. எனவே மகதலா மரியாவிற்கு சிறப்பான பார்வை தேவை. ஏனெனில் இயேசு இப்போது வாழ்வு கொடுக்கும் ஆவியாகி விட்டார். ஆயினும் மரியாவின் அனுபவம் தனித்துவமானது.

தொடர்ந்து அவருக்கு ஒரு செய்தியும் பணிப்பும் கொடுக்கப்படுகின்றது. இயேசுவின் செய்தியை மகிழ்ச்சியோடும் கீழ்ப்படிவோடும் சீடர்களிடம் சென்று கூறினார் அவர். அதைவிட மேலாக ஆண்டவர் உயிர்த்துவிட்டார் எனும் செய்தியை முழக்கமிட பாக்கியம் பெற்றவராக அவர் விளங்கினார்.

❦ இன்று நான் பெறும் பாக்கியம் என்ன? இயேசுவில் நம்பிக்கை கொண்டு அவரை என் வாழ்வின் வழிகாட்டியாக ஏற்று அனுபவிக்கும்போது அந்த அனுபவம் எனக்கும் வரும்.

❦ உயிர்த்த ஆண்டவரை இன்று வாழ்வின் மூலமாக அறிவிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திப 3: 1–10 திபா 105: 1–2, 3–4, 6–7, 8–9 லூக் 24: 13–35

## இயேசு அனுபவம்

எம்மாவு பாதையில் இரு சீடர்கள். நம்பிக்கை இழந்தவர்களாக சென்ற இவர்களை இயேசு சந்திக்கிறார். அவர்களோடு வழிநடந்து வழிகாட்டினார் இயேசு. சீடர்களுக்கு இந்த இயேசு அனுபவம் சிறப்பானது.

### நம்பிக்கையற்ற சீடர்கள்

எம்மாவு என்பது 18 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஓர் ஊர். எருசலேம் நோக்கி வரும் திருயாத்திரிகர்கள் நகரையும் கோவிலையும் கண்டதும் மிக்க மகிழ்ச்சியடைவார்கள். இங்கு சீடர்கள் இருவர் எருசலேமைவிட்டு தொலைவில் உள்ள ஊருக்கு சென்றது அவர்களது நம்பிக்கையின்மையைக் காட்டுகின்றது. ஆனால் இயேசு அவர்களோடு வழிநடந்து அவர்களுக்கு தன்னைப் பற்றிய உண்மைகளை எடுத்துரைத்தார். இயேசுவைப் பார்த்தாலும் அவர்களது கண்கள் மறைக்கப்பட்டிருந்தன. நான்தான் உயிர்த்த ஆண்டவர் என்று இயேசு அவர்களுக்குக் கூறவில்லை. மாறாக, பழைய ஏற்பாட்டில் மோசே முதல் இறைவாக்கினர் வரை தம்மைப் பற்றிய இறைவாக்குகளை அவர்களது நினைவுக்குக் கொண்டுவந்தார்.

கடைசியாக சீடர்களோடு தங்கி அப்பத்தைப் பிட்டபோதே அவர்கள் இயேசுதான் இவர் என்பதைக் கண்டுகொண்டார்கள். இவர்களுக்கு இயேசுவில் நம்பிக்கை இருந்தது. ஆனால் கடந்த சில நாட்களாக நடைபெற்ற சம்பவங்கள் சீடர்களைக் குழப்பியிருந்தன. அப்பம் பிட்கையில் இவர்கள் இயேசுவைக் கண்டுகொண்டனர். யூதாசுவின் அனுபவத்தோடு ஒப்பிட்டால் அப்பத் துண்டைப் பெற்றதும் சாத்தான் அவனுக்குள் புகுந்தான் (காண். யோவா 13: 27) என்கிறார் நற்செய்தியாளர். யூதாசுக்கு நம்பிக்கை இருக்கவில்லை.

### சீடர்களின் செயல்பாடு

இயேசுவைக் கண்டுகொண்டு தெளிவு பெற்ற சீடர்கள் செயல்பட்டார்கள். நடந்த களைப்பால் அவர்கள் நாளை செல்லலாம் என்று தூங்கவில்லை. மாறாக அந்நேரமே அவர்கள் எருசலேமிற்கு மீண்டும் சென்று தமது அனுபவத்தை ஏனைய சீடர்களோடு பகிர்ந்துகொண்டனர்.

- விசுவாசமின்மையிலிருந்து இயேசு இன்று எம்மையும் விசுவாசத்தில் வழிநடத்துகின்றார். திறந்த மனதுடன் அவரை நாட வேண்டும்.
- நம்பிக்கையோடு இயேசுவின் வழிகாட்டலைத் தேடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 ~ வியாழன் - சித்திரை 2009

*திப 3: 11-26 திபா 8: 1, 4-8 லூக் 24: 35-48*

### அனுபவம்

இயேசு சீடர்களுக்குத் தோன்றி அவர்களை வழிநடத்துகிறார். அவர்களும் ஆண்டவர் உயிர்த்துவிட்டார் என நம்பக்கூடியதாக இருந்தது. இதுவரை ஆண்டவர் சீமோனுக்கும், எம்மாவு பாதையில் இரு சீடர்களுக்கும் மட்டும் தோற்றியிருந்தார் என்றறிந்தனர். இப்போது அனைவருக்கும் தோன்றினார் ஆண்டவர். அவர்களது அனுபவம் என்ன?

**வழிகாட்டல்கள்**

சீடர்கள் ஆண்டவரைப் பார்த்ததும் நம்ப முடியாமல் பயந்து போனார்கள். ஆனால் இயேசுவோ அவர்களை நம்பிக்கையில் வழிநடத்தினார். இதில் நான்கு படிகளைக் காணலாம்:

1. தன் கால்களையும் கைகளையும் காட்டினார். சீடர்கள் ஆண்டவரை அதிகம் பார்க்க இது சந்தர்ப்பம்.

2. தொட்டுப் பாருங்கள் என்றார். பார்வையிலிருந்து தொட்டுப் பார்க்கும் அனுபவம் அவர்களது பயத்தைப் போக்கியிருக்கும். தொடர்ந்து ஒரு மீன் துண்டையும் உண்டு காட்டினார் இயேசு.

இவர்களுக்கு இயேசுவில் நம்பிக்கை வலுப்பெற இறைவாக்குகளை மையமாக வைத்து தனது உயிர்ப்பை சீடர்களுக்கு உறுதிசெய்தார் இயேசு.

3. இந்த வேளையில் அவர்களது மனக்கண்களைத் திறந்தார். நம்பிக்கை சிறப்பாக வலுத்தது எனலாம். இப்போது எந்தத் தடையும் இல்லாமல் சீடர்கள் உயிர்த்த ஆண்டவரை நம்பினார்கள். அவர் உயிர்த்ததற்கான காரணத்தையும் அறிந்தார்கள்.

4. சீடர்களே இப்போது சாட்சிகள். உயிர்த்த ஆண்டவரில் சான்று மிக அவசியம். யூதாசு இறந்தபின்பு அவனது இடத்திற்கு மத்தியாவை தெரிவு செய்தனர். தெரிவு செய்யப்படுபவர் ஆண்டவரின் உயிர்ப்புக்கும் சான்று பகர வேண்டும் என்பது ஒரு முக்கிய நிபந்தனை (காண். திப 1: 21-22).

சீடர்கள் இயேசுவைப் பார்த்தனர், உணர்ந்தனர், மனக்கண்கள் திறக்கப்பட இயேசுவை ஏற்று அவருக்கு சான்று பகர்ந்தார்கள். இதுவே உண்மையான சான்று. சான்றின் மையப் பொருள் இயேசு.

➠ ஆண்டவர் இயேசுவில் நாமும் நம்பிக்கை வைக்க எமக்கும் பல சந்தர்ப்பங்கள், அனுபவங்களைத் தருகின்றார்.

➠ திறந்த மனதோடு அவரது வழிகாட்டலைத் தேடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 – வெள்ளி - சித்திரை 2009

*திப 4: 1–12   திபா 118: 1–2, 4, 22–27   யோவா 21: 1–14*

## ஒப்புரவு

இயேசு திபேரியக் கடல் அருகே சீடர்களுக்குக் காட்சி தந்தார். சீடர்களோ பேதுருவின் அழைப்பின் பேரில் மீன் பிடித்துக்கொண்டிருந்தனர். இந்த பகுதி தரும் செய்திகள் என்ன?

### பேதுருவின் நம்பிக்கை

இயேசுவின் பிரசன்னம் இல்லாததால் சீடர்கள் மீன் பிடிக்கப் போனார்கள். இயேசு இல்லாமல் அவர்களால் எதையும் செய்ய இயலாது என்பதை இவர்கள் உணரவில்லை (யோவா 15: 5). இயேசு கரையில் நின்றாலும் அவர்கள் அவரைக் கண்டுகொள்ளவில்லை. ஆழமான விசுவாசக் கண்களால் பார்த்த யோவான் அவரை ஆண்டவர் எனக் கண்டுகொண்டு பேதுருவிடம் கூறினார். அவரது விசுவாச அறிக்கைக்குப் பின்பே பேதுரு ஆண்டவரைக் கண்டார்.

இயேசுவோ கரையில் ஓர் விருந்து ஏற்பாடு செய்திருந்தார். விண்ணக விருந்திற்கு இது அடையாளம்.

### பேதுருவின் ஒப்புரவு

பேதுரு ஏற்கெனவே ஆண்டவரை மறுதலித்த துயரில் இருந்தவர். இப்போது கடலில் குதித்தார். இயேசுவை அடைவதற்கு பேதுரு ஒப்புரவின் நீரால் கழுவப்படுகின்றார். பின் இயேசுவோடு பந்தியில் அமர்கிறார். சில மீன்களைக் கொண்டு வாருங்கள் என இயேசு கூறியதும் பேதுருவே சென்று வலைகளைக் கரைக்கு இழுத்து மீன்களைக் கொண்டுவந்தார். இது அவரது பணியின் அடையாளம். பேதுரு பெரும் பாவம் செய்திருந்தாலும் தனக்குக் கொடுக்கப்பட்ட தலைமைத்துவப் பணியை அங்கு செய்கின்றார். வலைகளும் கிழியவில்லை. வலையை திருச்சபைக்கு அடையாளப்படுத்தினால் அதில் பல மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. திருச்சபையில் பல வேறுபாடுகள் இருந்தாலும் அது எப்போதும் நிலைக்கும். சீடர்கள் திருமுழுக்கு நீரைக் கடந்து ஆண்டவர் ஆயத்தம் செய்திருந்த நற்கருணை விருந்திற்கு வந்தார்கள் என யோவான் நற்செய்தியாளர் அழகாக விளக்குகின்றார்.

- சீடர்களும் விசேடமாக அதனைத் தலைமை தாங்க அழைக்கப்பட்ட பேதுருவே தவறு செய்திருந்தாலும் ஆண்டவர் அவர்களைத் தொடர்ந்து அன்பு செய்து அவர்களிடம் அதிகமான அர்ப்பணிப்பை எதிர்பார்த்தார்.
- என்னை அன்பு செய்யும் ஆண்டவருக்கு எனது அர்ப்பணம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 - சனி - சித்திரை 2009

*திப 4: 13-21 திபா 118: 1, 14-16, 18-21 மாற் 16: 9-15*

### நம்பிக்கை

சீடர்களின் நம்பிக்கையின்மையையும் அவர்களை இயேசு கடிந்து கொள்வதையும் நற்செய்தியில் வாசிக்கிறோம். சீடர்களின் நம்பிக்கையின்மை எமக்குத் தரும் பாடங்களைப் பார்ப்போம்.

**சீடர்கள் நம்பவில்லை**

இயேசுவின் உயிர்ப்பு என்பது சாதாரண விடயமல்ல. ஏனைய செயல்களைப் போல இதுவும் ஒரு செயல் என எடுத்துக்கொள்ள முடியாது. ஏனெனில் இறந்தவர்களுள் இதுவரை யாரும் உயிர்க்கவில்லை. ஆனால் இயேசு உயிர்த்ததோடு நில்லாமல் சிலருக்குக் காட்சியும் கொடுத்துள்ளார். உயிர்த்த ஆண்டவரைக் கண்டவர்கள் பெண்களும், சீடர்களும். இவர்கள் இயேசுவோடு நெருக்கமாயிருந்தவர்கள். இவர்கள் வந்து ஏனைய சீடர்களிடம் கூறியபோது சீடர்கள் இவர்களது கூற்றை நம்பவில்லை என மாற்கு குறிப்பிடுகின்றார். இதுவே இவர்களது குறை. பயம், பதட்டம், அசாதாரண செய்தி என சீடர்கள் இயேசுவின் உயிர்ப்பு பற்றிக் குழம்பிப் போயிருக்கலாம்.

ஆனால் அதே சீடர்கள் இயேசுவோடு பல மாதங்கள் வாழ்ந்தவர்கள். அவர் தனது பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றியும் முன்னறிவித்துள்ளார். இயேசுவின் இந்த வார்த்தைகளை ஆழமாய்ப் பார்த்தாவது சீடர்கள் மரியாவினதும் சீடர்களினதும் வார்த்தைகளை நம்பி அவரது உயிர்ப்பு உண்மை என ஏற்றிருக்க வேண்டும். இரண்டு தடவைகள் 'சீடர்கள் நம்பவில்லை' என மாற்கு குறிப்பிடுகின்றார்.

**இயேசு கண்டித்தார்**

கடைசியாக இயேசுவே நேரடியாகத் தோன்றி அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்தினார். அதேவேளை நம்பாமல் கடின மனதோடு இருந்ததற்காகவும் அவர்களைக் கடிந்து கொண்டார். இயேசுவின் உயிர்ப்போடு அனைத்தும் முடிந்து விடவில்லை. சீடர்கள் இயேசுவின் நற்செய்திப் பணியைத் தொடர வேண்டும். அதற்கு அவரது உயிர்ப்பில் இவர்கள் ஆழமான நம்பிக்கை வைத்திருக்க வேண்டும்.

🕊 எனது நம்பிக்கை எங்கே? என் நம்பிக்கை எதில் உள்ளது?

🕊 உயிர்த்த ஆண்டவர் எனது நம்பிக்கையின்மையையும் போக்குவார் எனும் நம்பிக்கையோடு வாழ்ந்திடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஸ்கா காலம் 2ம் ஞாயிறு
## 19 - சித்திரை 2009

*திப 4: 32-35 திபா 118: 2-4, 16-18, 22-24 1யோவா 5: 1-6 யோவா 20: 19-31*

## ***இறை இரக்கப் பெருவிழா***

இயேசு தொடர்ந்து சீடர்களுக்குக் காட்சி தந்து அவர்களது சந்தேகங்களைத் தீர்த்து வைத்தார். தான் தொடங்கிய மீட்புப் பணியைத் தொடர வேண்டுமெனவும் சீடர்களுக்கு வேண்டிய பணிப்பைக் கொடுத்தார். அந்த மீட்புப் பணியைத் தொடர்ந்து திருச்சபை நிறைவேற்றி வருகின்றது என்பதையும் நாமறிவோம். வாசகங்கள் தரும் சிந்தனைகளைப் பார்ப்போம்.

### தூய ஆவியைப் பெறுமுன்

இயேசுவின் உயிர்ப்புக்குப் பின்பு அவரே தனித்தும் ஒன்றித்தும் இருந்த சீடர்களுக்குத் தோன்றி தனது உயிர்ப்பு பற்றிய நம்பிக்கையை அவர்களில் வளர்த்தார். ஏனைய சீடர்கள் இயேசுவின் உயிர்ப்பு பற்றிக் கூறினாலும் அனைவரும் நம்பவில்லை. இன்றைய நற்செய்தியில் வரும் தோமா ஒரு உதாரணம். அவரோடு ஒன்றாக வாழ்ந்த சீடர்கள் ஆண்டவரின் உயிர்ப்பைப் பற்றிய தமது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்கள். 'அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்' என்று உறுதியாகக் கூறினார் தோமா. இது அவரது நம்பிக்கையின்மையையும் பிடிவாதக் குணத்தையும் காட்டுகின்றது. சீடர்களுக்குள் இது ஒரு குழப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கலாம். எனவே இயேசு தோமாவிற்கும் தனித்து காட்சி தந்து அவரது நம்பிக்கையின்மையை கடிந்து நம்பிக்கை ஊட்டினார். இயேசுவைக் கண்டதும் தோமா அதிர்ந்து போயிருப்பார். இயேசு தனது காயங்களின் தழும்புகளைக் காட்டியதும் தோமா வெட்கிப் போயிருப்பார். அதன் விளைவாக 'நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்!' என்று தனது நம்பிக்கையை வெளியிட்டார்.

### உயிர்ப்பு தரும் நன்மைகள்

தோமாவின் அனுபவம் போல மகதலா மரியா, எம்மாவு பாதையில் சீடர்கள், பேதுரு, ஏனைய சீடர்கள் என்று பலரும் புதிய அனுபவங்களைப் பெற்றனர். இந்த அனுபவங்கள் உயிர்த்த ஆண்டவரை இன்னும் அதிகம் நேசிக்கவும், அவருக்காக தம்மை அர்ப்பணிக்கவும் உதவும் என்பதில் சந்தேகமில்லை. ஒருவகையில் இந்த அனுபவங்கள் சீடர்களுக்கு அவசியமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியைப் பெற்றபின்**

தூய ஆவியைப் பெற்ற பின்பு சீடர்கள் செயல்பட்டனர். இதுவரை பயந்த நிலையில் இருந்தவர்கள் இப்போது துணிந்து செயல்படுகின்றனர். அவர்களது போதனைகளில் மாற்றம், அவர்களது வாழ்விலும் மாற்றம். சீடர்களின் மனநிலை, உறுதிப்பாடு, நம்பிக்கை, உயிர்த்த ஆண்டவரின் அனுபவப் பகிர்வு, ஒற்றுமை அனைத்தும் புதிய கிறிஸ்தவர்களையும் பாதித்தது. 'நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர்.' இதுவே இயேசுவின் ஒரே இலக்கு, ஒரே செபம். யோவான் நற்செய்தி 17ம் அதிகாரம் முழுவதும் இயேசுவின் செபம். தந்தையிடம் அவர் செபித்தார். தனக்குப்பின் தன் சீடர்கள் ஒற்றுமையாக, ஒரே உள்ளத்துடன் செயல்பட வேண்டுமென செபித்தார். அவரது செபத்தின் பலனை இங்கு பார்க்கிறோம். சீடர்களின் நம்பிக்கை நிறைந்த வாழ்வை திப 2: 42லும் பார்க்கிறோம். நான்கு முக்கிய பண்புகள் இவர்களில் இருந்தன. போதனை, நட்பு, செபம், திருவிருந்து ஆகிய நான்கு விடயங்களிலும் இவர்கள் நிலைத்து இருந்தனர்.

**ஒப்புரவு தொடர வேண்டும்**

இயேசு தன் காட்சிகள் மூலமாக சீடர்களின் சந்தேகங்களைத் தீர்த்து அவர்களை நம்பிக்கையில் உறுதிப்படுத்தினார். தொடர்ந்து தனது ஒப்புரவுப் பணியை அவர்கள் உலகிற்குக் கொண்டு செல்ல வேண்டுமெனவும் அவர்களுக்கு வேண்டிய சக்தியைக் கொடுத்து பணித்தார். இயேசுவில் ஒன்றிக்கவும், அவரது திருவிருந்தில் முழுமையாகவும் தூய உள்ளத்துடனும் பங்குகொள்ளவும் ஒப்புரவு அருட்சாதனம் திருச்சபைக்கு மிக முக்கியம். எனவே சீடர்கள் பணிக்கப்பட்டனர். 'எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப் படா' என்றார். இப்பணிக்கு சக்தியாக அவர்கள் மேல் ஊதி, தூய ஆவியைக் கொடுத்தார். இது ஒப்புரவின் மூலமாக ஒருவர் பெறும் ஆன்மீக உயிர் தரும் ஆவி.

**வாழ்வில் ஒப்புரவு...**

- கிறிஸ்துவில் எனது நம்பிக்கையும் வாழ்வில் அவரது பிரசன்னத்தின் அடையாளங்களும் என்னை ஒப்புரவிற்கும் புதுவாழ்விற்கும் அழைத்து வரும். நம்பிக்கையோடு அவரிடம் வரும்போது எமது வாழ்வும் மாறும்.
- பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை. அவர் பாவத்தில் இறக்கிறார். இந்த நிலையிலிருந்து ஆன்ம உயிர்ப்பு தரும் ஒப்புரவை நாடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 - திங்கள் - சித்திரை 2009

*திப 4: 23-31 திபா 2: 1-9 யோவா 3: 1-8*

## நிக்கதேம்

நிக்கதேம் இயேசுவைத் தேடிவந்து உரையாடுகின்றார். பல விடயங்கள் பற்றி தெரிந்துகொள்கிறார். உண்மையைக் கண்டுகொள்கிறார். இந்த உரையாடலையும் நம்பிக்கையையும் வரவிருக்கும் நாட்களிலும் தியானிப்போம்.

### நிக்கதேம் எனும் பரிசேயர்

இவர் ஒரு பரிசேயர். இயேசுவின் அரும் அடையாளங்களைக் கண்டு நம்பிக்கை கொண்ட பலரில் இவரும் ஒருவர். ஓர் இரவில் நிக்கதேம் இயேசுவிடம் வந்தார். இரவு என்பது யோவான் நற்செய்தியில் அறியாமை, நம்பிக்கையின்மையைக் குறிக்கின்றது. நிக்கதேம் இந்த நற்செய்தியில் இருளிலிருந்து ஒளிக்கு அழைத்து வரப்படுகின்றார் (காண். 7: 50-51, 19: 39). தொடக்கத்தில் தெளிவில்லாமல் இருந்தாலும் இயேசுவின் அடக்கத்தில் பங்குகொள்கிறார். இத அவரது தெளிவைக் காட்டுகின்றது.

### இறையாட்சிக்கான நிபந்தனை

நிக்கதேம் இயேசுவிடம் வரும்போதே '...நாங்கள் அறிவோம்' எனும் நிலைப்பாட்டோடு வருகின்றார். இயேசு பற்றிய அறிவை யாரும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அது அவரது நம்பிக்கையையும் வாழ்வையும் பாதிக்கும் என்றில்லை. இயேசுவோ அவரை மறுபடியும் பிறக்க அழைக்கின்றார். அது தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறப்பதாகும். தண்ணீரில் திருமுழுக்குப் பெறும்போது தூய ஆவி மேலிருந்து இறங்குவார். இது மேலிருந்து பிறப்பதை அடையாளப்படுத்துகின்றது. நிக்கதேம் உலக மக்களை அடையாளப்படுத்த (நாங்கள் அறிவோம்...), இயேசு விண்ணுலகை அடையாளப்படுத்தினார் (நாங்கள் பேசுகிறோம்...).

மொத்தத்தில் அறிவோடு நின்ற நிக்கதேமை இயேசு இறையாட்சியைப் பார்க்கவும், அதனுள் உட்படவும் அழைத்தார். அறிதலிலிருந்து (3: 2), இறையாட்சியைப் பார்க்கவும் (3: 3), இறையாட்சியினுள் உட்படவும் நிக்கதேம் வழிநடத்தப்படுகின்றார். பிறப்பு என்பது புதிய தொடக்கத்தைக் குறிக்கின்றது.

- நிக்கதேம் நம்பிக்கையோடு இயேசுவிடம் வந்தார். அவரது அறிவு குறுகியதாக இருந்தாலும் இயேசு அவரை பொறுமையோடு வழிநடத்தினார்.
- எனது புத்தக அறிவல்ல, இயேசு அனுபவமே எனக்கு முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 – செவ்வாய் - சித்திரை 2009

திப 4: 32–37 திபா 93: 1–2, 5 யோவா 3: 7–15

### *வாழ்வு*

இயேசுவின் பயணம் பற்றி நற்செய்தியில் வாசிக்கிறோம். இது சாதாரண பயணம் அல்ல. மண்ணையும் விண்ணையும் நோக்கிய இயேசுவின் பயணமிது. நிக்கதேமுடன் இயேசுவின் உரையாடல் இதை வெளிப்படுத்துகின்றது.

**இயேசு யார்?**

இயேசுவே மாட்சிமை மிக்கவர். அவர் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தவர். அவரே விண்ணகத்திற்கு ஏறிச் செல்லவும் முடியும். இந்த சிந்தனை இயேசுவின் சிலுவையோடு தொடர்பு கொண்டுள்ளது. இயேசுவின் மனித அவதாரமும் சிலுவையில் ஏற்றப்படுதலும் (அவரது மரணம்) ஒன்றோடொன்று பிணைந்துள்ளன. சிலுவையின் வழியேதான் மீட்பு, மகிமை, புகழ்ச்சி, மாட்சிமை. சரீர ரீதியாக இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டார். இறையியல் ரீதியாக அவர் மாட்சிமை பெறுகின்றார். சிலுவையில் தொங்கப்படுதல் என்பது அவமானச் செயல். ஆனால் அதுவே மீட்பின், மகிமையின் செயலுமாகும்.

**சிலுவையில் வெண்கலப் பாம்பு**

எகிப்தியர் பாம்பு, முதலை, வண்டுகளை தெய்வங்களாக வணங்கி வந்தனர். இதே எகிப்தியர் பத்து கொள்ளை நோய்களின்போது தாம் வணங்கிய இந்த மிருகங்களாலேயே கொல்லப்பட்டனர் (விப 8, 10). ஆனால் இஸ்ரயேலரை கடவுள் பாம்புகளைக் கொண்டு தண்டித்தாலும் வெண்கலப் பாம்பின் மூலமாக அவர்களைக் காத்தார். வாழ்வு கொடுத்தார். இது அவர்களுக்கு மீட்பைக் கொடுத்தது.

கடவுள் குணமாக்குபவர், காப்பவர். உயர்த்தப்பட்ட பாம்பு மீட்புக்கு அடையாளமாகும். மானிட மகன் சிலுவையில் உயர்த்தப்பட்டதும் மீட்பின் அடையாளமே. மரணம் என்று வந்தாலும் அதையும் ஏற்று வெளிப்படுத்தப்படும் அன்பு உயர்ந்தது, மகிமை மிக்கது. சிலுவையில் தொங்கிய இயேசு தனது அன்பை வெளிப்படுத்தினார். தந்தையும் தனது மகனை மரணம் வரைக்கும் அனுப்பி உலகிற்குத் தனது அன்பை வெளிப்படுத்தினார்.

✝ தம் மகனில் நம்பிக்கை கொள்ளும் எவருக்கும் தந்தை வாழ்வளிக்கிறார். இதுவே தந்தையின் விருப்பம், கொடை, அன்பின் வெளிப்பாடு.

✝ தந்தையின் அன்பின் நன்மைத்தனங்களைப் பெற்று வாழ அவரது மகனிலும் நம்பிக்கை கொண்டு அதை வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திபா 5: 17–26 திபா 34: 1–8 யோவா 3: 16–21

## ஒளி

தீமை செய்வோர் ஒளியை வெறுக்கின்றனர். அவர்கள் ஒளியிடம் வருவதில்லை என்றார் இயேசு. வாழ்வு தரும் ஒளியாம் இயேசுவிடம் நம்பிக்கையோடு வந்து வாழ்வு பெற அனைவருக்கும் அழைப்பு உண்டு.

### இருளை விரும்பும் மனிதர்

இயேசுவைத் தமது பகையாளிகளாகப் பார்த்தவர்கள் பலர். யூதத் தலைமைக்கு இயேசு எப்போதும் ஒரு சவாலாகவும், தடையாகவும் இருந்தார். இயேசுவில் ஒரு மாற்றத்தையோ வித்தியாசத்தையோ இவர்கள் கண்டிருப்பார்கள். தமது வாழ்வின் வெளிவேடங்களை இயேசு வெளிச்சத்திற்குக் கொண்டுவந்த போது இவர்களால் எதிர்த்துப் பேச முடியவில்லை. இயேசுவின் போதனைகளில் அதிகாரம், அர்த்தம், வாழ்வு இருந்ததையும், அவரது போதனைகளில் அசாதாரண சக்தி இருந்ததையும் யூதத் தலைவர்கள் அறிந்திருப்பார்கள்.

ஆயினும் இவர்கள் தமது சுயநலப் போக்குகளிலிருந்தும், அதிகார மோகத்திலிருந்தும் விடுபட முடியாமல் இருந்ததால் இயேசுவின் போதனைகள் இவர்களுக்கு கசப்பாகவே இருந்திருக்கும். இருளில் வாழ்ந்தவர்கள் ஒளியைக் கண்டும் இருளிலேயே தொடர்ந்து வாழ்வதை விரும்பினார்கள். தமது பாதுகாப்பு, வசதிகளுக்காக இவர்கள் ஒளியை அழிக்க முயன்றாலும் அது முடியாமல் போனது.

### ஒளியை விரும்பும் மனிதர்

இவர்களில் இருந்து பரந்த மனதோடு அனைத்தையும் பார்த்து இயேசுவில் ஒளி, உண்மை உள்ளது என்பதை உணர்ந்து இயேசுவிடம் வந்தவர் நிக்கதேம். உண்மையை அறிந்து அந்த உண்மையின் வழியில் வாழ விரும்பினார். சந்தேகங்களோடு வந்தவர் பின்பு இயேசுவின் சீடரானார். யோவான் நற்செய்தியில் நாம் காண்பதைப்போல இறைமகனில் நம்பிக்கை கொண்டதால் நிக்கதேம் நிலைவாழ்வை சுவீகரித்துக் கொள்கிறார். நம்பி வந்தவருக்கு வாழ்வு கிடைக்கிறது.

✝ இயேசுவிடம் வந்து வாழ்விற்குத் தேவையான வழிகாட்டலைப் பெற்று வாழத் துடிக்கும்போது அவரது அருளை வாழ்வில் அனுபவிக்கலாம்.

✝ ஆண்டவரின் உயிர்ப்பு பலருக்குப் பல நன்மைகள் தந்ததுபோல எனது வாழ்விலும் ஆசீராக அமைய அவரில் ஆழமான நம்பிக்கையை வளர்ப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 – வியாழன் - சித்திரை 2009

*திப 5: 27–33 திபா 34: 1, 8, 16–19 யோவா 3: 31–36*

***சான்று***

வாக்கு, வாழ்வு மூலமாக இயேசு சான்று பகர்கின்றார். அதை ஏற்போர் யார்? ஏற்று வாழ்வு பெறுவோர் யார் என்று சிந்தித்துப் பார்க்கத் தூண்டுகின்றது இன்றைய நற்செய்தி. இதை நான்கு பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கலாம்.

**1. இயேசு வாழ்வு தருபவர்**

இறைமகன் இயேசுவில் நம்பிக்கை கொள்வோர் வாழ்வை அடைவர். அவர் அனைவரையும்விட மேலானவர். கண்டவற்றையும் கேட்டவற்றையும் பற்றி சான்று பகர்பவரும் அவரே. அவர் தந்தையிடமிருந்து வருகிறார். அனைவரையும் மீட்கவென வருகிறார்.

**2. கடவுளின் அன்பு**

தம் மகனுக்குக் கடவுள் தம் ஆவிக்குரிய கொடைகளைக் கொடுக்கிறார். அவரில் அன்பு வைத்து அனைத்துப் பொறுப்புகளையும் கொடுக்கிறார். இது தந்தைக்கும் மகனுக்குமிடையே உள்ள ஆழமான உறவையும் காட்டுகின்றது. தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதை மகன் குறிக்கோளாகக் கொண்டுள்ளதால் இருவருக்குமிடையே உள்ள அன்புறவு, நம்பிக்கை வளர்கிறது.

**3. மகனை ஏற்றுக்கொள்வோர்...**

மகனின் சான்றை ஏற்றுக் கொள்வோருக்கு வித்தியாசமான நல்ல அனுபவம் காத்திருக்கின்றது. இது இறையனுபவம். இந்த அனுபவத்தைப் பெறுவோர் கடவுள் உண்மையானவர், நீதியுள்ளவர், அன்புள்ளவர், வாழ்வு தருபவர் என்பதையும் உணர்ந்துகொள்கிறார். மொத்தத்தில் அவர் நிலை வாழ்வையும் பெறுகின்றார்.

**4. மகனை ஏற்றுக்கொள்ளாதோர்...**

இவர்கள் மண்ணுலகைப் பற்றியே அதிகம் பேசுவர். இவர்கள் மானிட மகனில் நம்பிக்கை வைக்காமல் வரக்கூடிய சந்தர்ப்பங்களையும் இழந்து விடுவர். இவர்கள் வாழ்வை இழந்து விடுவது மட்டுமல்ல, கடவுளின் சினத்திற்கும் ஆளாவார்கள். ஏனெனில் இவர்களது சிந்தனை, செயல்கள் எல்லாம் உலகைச் சார்ந்தவையாக இருக்கும்.

☆ இன்று நான் மகனை ஏற்றுக்கொள்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 - வெள்ளி - சித்திரை 2009

திப 5: 34-42 திபா 27: 1, 4, 13-14 யோவா 6: 1-15

### *அந்திரேயா*

இயேசுவின் வாழ்வில் பல தனிநபர்களையும் அவர்களது விசேடமான பண்புகளையும் காண்கிறோம். மரியா, யோசேப்பு, திருமுழுக்கு யோவான், பேதுரு, மகதலா மரியா, மூன்று பெண்கள், யூதாசு, நிக்கதேம் என்று பலரைக் குறிப்பிடலாம். இவர்கள் செய்தது நல்லதோ தீயதோ அனைத்தும் இன்று எமக்குப் பெரும் பாடமாக அமைந்துவிடுகின்றன. இந்த வரிசையில் இன்று நாம் அந்திரேயா எனும் திருத்தூதரின் பங்களிப்பையும் அவரது செயல் தரும் செய்தியையும் தியானிப்போம்.

**அறிமுகம் செய்தல்...**

அந்திரேயா பேதுருவின் சகோதரர். பேதுருவோடு இவர் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இயேசுவால் அழைக்கப்படுகின்றார் (மத் 4: 18-19). இயேசுவோடு வாழ்ந்த இவர் திருத்தூதராகவும் அழைப்புப் பெறுகின்றார் (மத் 10: 2). யோவான் நற்செய்தியில் இவர் திருமுழுக்கு யோவானின் சீடராக இருந்ததாகவும் இயேசு தங்கும் இடத்தைப் பார்க்கச் சென்ற இரு சீடர்களில் இவரும் ஒருவராகக் காட்டப்படுகின்றார். இவரது சிறப்பு என்ன?

1. மெசியாவைக் கண்டோம்... இயேசுவோடு தங்கி இயேசு அனுபவம் பெற்ற இவர் தன் சகோதரன் பேதுருவிடம் சென்று, 'மெசியாவைக் கண்டோம்' என்றார். இவ்வாறு சீமோன் பேதுருவை ஆண்டவரிடம் அழைத்து வந்தார் (யோவா 1: 37-42).

2. மக்கள் திரண்டுவிட்டார்கள். இவர்களை திருப்பி அனுப்புவது நல்லதல்ல. பசியோடு இருக்கும் இவர்களுக்கு உணவு கொடுங்கள் என்று இயேசு பணிக்க இப்போது என்ன செய்வது என சீடர்கள் திண்டாடினர். அந்திரேயா முன்வந்து ஒரு சிறுவனை அறிமுகம் செய்து அங்கு ஒரு புதுமை நடைபெறுவதற்குக் உதவியாகின்றார் (யோவா 6: 8-10).

3. கிரேக்கர் பிற இனத்தவர்கள். இவர்கள் வழிபாட்டுக்காக கோவிலுக்கு வந்திருந்தனர். இந்த கிரேக்கர் இயேசுவைக் காண விரும்பினார்கள். அப்போது அந்திரேயாவும் பிலிப்பும் இடைநிலையாளர்களாக செயல்பட்டு இயேசுவை அறிமுகம் செய்துவைக்க முயல்கின்றார்கள் (யோவா 12: 20-22).

தனித்து செயல்பட்டவர் அந்திரேயா. இவர் செய்ததெல்லாம் இயேசுவை அடுத்தவர்க்கு அறிமுகம் செய்ததே. **எமது பணியும் இதுவல்லவா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1பேது 5: 5–14 திபா 89: 2–3, 6–7, 16–17 மாற் 16: 15–20

## நற்செய்தியாளரான தூய மாற்கு திருவிழா

மாற்கு நற்செய்தியாளர் பன்னிரு திருத்தூதருள் ஒருவரல்ல. யோவான் மாற்கு என்பது இவரது முழுப் பெயர். இவர் தூய பவுலின் முதலாவது மறைபரப்புப் பயணத்தில் பங்கேற்றவர் (திப 13: 13). திருத்தூதர் பேதுருவுக்கும் துணையாக இருந்தவர். பேதுருவிடமிருந்து பல விடயங்களைக் கற்று தனது நற்செய்தியை எழுதினார் என்பது பலரது கருத்து. இயேசு கொடுத்த இறுதி கட்டளை இன்றைய சிந்தனைக்குப் பயன்படுகின்றது.

சீடர்கள் இயேசுவின் உயிர்ப்பு பற்றிய பல செய்திகளைக் கேட்டு குழம்பிப்போய் நம்ப மறுத்தாலும் இயேசு இவர்களுக்குக் காட்சி தந்து நம்பிக்கை ஊட்டினார். தொடர்ந்து தனது கடைசி பணிப்பையும் கொடுத்தார். இந்த பணிப்பு திருச்சபையின் பணியையும் சக்தியையும் வெளிப்படுத்துகின்றது.

**1. நற்செய்தி முழக்கம்**

திருச்சபைக்கு நற்செய்தி முழக்கப் பணி உண்டு. இயேசு பற்றிய அனுபவம் பெற்று அந்த அனுபவத்தை அடுத்தவரோடு பகிர்ந்து கொள்ள வேண்டியது ஒவ்வொரு கிறிஸ்தவரின் கடமை, பொறுப்பு, அழைப்பு. மாற்குவும் அதையே செய்தார்.

**2. குணமாக்கும் பணி**

மக்களின் உடல் நலனையும் ஆன்மீக நலனையும் கவனிக்க வேண்டியதும் திருச்சபையின் பணியே. இன்றும் இயேசுவின் பெயரால் பல குணமாக்கல்கள் நடைபெறுவதைக் காண்கிறோம்.

**3. சக்திமிக்க திருச்சபை**

திருச்சபை இயேசுவால் உருவாக்கப்பட்டது. இயேசுவே அதன் சக்தி. ஒரு கிறிஸ்தவர் தனது வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுக்க ஆண்டவரே நிறைவான சக்தியைத் தருகின்றார். ஆண்டவரின் சக்தியே அங்கத்தவர்களை ஒன்றாக்கி அவருக்கு சான்று பகரவும் வைக்கின்றது.

**4. ஆண்டவரின் பிரசன்னம்**

ஆண்டவர் தனது திருச்சபையின் தலையாகத் திகழ்கின்றார். நாம் அவரது உறுப்புகளே. அவரது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதும், அவரது புகழ் ஓங்க வாழ்ந்து காட்டுவதுமே எமது கடமை. 'கடவுள் நம் சார்பில் இருக்கும்போது, நமக்கு எதிராக இருப்பவர் யார்?' (உரோ 8: 31).

**இன்று நான் கடவுள் சார்பில் இருக்கிறேனா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஸ்கா காலம் 3ம் ஞாயிறு
## 26 - சித்திரை 2009

*திப 3: 13-15, 17-19 திபா 4: 1, 6, 8 1யோவா 2: 1-5 லூக் 24: 35-48*

### *செயல்*

இயேசுவின் உயிர்ப்பு பல நிலையில் இருந்தவர்களுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. விசேடமாக இயேசுவின் சீடர்கள் இயேசு வந்து தன்னை வெளிப்படுத்தும் வரைக்கும் குழம்பியே இருந்தனர். அவர்கள் அந்த அறையிலேயே இருந்துவிட முடியாது. கிறிஸ்து தொடங்கிய திருச்சபை ஒரு அறைக்குள் முடங்கிவிட முடியாது. எனவே இயேசுவின் பணிப்பின்பேரில் சீடர்கள் எங்கும் சென்று போதிக்கத் தொடங்கினார்கள். மனமாற்றம், ஒப்புரவு, அன்பு வாழ்வு இவர்களது அடிப்படை செய்தியாகவும் அமைந்தது. இன்றைய ஞாயிறு வாசகங்கள் தரும் வழிகாட்டலைப் பார்ப்போம்.

### இயேசுவின் பணிப்பு

சீடர்களுக்குத் தோன்றிய இயேசு அவர்களது மந்த உள்ளங்களைக் கடிந்து கொண்டார். துடிப்புடன் செயல்படவும் அழைக்கின்றார். தன்னை, தனது கைகள், கால்களைக் காட்டி, வேக வைத்த மீன் துண்டை சாப்பிட்டு அவர்களது சந்தேகங்களைப் போக்கினார். பின் இறைவாக்குகளைக் குறிப்பிட்டு தனது உயிர்ப்பு பற்றிய நம்பிக்கையை உறுதிப்படுத்தினார். அவர்களது மனக் கண்களைத் திறந்து மனமாற்றத்திற்கான செய்தியையும் கொடுக்கின்றார்.

#### *1. இயேசுவின் உயிர்ப்பு உண்மையானது*

இயேசு உண்மையில் உயிர்த்துவிட்டார். இது வெறும் பிதற்றல் அல்ல. அவர் தன்னை காண்பித்து நிரூபித்தும் விட்டார். எனவே உயிர்ப்பு உண்மையா என்று வாதிட்டு நேரத்தை வீணடிப்பதில் அர்த்தமில்லை.

#### *2. சிலுவையின் அவசியம்*

மெசியாவின் துன்பம், உயிர்ப்பு, நற்செய்தி முழக்கம் பற்றிய இறைவாக்கு களை இயேசு சீடர்களுக்கு நினைவூட்டினார். அதன் உண்மைகளை சீடர்களும் புரிந்துகொண்டனர்.

#### *3. பணியின் அவசரம்*

மனமாற்றத்திற்கான செய்தியை, அழைப்பை இவர்கள் உடனேயே தொடங்க வேண்டும். திருச்சபை இந்த அறையினுள் முடங்கிவிட முடியாது. அது வேகத்தோடே செயல்பட வேண்டும். அதற்கான சக்தியைக் கொடுக்க தூய ஆவியின் வருகையையும் இயேசு அறிந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. சக்திக்காகக் காத்திருத்தல்**

இயேசுவின் இந்த பணிப்பை நிறைவேற்ற சீடர்களுக்குத் தேவையான சக்தி அவசியம். எனவே இவர்கள் அந்த சக்திக்காகக் காத்திருக்க வேண்டும்.

உரிய நேரம் வந்தபோது சீடர்கள் இயேசுவின் அறிவுரைகளை நிறைவேற்றத் தொடங்கினார்கள். அவர்களை யாராலும் தடுக்க முடியவில்லை. ஏனெனில் தூய ஆவி அவர்களோடு இருந்து அனைத்தையும் கற்பித்தார், நினைவூட்டினார். பணிக்குத் தேவையான ஆர்வத்தைக் கொடுத்தார்.

**பேதுருவின் அருளுரை**

பேதுரு கால் ஊனமுற்றவரைக் குணமாக்கியது கண்டு மக்கள் மலைத்துப் போய் நின்றனர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பேதுரு உரையாற்றினார். மனமாற்றம் அவரது செய்தியின் கருப்பொருளாகியது.

**1. ஆண்டவரைப் புறக்கணித்தீர்கள்**

இயேசுவை நீங்கள் புறக்கணித்து அவரை மறுதலித்தீர்கள் என்று நேரடியாகவே குற்றம் சுமத்தினார் பேதுரு. பிற இன அதிகாரியாகிய பிலாத்து அவரை விடுவிக்க முயன்றபோதும் நீங்கள் இயேசுவை மறுதலித்தீர்கள் என்றார். அவர் குற்றமற்றவர், வாழ்வுக்கு ஊற்றானவர். அவரிடமிருந்து வாழ்வு பெறுவதற்குப் பதிலாக அவரது வாழ்வை முடித்து விட்டீர்கள் என்றார்.

**2. உங்களது அறியாமை**

பேதுரு நேரடியாக மக்கள் மீது குற்றம் சுமத்தினாலும் அவர்கள் செய்தது அறியாமையாலேயே என்பதையும் வலியுறுத்தினார். கடவுளின் திட்டத்தில் இது நடைபெற வேண்டும்.

**3. என்ன செய்ய வேண்டும்**

எனவே மக்கள் மனம்மாறி இயேசுவிடமே திரும்ப வேண்டும் என்பது பேதுருவின் அடிப்படைப் போதனை. மக்களின் தவறை விளக்கிய பேதுரு எதிர்காலத்தில் நல்லது நடக்க மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் குறிப்பிடுகின்றார். இது மக்களது உள்ளங்களை இழகச் செய்திருக்கும். புதுமையைப் பார்த்தவர்கள் இப்போது போதனையைக் கேட்டார்கள். செயல்பட வேண்டியது மக்களின் கடமை.

குழம்பியிருந்த சீடர்களை இயேசு பொறுமையோடு வழிநடத்தினார். வாழ்வின் சவால்களாலும், இழப்புக்களாலும் இன்று நாமும் இயேசுவின் வழிகாட்டல்கள் பற்றிய சந்தேகங்களோடு குழம்பிப்போய் இருக்கலாம்.

அதே ஆண்டவர் பொறுமையோடு எம்மையும் வழிநடத்துகிறார் எனும் அசைக்க முடியாத நம்பிக்கை எமக்கு வேண்டும். திறந்த மனதோடு அவரது வழிகாட்டலைப் பெற்று பணிந்திருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 - திங்கள் - சித்திரை 2009

திப 6: 8-15 திபா 119: 23-24, 26-27, 29-30 யோவா 6: 22-29

### உணவு

இயேசுவைத் தேடிவந்த மக்களின் மனநிலையை அறிந்தவராக இயேசு நல்ல செய்தியைக் கொடுக்கிறார்.

**அழிந்து போகும் உணவுக்காக...**

இயேசுவிடம் மக்கள் திரளாக வரத் தொடங்கினார்கள். அவர் பல புதுமைகள் செய்கிறார், மக்களது நோய்களைக் குணமாக்குகிறார் என்று அறிந்து நல்ல எண்ணத்தோடு இவர்கள் வந்தனர். மக்களின் தேவைகள் அறிந்து இயேசு அப்பங்கள் பலுகச் செய்து வயிறாற உண்ணவும் செய்தார். எனவே இயேசு எமது அனைத்துத் தேவைகளையும் போக்குவார் என்று எதிர்பார்த்து அவரிடம் மக்கள் தொடர்ந்து வரத்தொடங்கினார்கள். நம்பிக்கை, ஆச்சரியத்தோடு தொடங்கி இப்போது சுயநலமாக மாறிவிட்டது. எனவே இயேசு எச்சரித்தார், உண்மை நிலைக்கு அவர்களை வழிநடத்தினார்.

**அழியாத உணவுக்காக...**

மக்கள் அடையாளங்களை எதிர்பார்த்தோ, மேலும் உண்ண உணவை எதிர்பார்த்தோ வந்தால் அது தவறு. இவர்கள் அழியாத உணவுக்காக உழைக்க வேண்டும் என்பது இயேசுவின் எதிர்பார்ப்பு, போதனை.

செய்தியை உணர்ந்தவர்கள் அவரிடமே தாம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். தம் செயல்கள் கடவுளுக்கு ஏற்ற செயல்களாக இருக்க தாம் என்ன செய்ய வேண்டும்? 'கடவுள் அனுப்பியவரை நம்புவதே கடவுளுக் கேற்ற செயல்' என்றார் இயேசு. இந்த நம்பிக்கை மட்டும் போதுமா?

நம்பிக்கை செயலுக்கு அழைத்து வரும். இயேசுவில் நம்பிக்கை கொள்ளும் எவரும் அவரது கட்டளைகளையும் கடைப்பிடித்து வாழ ஆசிப்பார். அப்போது நிறைவாழ்வு அமையும். இயேசுவின் சீடர்கள் அவரில் நம்பிக்கை வைத்திருந் தார்கள். இயேசுவும் அவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களைக் கொடுத்தார். விசேடமாக இயேசுவின் உயிர்ப்புக்குப் பின்பு இவர்களுக்கு சிறப்பான வழிகாட்டல் தேவைப்பட்டது. வழிகாட்டலைப் பெற்று தெளிவு பெற்றவர்கள் செயல்பட ஆரம்பித்தார்கள்.

இன்று எனது வாழ்வில் பொருட்களையும் ஆடம்பரங்களையும் தேடி அலைகின்றேனா அல்லது உண்மையான ஆன்மீக அனுபவத்திற்குச் செல்ல விரும்பி ஆண்டவரிடம் வருகின்றேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 - செவ்வாய் - சித்திரை 2009

*திப 7: 51–8: 1   திபா 31: 2–3, 5–7, 16–20   யோவா 6: 30–35*

***அடையாளம்***

இயேசுவே வாழ்வு தரும் உணவு. இந்த உண்மையை இந்நாட்களில் வரும் தியானங்களில் பார்ப்போம். பாலைநிலத்தில் கொடுக்கப்பட்ட மன்னாவும் இயேசு தரும் உணவும் ஒப்பிடப்படுகின்றது.

**நிலையற்ற உணவு...**

அன்று பாலைநிலத்தில் மோசே கொடுத்த மன்னா எனும் உணவு அவர்களுக்கு தந்தையின் வழிகாட்டலின் அடையாளம். மக்களின் முறைப் பாடுகளின் விளைவாக இந்த மன்னா கடவுளால் கொடுக்கப்படுகின்றது. இங்கு மக்கள் கடவுளில் நம்பிக்கை இழந்திருந்தனர். ஆனால் கடவுளின் இந்த மன்னா வழங்கும் செயல் மக்களது நம்பிக்கையை வளர்த்திருக்கும். இதை அவர்கள் மறக்க மாட்டார்கள். இங்கு இயேசு பல அரும் அடையாளங் களைச் செய்தாலும் இயேசு உண்மையில் மெசியா என்பதை அறியவும் இயேசுவின் வார்த்தைகளில் நம்பிக்கை கொள்ளவும் உறுதியான அடையாளம் இவர்களுக்குத் தேவைப்படுகின்றது. மோசே பணித்த செயல்களைச் செய்வது இவர்களுக்குக் கடினமானதாக இருக்கவில்லை.

**நிலையான உணவு...**

அன்று கடவுள் மோசே மூலமாக மன்னா எனும் உணவை யூத மக்களுக்குக் கொடுத்தார். இது வரலாறு. இன்று இயேசுவே உண்மை உணவாக வானின்று அதே கடவுளால் அனுப்பப்படுகின்றார். இயேசு தன்னையே உணவாகத் தருகின்றார். இந்த உணவு யூதர் எனும் ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு மட்டுமல்ல. உலகம் அனைத்திற்குமானது. இதன் மூலமாக மக்கள் மோசேக்குக் கொடுத்த முன்னுரிமையைக் குறைத்து கடவுளுக்குக் கொடுக்க வேண்டிய நம்பிக்கையை வலியுறுத்தினார் இயேசு. இயேசுவே வாழ்வு தரும் உண்மையான உணவு என்பதன் விளக்கங்களை வரும் நாட்களில் தியானிப்போம்.

❁ இன்று நாமும் அடையாளங்களைத் தேடிச் செல்வதுண்டு. அவை திருப்தி கொடுக்கவில்லையெனில் மனமுடைந்து போவதுமுண்டு.

❁ இயேசுவில் எமது நம்பிக்கை நாம் எதிர்பார்க்கும் அடையாளங்களைக் கொண்டதாக இருந்தால் ஏமாற்றங்களைத் தவிர்க்க முடியாது.

❁ ஆண்டவரில் எனது நம்பிக்கை எதில் தங்கியுள்ளது என்பதை அடிக்கடி மீளாய்வு செய்து தெளிவாயிருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 - புதன் - சித்திரை 2009

திப 8: 1-8 திபா 66: 1-7 யோவா 6: 35-40

### *நிலைவாழ்வு*

இயேசுவே வாழ்வு தரும் உணவு. இதை எவ்வாறு புரிந்துகொள்வது? பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் தரும் செய்திகளைப் பார்ப்போம்.

### இயேசுவின் எதிர்பார்ப்பு

வாழ்வு தரும் உணவு நானே எனும் இயேசுவின் வார்த்தைகள் பழைய ஏற்பாட்டில் மன்னாவோடு ஒப்பிடப்படுகின்றது. இஸ்ரயேலருக்கு பாலைநிலத்தில் மன்னா கொடுக்கப்பட்டது. இது வானிலிருந்து வந்த உணவு. இவர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் சென்றதும் மன்னாவுக்குப் பதிலாக 'தோரா' எனும் சட்ட நூல் கொடுக்கப்பட்டது. இவ்வாறு வானிலிருந்து கொடுக்கப்பட்ட உணவிற்கும் சட்டத்திற்கும் உள்ள தொடர்பை மக்கள் உணர்ந்தார்கள். பின்பு உணவே தோராவாக உணரப்பட்டது. தோராவில் கடவுள் தனது எண்ணத்தை வெளிப்படுத்துகின்றார்.

புதிய ஏற்பாட்டில் இயேசு தோரா எனும் சட்ட நூலை அடையாளப் படுத்துகின்றார். இயேசுவே வாக்கு மனுவானவர், அவரே கடவுளின் வெளிப்பாடு, அவரே வாழ்வு தரும் உணவு. தந்தையின் விருப்பம் யாரையும் அழியவிடக்கூடாது. இதுவே தந்தையின் நோக்கம். இங்கு இதுவே இயேசுவின் விருப்பமாகவும் மாறுகின்றது. தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் இயேசு உறுதியாக இருக்கின்றார். அதற்காகவே விண்ணகத் திலிருந்து இறங்கி வந்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

### மக்களின் செயல்பாடு

இயேசுவே புதிய மன்னா, புதிய சட்டம், புதிய வெளிப்பாடு என்றால் மக்கள் எவ்வாறு செயல்பட வேண்டும்? 'அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும்.' இவ்வாறு இயேசுவில் நம்பிக்கை வைப்போர் அந்த நம்பிக்கையை வாழ்வில் வெளிப்படுத்துவர். இந்த நம்பிக்கை ஒருவருக்கு நிலைவாழ்வு கொடுக்கும். வாழ்வு கொடுக்கும் இயேசுவே அவரில் நம்பிக்கை வைப்போருக்கும் நிலைவாழ்வு தருவார் என்பது தெளிவு.

- இயேசுவில் எனது நம்பிக்கை செயலில் காட்டப்பட வேண்டும்.
- துன்பங்கள், ஏமாற்றங்கள், இழப்புகள் வரும்போது எனது நம்பிக்கை வளர்கின்றதா அல்லது குறைகின்றதா என்று ஆராய்ந்து பார்ப்பது நல்லது.
- ஆண்டவரில் எனது நம்பிக்கை எனக்கு வாழ்வு தரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 - வியாழன் - சித்திரை 2009

திப 8: 26-40 திபா 66: 8-9, 16-17, 20 யோவா 6: 44-51

### இறைவழிகாட்டல்

இயேசுவை அறிந்துகொள்ளவும் அவரில் நம்பிக்கை வைக்கவும் தந்தையின் உதவு, செயல்பாடுகள் பற்றி இயேசு நற்செய்தியில் குறிப்பிடு கின்றார். இதன் உண்மைகளைப் பார்ப்போம்.

**தந்தையின் செயல்பாடு**

***1. இறைத் தந்தையின் அருள்***

தந்தையின் செயல்பாடு இன்றி யாரும் தன்னிடம் வர இயலாது என்பது இயேசுவின் போதனை. மக்களைவிட கடவுளே மீட்பு சரித்திரத்தில் அதிக பங்காற்றுகின்றார். கடவுளின் ஆவியின் தூண்டுதலாலேயே ஒருவர் இயேசுவிடம் வருகிறார். எனவே கடவுளின் உதவியின்றி யாரும் இயேசுவில் நம்பிக்கை வைக்க முடியாது.

***2. இறைத்தந்தையின் கற்பித்தல்***

பழைய ஏற்பாட்டு சிந்தனைப்படி இறையாட்சியில் அனைவரும் கடவுளால் கற்றுக்கொடுக்கப்படுவர் எனும் இறைவாக்குகளை இயேசு குறிப்பிடு கின்றார் (காண். எசா 54: 13, எரே 31: 31-34). இங்கு கேட்பதில் மட்டுமல்ல, கற்றுக்கொள்வதிலும் இருக்க வேண்டிய அவசியத்தை இயேசு வலியுறுத்துகின்றார். ஏனெனில் கேட்பதால் மட்டும் ஒருவர் இறையுண்மை களையும் மறையுண்மைகளையும் சரியாகப் புரிந்துகொள்ள மாட்டார். மாறாக, அவற்றை மேலதிக வழிகாட்டலின் மூலமே புரிந்துகொள்ள முடியும்.

**வாழ்வுதரும் உணவு இயேசு**

இயேசு தமது தலைவர் மோசேயைவிட பெரியவரா என்று யூதத் தலைவர்கள் குழம்பியிருந்தனர். அதுபற்றி இயேசுவிடமே வாதிட்டும் உள்ளனர். மோசே கொடுத்த மன்னா நிலையற்றது. அது உடல் பசியை மட்டும் போக்க வல்லது. ஆனால் இயேசு தரும் உணவு வாழ்வு தருவது. அது நிலையானது, ஆன்மீகப் பசியைத் தீர்ப்பது. இதுவே இன்று உலகிற்குத் தேவை. இந்த உணவே ஒருவரை நிலைவாழ்விற்கு அழைத்துச் செல்லும். இதை அனைவரும் புரிந்துகொள்ளவில்லை.

❋ விவிலியம், வழிபாடுகள், எமது அனுபவங்கள், தூய ஆவியின் வழிகாட்டல் போன்றவற்றின் மூலமாக கடவுள் என்னை வழிநடத்துகின்றார்.

❋ கடவுளின் வழிகாட்டலை திறந்த மனதோடு ஏற்கின்றேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01 – வெள்ளி - வைகாசி 2009

கொலோ 3: 14–15, 17, 23–24 திபா 90: 2–4, 12–16 மத் 13: 54–58

## *தொழிலாளரான தூய யோசேப்பு*

இன்று தொழிலாளர் தினம். தொழிலாளர்களின் பாதுகாவலராக தூய யோசேப்புவை நினைவுகூர்ந்து மீட்பு வரலாற்றில் அவரது பங்களிப்பைத் தியானிக்க திருச்சபை அழைக்கிறது.

### யோசேப்புவின் பணி

மரியாவுக்கு மண ஒப்பந்தமாயிருந்த யோசேப்பு ஒரு நீதிமான். அவர் கனவில் வழிநடத்தப்பட்டு தன் பணியை குறையின்றி செய்கிறார். மரியாவை ஏற்றுக்கொண்டது, பெயர் பதிவு செய்ய எருசலேம் நோக்கிய பயணம், குழந்தையைக் காக்க எகிப்து நோக்கிய பயணம், மீண்டும் கலிலேயா வந்தது, சமய கடமைகளுக்கு எருசலேம் சென்றது என்று தன் பணியையும் கடமைகளையும் முறையாக இவர் செய்து முடித்தார். குடும்ப, அரச, சமய கடமைகளை நிறைவேற்றியதோடு யோசேப்பு பற்றிய செய்தி நற்செய்திகளில் இல்லை. சிறிய பணி, அது இறைபணி. பொறுமையோடும் பொறுப்போடும் பணிவோடும் அவற்றை செய்து முடித்தார் யோசேப்பு.

### ஆண்டவருக்காக...

தூய பவுல் கொலோசையருக்கு எழுதிய திருமடலில் கிறிஸ்தவரின் பணி, அர்ப்பணம் பற்றிக் குறிப்பிடுகின்றார். கிறிஸ்தவர் ஆண்டவரில் நிலைத்திருக்கிறார். தனது நிலை, பணி எதுவாக இருந்தாலும் ஆண்டவரின் மகிமைக்காக செய்ய வேண்டும். அன்பில் ஒருவர் நிலைத்திருக்க வேண்டும். தூய பவுலின் கருத்துப்படி ஒருவர் அடிமை நிலையில் அழைக்கப்பட்டாலும் கொடுக்கப்பட்ட பணியை ஆண்டருக்காக செய்கிறோம் எனும் மனநிலையோடு நிறைவேற்ற வேண்டும். அப்போது அப்பணியில் அர்ப்பணம், அன்பு, நன்றியுணர்வு இருக்கும். அந்த மனநிலையே அடுத்தவர்க்கு சிறப்பான சான்றாகி அவர்கள் ஆண்டவரைப் புகழ சந்தர்ப்பமாகிவிடும்.

யோசேப்பு தொடக்க முதல் இந்த மனநிலையோடு செயல்பட்டார். அதனால் இன்று திருச்சபை அவரைப் போற்றுகின்றது. தனது சொந்த சூழ்நிலை, எதிர்காலம், இன்பத்தை அவர் கருத்திற்கொள்ளாது ஆண்டவர் பணியை அவர் முன்னுரிமையாகக் கொண்டு செயல்பட்டார்.

கிறிஸ்துவால் அழைக்கப்பட்ட நான் எந்த மனநிலையோடு எனது கடமைகள், பொறுப்புகளை நிறைவேற்றுகின்றேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திப 9: 31-42 திபா 116: 12-17 யோவா 6: 60-69

## நம்பிக்கை

இயேசுவின் போதனையை ஏற்க முடியாத நிலையில் அவரது சீடர்கள் சிலர் அவரை விட்டு விலகுவதையும் பேதுருவின் விசுவாச அறிக்கையையும் நற்செய்தி தருகின்றது. இயேசுவின் போதனைகளை அறிவாற்றலால் பார்த்தவர் களையும் நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டவர்களையும் இன்று பார்ப்போம்.

### இயேசுவை நம்ப மறுத்தவர்கள்

இயேசு அப்பங்களைப் பலுகச் செய்தபின் வாழ்விக்கும் உணவு பற்றிப் பேசினார். மக்கள் அவரது புதுமையைக் கண்டு தமது உலகத் தேவைகளைப் போக்க வல்லவர் அவரே என நம்பி அவரிடம் வரத் தொடங்கினார்கள். ஆனால் இயேசுவோ நிலைவாழ்வு தரும் உணவு பற்றிப் போதித்தார். இதை முழுமையாக அனைவரும் புரிந்துகொள்ளவில்லை. ஏனெனில் அவர்கள் இந்த மனித நிலையிலிருந்து பார்த்தார்கள். விசுவாசக் கண்களால் அறிய முயலவில்லை. இவ்வாறு இயேசுவை எதிர்த்தவர்கள் இரு பிரிவினர்:

**1. யூதாசு** ~ யூதாசு தன்னைக் காட்டிக் கொடுப்பான் என இயேசு இந்த சூழ்நிலையில் குறிப்பிட்டார் (காண். யோவா 6: 70). இயேசுவைக் காட்டிக் கொடுக்கும் எண்ணம் யூதாசுவில் நுழைந்துவிட்டது. இரவுணவின்போது அந்த எண்ணத்தை நிறைவேற்ற யூதாசு புறப்பட்டான் (யோவா 13: 2, 27, 30).

**2. சீடர்கள் பலர்** ~ இவர்கள் இயேசுவின் போதனைக்குப் பின்னால் இருக்கும் புதுவாழ்வைப் புரிந்துகொள்ளாமல் அவரை விட்டு விலகினார்கள். ஏனெனில் இயேசுவின் போதனை பெரும் சவாலாக இவர்களுக்குத் தோன்றியது.

### இயேசுவை நம்பியவர்கள்

இயேசுவின் போதனைகள் புதிராகவோ, சவாலாகவோ இருந்தாலும் அவற்றில் நம்பிக்கை வைத்து அவரைத் தொடர்ந்தவர்கள் பலர். அவர்களுக்கு இயேசு காட்டிய வழியைத் தவிர வேறு வழி தெரியவில்லை. எனவேதான் பேதுரு அனைவருக்கும் சார்பாக இயேசுவிற்கு தனது நம்பிக்கையைத் தெரிவித்தார். 'நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள்,' 'அர்ப்பணமானவர்,' 'அறிந்து கொண்டோம்,' 'நம்புகிறோம்' போன்றன யோவான் நற்செய்திக்குரியவை.

✝ இயேசுவில் எமது நம்பிக்கை என்ன? எனது கல்வி, தொழில், ஆற்றல்கள், பதவி, செல்வத்தில் நம்பிக்கை வைத்துள்ளேனா அல்லது இயேசுவிலா?

✝ கடவுளுடைய வார்த்தை என்னை வழிநடத்தட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஸ்கா காலம் 4ம் ஞாயிறு

**03 - வைகாசி 2009**

*திப 4: 8–12 திபா 118: 1, 8–9, 21–23, 26, 28, 29 1யோவா 3: 1–2 யோவா 10: 11–18*

### ***ஆயர்***

இயேசு உலகிற்கு மீட்பு தர வந்தவர். அடுத்தவர் அவரை ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் அவர் தனது பணியின் நோக்கத்திலிருந்து விலகவில்லை. அவரே மீட்பராக, ஆயராக இருக்கிறார் என்பதை இன்றைய ஞாயிறு வாசகங்கள் குறிப்பிடுகின்றன. இயேசுவை வாழ்வு பெற அழைக்கின்றன.

### பேதுருவின் சாட்சி

பேதுருவும் யோவானும் யூத சங்கத்தால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப் படுகின்றார்கள். ஏற்கெனவே இவர்கள் கால் ஊனமுற்றவரை குணமாக்கி யிருந்தார்கள். இவர்களது போதனையைக் கேட்ட பலர் மனம்மாறியும் இருந்தார்கள். இந்நிலையில் தலைமைச் சங்கத்திற்கு இவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பம் வருகின்றது. இவர்கள் சரியான ஆதாரம் வைத்து தமது செய்தியைக் கொடுத்தார்கள்.

#### *1. கால் ஊனமுற்றவர் நலமடைந்தது (திப 3: 1–10)*

மக்கள் எல்லோரும் நேரடியாகவே பார்த்த ஒரு சம்பவத்திலிருந்து பேதுரு தனது சான்றுக்குச் சென்றார். கோவில் வாயிலில் இருந்த இந்த கால் ஊனமுற்றவரைப் அறிந்த மக்கள், தூக்கிவந்து வைப்பவர்கள், அவருக்கு பிச்சை போடுபவர்கள் என்று பலர் பேதுரு செய்த புதுமைக்குச் சாட்சி. பேதுரு இச் சம்பவத்திலிருந்து இயேசு பற்றிய விவிலிய உண்மையைப் போதித்தார்.

#### *2. யூதத் தலைவர்களின் செயல்*

'நீங்கள் அவரை சிலுவையில் அறைந்தீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிருடன் எழுப்பினார்.' இதுவே பேதுருவின் போதனையின் சாரம். இதைப் பேதுரு தெளிவாக, அழுத்தமாகக் கூறினார். இவர்கள் செய்தது தவறானாலும் இயேசுவோ முதன்மையான மூலைக் கல்லாக திகழ்கிறார் என்றார் பேதுரு. இயேசுவின் பெயரால் நடைபெற்ற புதுமையைக் காட்டி இயேசுவின் மேன்மையை விளக்கினார் பேதுரு.

#### *3. பேதுரு, யோவானின் நம்பிக்கை*

பேதுருவும் யோவானும் கல்வியறிவு அற்றவர்களாக இருந்ததால் இவர்களது துணிச்சலான, உறுதிமிக்க போதனையைக் கேட்டு மக்களும் தலைவர்களும் ஆச்சரியம் அடைந்தனர். தெளிவான ஆதாரமும் இருந்ததால் யாரும் மறுத்துப் பேச முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லாயன் இயேசு

யோவான் 9ம் அதிகாரத்தில் இயேசு இருள்-ஒளி எனும் உருவகத்தைப் பயன்படுத்தி பரிசேயரின் குருட்டுத்தன்மையைக் கண்டித்தார். உண்மையை அறிய விரும்பாதவர்கள் இவர்கள். பத்தாம் அதிகாரத்தில் அதே கருத்தோடு நல்ல ஆயனுக்குரிய உருவகத்தை அவர் பயன்படுத்தினார்.

மனிதாவதாரம் எடுத்த இயேசு நல்ல ஆயன். ஒத்தமை நற்செய்திகளிலும் நல்ல ஆயனுக்குரிய உருவகம் கொடுக்கப்படுகின்றது. தன் மக்களை 'சிறு மந்தை' என்றார் (லூக் 12: 32) இயேசு. காணாமற்போன ஆடு பற்றிய உவமையைப் பாவித்தார் (லூக் 15: 3-7). தன் பாடுகளைப் பற்றிக் குறிப்பிடும்போதும் 'ஆயனை வெட்டுவேன், அப்போது ஆடுகள் சிதறடிக்கப்படும்' என்றும் குறிப்பிட்டார் (மாற் 14: 27, மத் 26: 31).

யோவான் நற்செய்தியில் தரப்படும் ஆயருக்கான உருவகம் இரண்டு நிலையில் குறிப்பிடப்படுகின்றது.

1. ***சரித்திர கண்ணோட்டத்தில்:*** இயேசுவே ஆயராகவும் அவரது விசுவாசிகள் மந்தையாகவும் வர்ணிக்கப்படுகின்றது.

2. ***திருச்சபைக் கண்ணோட்டத்தில்:*** திருச்சபையின் தலைவர்கள் ஆயர்களாகவும் இறைமக்கள் சமூகம் மந்தையாகவும் குறிப்பிடப்படுகின்றது.

## நல்ல ஆயரின் சில பண்புகள்

☆ உண்மை ஆயர் கடவுளிடமிருந்து வருகிறார், கடவுள் பற்றிய அறிவிலும் அன்பிலும் செயல்படுகின்றார்.

☆ வாயில் வழியே செல்கிறார். அவரே மந்தையை மேய்ப்பதற்கு முறைப்படி பணிக்கப்பட்டவர். இயேசு கடவுளிடமிருந்து வந்தவர்.

☆ 'பெயர் சொல்லி அழைக்கிறார்.' உண்மை ஆயருக்கு மந்தை பற்றிய பூரண அறிவும், அன்பும், பராமரிப்பும் இருக்கும்.

☆ 'வெளியே அழைத்துச் செல்கிறார்.' ஆயர் மந்தையைப் பராமரிக்கிறார். அவற்றிற்கு சுதந்திரத்தைக் கொடுத்து பாதுகாக்கிறார்.

☆ 'ஆடுகளுக்கு முன் செல்வார்.' மந்தைக்கு முன்னால் ஆயர் செல்ல மந்தை அவரைப் பின்தொடரும். மந்தைக்கு அவர் நல்ல பாதுகாப்பு.

☆ 'மந்தைக்காக தனதுயிரையும் கொடுக்கிறார்.' மந்தையின் நலனில் உண்மை அக்கறை கொண்ட ஆயர் அவற்றுக்காக எதையும் செய்வார்.

இன்று ஏதோவொரு வகையில் நாமும் பொறுப்புகள் கொண்டவராக வாழ்கிறோம். எமது பராமரிப்பில் உள்ளோரை இயேசு கொண்டிருந்த அர்ப்பணத்தோடு நாம் வழிநடாத்துகின்றோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04 - திங்கள் - வைகாசி 2009

*திப 11: 1-18 திபா 42: 1-2, 43: 3-4 யோவா 10: 1-10*

## நல்ல ஆயர்

நல்லாயன் இயேசு பற்றிய உவமை தொடர்கிறது. இயேசு தனது அர்ப்பணிப்பை யூதத் தலைமையோடு ஒப்பிட்டு அவர்களுக்கு ஓர் செய்தியைக் கொடுக்கின்றார். ஆடு மேய்த்தல் என்பது பாலஸ்தீன மக்களுக்குப் புதிதல்ல. இயேசுவின் பிறப்பின்போது இடையர்களுக்கே முதலில் செய்தி கொடுக்கப்பட்டது. இவ்வாறு நல்ல ஆயர் பற்றிய உவமை எமக்குத் தரும் செய்தி என்னவென்று தியானிப்போம்.

### திருடர், கொள்ளையர்

ஆட்டுக்காகத் தனது உயிரையும் கொடுக்கத் துணியும் ஆயர் உண்மையான ஆயர். ஏனையோர் திருடர், கொள்ளைக்காரர் என்கிறார் இயேசு. ஏனெனில் இவர்களுக்கு தமது மந்தையின் நலவாழ்வைவிட உலகம் சார்ந்த நன்மைகள், தமது பாதுகாப்பு, தமது சுபீட்சமான எதிர்காலம் போன்றவையே முன்னுரிமை பெறுகின்றன. மந்தையிலிருந்து ஆடுகள் தவறிப் போனாலோ, தொலைந்தாலோ கவலையிருக்காது. இவர்கள் ஆடுகளின் நன்மைக்கும் வளர்ச்சிக்கும் தம்மை வருத்தமாட்டார்கள். மொத்தத்தில் இவர்களில் அர்ப்பணம் இல்லை. தாம் எனும் எண்ணமே முதலிடம் பெறுகின்றது.

### மந்தையின் சிறப்பம்சங்கள்

1. 'ஆடு ஆயனின் குரலைக் கேட்கும்.' இது உள்ளார்ந்த செவிமடுத்தல். கிறிஸ்துவையும் அவரது பண்புகளையும் திறந்த மனதோடு ஏற்றல். ஆயனின் குரலுக்கு செவிமடுக்கும் மந்தை ஏனைய ஆயரின் குரலுக்குப் பின்னால் செல்லாது. இது சீடத்துவத்தில் மிக முக்கியமானது.
2. ஆடுகள் ஆயனை அறிந்திருக்கின்றன. ஆயனுக்கும் மந்தைக்கும் ஆழமான உறவு இருக்கும். கிறிஸ்துவும் தனது மந்தையின் மீட்புக்காக வந்தார்.

இன்றைய ஆயர்களும், வழிகாட்டிகளும் மக்களின் வாழ்க்கையையும், இவர்கள் வாழ்வு தரும் துயர், சவால்கள், ஏக்கங்களையும் அறிந்திருக்க வேண்டும். ஆயனுக்கும் மந்தைக்குமான இந்த ஆழ்ந்த உறவு, பரிமாற்றம் யோவான் நற்செய்தியில் முக்கியத்துவம் பெறுகின்றது.

✳ ஆயராக, தலைவராக, பொறுப்பு கொடுக்கப்பட்டவராக எனது அழைப்பு, அர்ப்பணம், பணி என்ன என்பதை உணர்ந்து செயல்படுகின்றேனா?

✳ கிறிஸ்து எனும் நல்ல ஆயரே எமக்கு நல்ல வழிகாட்டியாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05 - செவ்வாய் - வைகாசி 2009

*திப 11: 19-26 திபா 87: 1-7 யோவா 10: 22-30*

### உறவு

இயேசு மெசியா என்பதை உறுதி செய்துகொள்ள மக்கள் பெரும் ஆவலாக இருந்தார்கள். வெளிப்படையாகவே சொல்லும்படி இயேசுவிடம் நேரடியாகக் கேட்கின்றார்கள். இயேசுவோ தனது வாழ்வு பற்றிக் குறிப்பிட்டு அவரது செயல்களே அவர் யார் என்பதற்குச் சான்று என்றார். நல்லாயனாகிய இயேசுவிற்கும் மந்தைக்கும் உள்ள உறவையும் இயேசுவிற்கும் அவரது தந்தைக்கும் உள்ள உறவையும் பார்ப்போம்.

**ஆடுகள் என் குரலுக்கு...**

தன் ஆடுகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார் இயேசு. அவர் தனது ஆடுகளுக்காக தனதுயிரையும் கொடுக்கிறார். இவ்வாறு மந்தை வளம்பெற வைப்பதே நல்லாயனாகிய இயேசுவின் முழு நோக்கமாகும். தன் மக்களுக்கு நிலைவாழ்வை கொடுக்க வந்தவர் இயேசு. யூதர் தொடங்கி அவரில் நம்பிக்கை வைக்கும் உலக முழுமைக்குமான நிலைவாழ்வு இது.

இயேசுவின் இந்த அர்ப்பணத்தால் மந்தையும் அவரில் தயக்கமின்றி நம்பிக்கை வைக்க உதவுகின்றது. ஏனெனில் அவர் மந்தையையும் மந்தை அவரையும் அறிந்திருக்கிறன. இயேசுவின் வாழ்வு, அர்ப்பணம், பராமரிப்பு, ஏழைகள், உடல் நலமற்றோர் மீது இயேசுவிற்கிருந்த இரக்கம் போன்றவற்றை பார்த்து அறிந்த மக்கள் திரள் திரளாக அவரிடம் வந்தார்கள். இது அவரில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் குறிக்கின்றது.

**தந்தை மகன் உறவு...**

நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம் என்பது இயேசுவின் கூற்று. இது உறுதியானது. தந்தையோடு அவர் வைத்திருக்கும் உறவில்தான் அவரது பணியின் வெற்றியும் அடங்கியிருந்தது. தந்தையின் விருப்பத்தை நிறைவேற்று வதை அவர் உணவாகக்கூட கருதினார்.

இதுபோன்ற உறவின் ஆழத்திற்கே இயேசு எம்மையும் அழைக்கிறார். இயேசு தந்தையில் நிலைத்திருந்ததுபோல நாமும் இயேசுவில் நிலைத்திருந்தால் எமது பணி, அர்ப்பணம், வாழ்வு அர்த்தமிக்கதாக அமைந்துவிடும்.

➠ எனக்கும் இயேசுவுக்கும் உள்ள உறவு ஆழமிக்கதா?

➠ எனக்கும் எனது பராமரிப்பில் இருப்போருக்குமிடையே உள்ள உறவு எப்படி? எப்போதும் இயேசுவில் தங்கி வாழ்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06 – புதன் - வைகாசி 2009

திப 12: 24–13: 5 திபா 67: 1–2, 4, 5, 7 யோவா 12: 44–50

### நம்பிக்கை

இயேசுவில் வாழ்வும் சீடத்துவமும் ஒருவரை கடவுள் அனுபவத்திற்கே கொண்டு செல்ல வல்லது என்பதை இயேசு தனது போதனைகளில் உணர்த்தியுள்ளார். விசேடமாக யோவான் நற்செய்தியில் இந்த உண்மையைக் காணலாம். இறையனுபவம் தரும் நன்மைகளைத் தியானிப்போம்.

**இயேசுவின் கீழ்ப்படிவு...**

'என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்' என இயேசு பிலிப்புவிற்கு ஒருதடவை கூறினார் (யோவா 14: 9). இயேசு கடவுள் வெளிப்பாடு. கடவுள் அவரில் செயல்படுகிறார். அவர் கடவுளின் முழுமையான வெளிப்பாடு எனலாம். இவ்வாறு இயேசு கடவுளுக்கு முழுதாகக் கீழ்ப்படிந்திருக்க அவர் அனைத்தையும் இயேசுவிற்கு வெளிப்படுத்துகிறார். இந்த உறவின் ஆழம் அன்பு, கீழ்ப்படிதலை அடித்தளமாகக் கொண்டுள்ளது. தூய பவுலும் இயேசுவின் கீழ்ப்படிதலை மிகவும் சிறப்பாகக் கூறுகின்றார். சாவை ஏற்கும் அளவிற்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்கு அவர் கீழ்ப்படிந்தார் என்கிறார் தூய பவுல் (காண். பிலி 2: 8). தந்தை சொல்வதையே இயேசு செய்தார்.

**சீடர்களின் கீழ்ப்படிவு...**

இயேசு தன்னில் நம்பிக்கை கொள்வோரும், தன்னைக் காண்போரும் கடவுளையே காண்கிறார் என நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். இயேசு முன்வைக்கும் சீடத்துவம் பற்றி நாமறிவோம். அவரில் நம்பிக்கை கொள்வோர் அவரது கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அவராக மாறவும் துணிய வேண்டும். அவரது மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தால் ஒருவருக்கு வாழ்வுண்டு என்பது உறுதி.

இயேசுவில் நம்பிக்கை, அர்ப்பணம் ஒருவருக்கு நிறைவான நிலை வாழ்வைத் தருகின்றது. அதை அன்று சீடர்கள் அனுபவித்தனர். துன்பங்களின் மத்தியிலும் இயேசுவின் பணி செய்வதைக் குறியாகக் கொண்டு இவர்கள் வாழ்ந்துள்ளனர். வெற்றியும் கண்டனர்.

☞ இயேசுவில் எனது நம்பிக்கையையும் எனது கீழ்ப்படிதலையும் காலத்துக்குக் காலம் ஆராய்ந்து பார்ப்பது மிக நல்லது.

☞ எனது நம்பிக்கை நிறைந்த வாழ்வு எனக்கு நிலைவாழ்வைத் தரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 – வியாழன் - வைகாசி 2009

திப 13: 13–25 திபா 89: 1–2, 20–21, 24, 26 யோவா 13: 16–20

### உறவு

தலைவர்–பணியாளர், தந்தை–இயேசு, இயேசு–சீடர்கள் எனும் வேறுபாடுகளை இயேசு நற்செய்தியில் தெளிவாக்குகின்றார். அவருக்கும் தந்தைக்கும் உள்ள உறவு மிக ஆழமானதாக இருந்தாலும் அவரது பணி தந்தையின் விருப்பமே என இயேசு குறிப்பிடுகின்றார். இயேசுவிற்கும் எமக்கும் உள்ள உறவின் நெருக்கத்தை ஆராய நற்செய்தி அழைக்கின்றது.

**தந்தை-இயேசு உறவு**

நான் அனுப்புகிறவரை ஏற்றுக் கொள்பவர் என்னையும், என்னை ஏற்பவர் என்னை அனுப்பியவரையும் ஏற்றுக்கொள்கிறார் என்றார் இயேசு. அவருக்கும் தந்தைக்கும் உள்ள உறவை இயேசு பல தடவைகள் குறிப்பிடுவதை யோவான் நற்செய்தியில் காண்கிறோம். இந்த உறவு அவருக்கும் இன்று நற்செய்தியைத் தாங்கிச் செல்லும் அனைவருக்கும் அவசியம். அல்லது ஒருவர் பணிவாழ்வில் விரக்தியையே அனுபவிப்பார்.

**தலைவர்-பணியாளர் உறவு**

தந்தையோடு தனக்குள்ள உறவையும், சீடர்கள் தன்னோடு கொண்டிருக்க வேண்டிய உறவையும் இயேசு குறிப்பிட்டாலும் இந்த உறவுகளுக்கிடையே உள்ள இடைவெளியையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை. தூது அனுப்பப் பட்டவர் அனுப்பியவரைவிடப் பெரியவர் அல்ல என்பது இயேசுவின் வாதம். ஒற்றுமை, ஒன்றிப்பு பற்றி பேசும் அதே இயேசு இந்த வித்தியாசத்தையும் குறிப்பிடுகிறார்.

தலைவர் பணியாளர் வேறுபாடுகள் அன்று யூத சமூகத்தில் தெளிவாகவே இருந்தது. ஆனால் புதிய சீடத்துவத்தில் இயேசுவுக்கும் சீடர்களுக்கும் இடையே இருக்கும் கீழ்ப்படிதலைப் பொறுத்தே அவர் முன்வைக்கும் புதிய உறவும் வளர்ச்சியும் வெற்றியும் இருக்கும். இந்த உறவில் சீடர்கள் அனைவரும் நிலைத்து நிற்க முடியவில்லை. யூதாசு, பேதுரு, அவரை விட்டு ஓடிய சீடர்கள் இதற்கு உதாரணம். இது மனித பெலவீனத்தைக் காட்டுகிறது.

- இயேசுவிற்கும் எனக்கும் உள்ள உறவின் ஆழம் என்ன?
- அவருக்குக் கீழ்படிவுள்ள வாழ்வு வாழும்போது நான் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன என்பதை ஆராய்ந்து அவரில் உறுதி பெறுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08 - வெள்ளி - வைகாசி 2009

*திப 13: 26-33 திபா 2: 6-11 யோவா 14: 1-6*

### *உறைவிடம்*

இயேசுவின் 'பிரியாவிடை' உரை நீண்ட உரையாகும். இன்றும் வரவிருக்கும் நாட்களிலும் நாம் அதைத் தியானிப்போம். இந்த உரை தரும் செய்தி மிக ஆழமானது. யோவான் நற்செய்தியாளர் ஆழமாக சிந்தித்து பல மறையுண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

**நம்பிக்கை, அன்பு...**

இயேசுவின் மாட்சி இங்கு இரு பகுதிகளாகத் தரப்படுகின்றது. செல்லுதல், திரும்புதல். அவர் தந்தையிடம் செல்ல வேண்டும். அதேவேளை இயேசு சீடர்களிடம் திரும்புவதாகவும் வாக்களிக்கின்றார். இது சீடர்களுக்கு பெரும் நிம்மதியைக் கொடுத்திருக்கும். ஆனால் இயேசுவின் திரும்புதலை அனுபவிக்க வேண்டுமானால் இரு நிபந்தனைகள் உண்டு.

1. நம்பிக்கை (யோவா 14: 1-4).
2. அன்பு (யோவா 14: 15-24).

ஒருவர் இயேசுவில் நம்பிக்கை கொண்டாலும் இல்லாவிட்டாலும் இயேசு வருவது உறுதி. அவர் உலகில் செயல்படுவார். ஆனால் அவரது சீடர்கள் அவரில் நம்பிக்கை வைத்து, அவரின் புதிய அன்புக் கட்டளையை நிறைவேற்றினால் இயேசுவின் பிரசன்னத்தை அனுபவிக்க முடியும்.

**தந்தை வாழும் இடம்**

தந்தையின் இல்லம் என்பது நிலைவாழ்வை விளக்குவதற்குப் பயன் படுத்தப்படும் உருவகமாகும். இயேசு தந்தையிடம் செல்வதும் தன் சீடர்களுக்கு இடம் ஆயத்தம் செய்யவே. கடவுள் இருக்கும் இடமானது இயேசுவின் போதனை வளர்ச்சியில் விசுவாசிகளின் உள்ளங்களே. தந்தையின் இல்லம் என்பது தொடக்கத்தில் எருசலேம் கோவிலையும் (யோவா 2: 16), பின்பு இயேசுவின் உடலையும் (யோவா 2: 19-22), கடைசியாக அது இயேசுவையும் அவரில் நிலைத்திருக்கும் விசுவாசியையும் குறித்தது. இது தந்தையில் விசுவாசிகளுக்கு இருக்கும் ஆழமான ஆன்மீக ஆழத்தைக் காட்டுகின்றது.

✝ எனக்குள் ஆண்டவரில் நம்பிக்கையும் அன்பும் உண்டா?

✝ எனது நம்பிக்கையையும் அன்பையும் நான் எவ்வாறு என் வாழ்வில் வெளிப்படுத்துகிறேன்?

✝ எனது நம்பிக்கை வாழ்வு என் உள்ளத்தை இறைவன் உறைவிடமாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 ~ சனி - வைகாசி 2009

திப 13 44–52 திபா 98: 1–4 யோவா 14: 7–14

### தந்தை

இயேசுவை அறிந்திருப்பதென்பது தந்தையையே அறிந்திருப்பது போலாகும என்னும் உண்மையை இயேசு நற்செய்தி மூலமாகத் தருகின்றார். இன்று நான் தந்தையை அறிவதற்கு முன்பாக இயேசுவை அறிந்திருக்கின்றேனா? சவால்களை முன்வைக்கிறது இந்த கேள்வி. விடைகாண முயல்வோம்.

**தந்தையை எமக்குக் காட்டும்..**

'ஆண்டவரே, தந்தையை எங்களுக்குக் காட்டும். அதுவே போதும்' என்று பிலிப்பு கேட்க இயேசுவின் போதனை தொடர்கின்றது. இது இயேசுவின் மிக முக்கியமான போதனை. என்னைக் கண்டவர் தந்தையையே கண்டார் என்பது அவரது பதிலின் சுருக்கம். இயேசுவை இந்த சீடர்கள் எந்தளவிற்குக் கண்டார்கள். இயேசுவைக் காண்பது என்பது மனிதராக அவர்கள் முன் நின்ற இயேசுவைக் காண்பது அல்ல. அவரை, அவரது மனநிலை, வாழ்வு, அர்ப்பணம், வாழ்வின் நோக்கம், போதனைகள், பணி போன்ற பலவற்றை அறிந்திருக்க வேண்டும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதே எனது உணவு என்று இயேசு கூறினார். இதிலிருந்து அவர் தன் பணி பற்றிய தொடர்ச்சியான சிந்தனைத் தெளிவோடு இருந்துள்ளார் என்பது தெளிவாகிறது.

**இயேசுவை அறிவது...**

அன்று இயேசுவின் சீடர்கள் அவரை முழுமையாக அறிந்துகொள்ள முடியவில்லை. தமது அறிவு, அனுபவம், சமய சமூகப் பின்னணி, எதிர்பார்ப்பு, மனநிலை போன்றவற்றை அடிப்படையாக வைத்து அவர்களால் இயேசுவை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை என நாங்கள் முடிவுக்கு வரலாம்.

ஆனால் இன்று நான் தந்தையை அறிந்திருக்கிறேனா? அது எவ்வாறு? கடவுள் எவ்வாறு இருப்பார் என அறிய வேண்டுமானால் இயேசுவைப் பார்ப்போம். அவரது செயல்கள், போதனைகள், அன்பின் வெளிப்பாடுகள், பொறுமை, இரக்கம், தீர்ப்பிடாத மனநிலை, வாழ்வு கொடுக்கும் பக்குவம், அவர் உறவுகொண்ட மக்கள், அவர் தேடிச் சென்ற மக்கள், அவர் எதிர்த்தவர்கள், எதிர்த்ததற்கான காரணங்கள், பாடுகளை ஏற்றது, சிலுவை மரணம் போன்றவற்றை ஆழமாகப் பார்த்தால் தந்தையின் அன்பு வெளிப்படும்.

☆ நான் நேரடியாக அறிவது இயேசுவின் வாழ்வு. இயேசுவின் வாழ்வு, இயேசு அனுபவத்திலிருந்து தந்தையின் அன்பை உணர்ந்துகொள்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஸ்கா காலம் 5ம் ஞாயிறு

### 10 - வைகாசி 2009

*திப 9: 26-31 திபா 22: 25-27, 29-31 1யோவா 3: 18-24 யோவா 15: 1-8*

## ***இயேசுவில் நிலைத்தல்***

இயேசுவில் நிலைத்திருப்பதென்பது கிறிஸ்தவர் ஒருவருக்கு மிகவும் முக்கியமானதொன்று. ஒருவர் தனது பணம், கல்வி, பதவி, அந்தஸ்தைப் பயன்படுத்தி பணி செய்யலாம். ஆனால் அவர் ஆண்டவரில் நிலைக்காவிட்டால் பணியில் நிறைவோ முழுமையோ அடைய முடியாது. இந்த உண்மைகளை இன்றைய ஞாயிறு வாசகங்கள் தருகின்றன. இன்று நான் கிறிஸ்துவில் நிலைத்து என் பணி செய்கிறேனா என்று கேட்கத் தூண்டுகின்றன அவை.

**சவுலின் அனுபவம்**

ஆண்டவரால் சவுல் அழைக்கப்பட்டாலும் அவரை சந்தேகக் கண்கொண்டே ஏனைய சீடர்கள் பார்த்தனர். ஏனெனில் இதே சவுல்தான் கிறிஸ்தவர்களின் கைதுகளுக்கும், துன்பங்களுக்கும் காரணமாக இருந்தவர். மனம் மாறிவிட்டேன் என்று பவுல் சீடர்களிடம் வந்தது கிறிஸ்தவர்க்கெதிரான இன்னொரு சூழ்ச்சியாக இருக்கலாம் என்று இவர்கள் சந்தேகித்திருக்கலாம். ஆயினும் பவுலின் அனுபவத்தைக் கேட்டு அவரை ஏற்றுக்கொண்டார்கள். இவ்வாறு ஆண்டவரின் செய்தியும் பணியும் பலர் மூலமாகத் தொடர்ந்தது. இவர்களின் வெற்றிக்கும் புதிய கிறிஸ்தவர்களின் நம்பிக்கை நிறைந்த வாழ்வுக்கும் அடித்தளமாக இருந்தவை என்ன?

***1. ஆண்டவருக்கு அஞ்சி நடந்தது***

ஆண்டவரின் வழிகாட்டலை ஏற்ற கிறிஸ்தவர்கள் அவரில் எப்போதும் நிலைத்திருந்தார்கள். வரவிருக்கும் காலம் கடினமான காலமாக இருந்தாலும் ஆண்டவரே தம்மை வழிநடத்துபவர் எனும் நம்பிக்கை சீடர்களுக்கு உயிர் கொடுத்தது. செயல்பட்டார்கள்.

***2. அமைதியில் திளைத்தது***

கிறிஸ்தவர்க்கு எதிரான துன்பங்கள் தொடர்ந்தாலும் கிறிஸ்தவருக்குள் அமைதி இருந்தது. ஏனெனில் அவர்கள் ஒன்றாயிருந்தார்கள், ஒரே மனதோடு கூடிவந்தார்கள் (திப 2: 42-47).

***3. தூய ஆவியின் துணை***

இயேசு வாக்களித்தவாறே கிறிஸ்தவர்கள் தூய ஆவியின் துணையை பெரிதும் அனுபவித்தார்கள். ஆண்டவரில் இவர்கள் நிலைத்திருந்ததால் இவர்களால் இந்த அனுபவங்களைப் பெற முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உண்மையான திராட்சைச் செடி

தன்னோடு இணைந்திராதவர் நிலைக்க முடியாது என்பது இயேசுவின் போதனை. இந்த சிந்தனை தரும் உண்மை என்ன? இயேசுவின் செல்லுதலையும் திரும்புதலையும் எம் வாழ்வில் அனுபவிக்க திராட்சைச் செடியாகிய அவரில் அதன் கிளைகளாகிய யாவரும் நிலைத்திருக்க வேண்டும். இதற்கு நம்பிக்கையும் அன்பும் நடைமுறையில் வாழ்ந்து காட்டப்பட வேண்டும்.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் திராட்சைத் தோட்டத்திற்கு ஒப்பிடப் பட்டுள்ளது (காண். எசா 5:-7, 27: 2-6, எரே 2: 2-21, 5: 10, 12: 10-11 எசே 15: 1-8, திபா 80: 8-16). மாற்கும் இதே உருவகத்தைப் பயன்படுத்தினார் (காண். மாற் 12: 1-11). ஆனால் யோவான் தன் நற்செய்தியில் கிறிஸ்தவ சமுகத்தையும் இயேசுவையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

'உண்மையான' திராட்சைச் செடி என்பது இயேசுவை மட்டுமே குறித்துக் காட்டுகின்றது. இயேசு ஒருவரே உண்மையான திராட்சைச் செடியாக இருக்க முடியும். இயேசுவின் இடத்தை எந்த உலகத் தலைவர்களும் எடுத்துக்கொள்ள முடியாது. இயேசுவோடு இணைந்திருந்தால் மட்டுமே இவர்கள் மிகுந்த கனி தரமுடியும்.

செடியோடு இணைந்திராத கிளைகள் வெட்டுண்டு தீயில் போடப்படும். ஏனெனில் இவை பலன் கொடுக்கவில்லை.

### சீடர்களின் உறவு

சீடர்கள் யாராக இருந்தாலும் எந்த நிலையில் இருந்தாலும் எப்போதும் திராட்சைச் செடியாகிய இயேசுவில் நிலைத்திருக்க வேண்டும். இவர்கள் யாரும் தனித்து பலன் கொடுக்க முடியாது. எனவே இயேசுவோடு எவ்வாறு ஒருவர் இணைந்திருக்க முடியும்? அன்பு நிறைந்த கீழ்ப்படிவால் ஒருவர் இணைந்திருக்கலாம். யோவா 15: 9-10ல் அன்பும் கீழ்ப்படிவும் ஒருங்கே செயல்படுவதாக காட்டப்படுகின்றன. ஒருவர் இயேசுவை உண்மையாகவே அன்பு செய்தால் அவர் இயேசு முன்வைக்கும் புதிய அன்பின் கட்டளையையும் நிறைவேற்றுவார். இந்த அன்பு உண்மையானது, நிலைப்பது.

### என் வாழ்வில் இயேசு

இயேசுவை என் வாழ்வில் எந்த இடத்தில் வைத்துள்ளேன்? நான் சொத்து, கல்வி, பதவி, புகழ், அந்தஸ்து என்று உயர்ந்துகொண்டு போக எனது திட்டம், பணி, வெற்றி எனும் பெருமித எண்ணம் வளர்ந்து என்னை இயேசுவிடமிருந்து பிரித்துவிடலாம். அலகையின் சூழ்ச்சிக்கு தெளிவாயிருந்து ஆண்டவரில் எப்போதும் நிலைத்திருந்து செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 ~ திங்கள் - வைகாசி 2009

*திப 14: 5-18 திபா 115: 1-4, 15-16 யோவா 14: 21-26*

## ***வழிகாட்டல்***

இயேசு தன் சீடர்களைப் பொறுமையோடு ஆயத்தம் செய்தார். தனது இவ்வுலக காலம் முடிவுறும் நிலையில் நம்பிக்கை, அன்பு, தூய ஆவியின் வழிகாட்டல்கள் பற்றி தன் சீடர்களுக்குப் போதித்து அவர்களைத் திடப் படுத்தினார் இயேசு. ஆண்டவர் எம் பக்கம் இருக்க வேண்டுமா அல்லது நாம் ஆண்டவர் பக்கம் இருக்க வேண்டுமா?

### கடவுள் எம் பக்கம்

மனிதருக்கு பாரிய பிரச்சனைகள் வந்தால் பொதுவாகக் கேட்கும் கேள்வி இதுவே. ஆண்டவர் எம் பக்கம் இருக்கிறாரா? அல்லது ஆண்டவர் எம்மைக் கைவிட்டுவிட்டாரா? இது சரியான கேள்வியா?

இயேசு தம்மோடு இருப்பது சீடர்களுக்குப் பெரிய ஆறுதல். அவர் மனித உருவோடு இருந்தார். யூதத் தலைமையிடமிருந்து வந்த சவால்கள் அனைத்தையும் அவரே தனித்து சமாளித்தார். ஆனால் அவர் சென்றபின் தம்மைத் திடீரென தவிக்கவிட்டுச் சென்றுவிட்டார் என தன் சீடர்கள் கவலை கொள்ளக் கூடாது. இதை உணர்ந்து இயேசு பொறுமையோடு அவர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறி தூய ஆவியின் வழிகாட்டலை வாக்களித்தார். அனால் இயேசு சென்ற பின்பு தூய ஆவியின் செயல்பாடுகள் இருந்தாலும் சீடர்கள் அவரது வழிகாட்டலை உணரவும் வேண்டும். அதுவே அவர்களுக்குப் பெரும் சக்தியாகும்.

### நாம் கடவுள் பக்கம்

ஆண்டவர் சீடர்கள் பக்கம் இருக்கிறார், அவர் தன் சீடர்களை ஒருபோதும் கைவிடார் என்பது உண்மை. ஆனால் சீடர்கள் தம் பக்கம் எப்போதும் இருக்க வேண்டுமென்பதற்காக இயேசு அன்பின் கட்டளையைக் கொடுத்தார். இந்த கட்டளை கடைசியில் ஆண்டவரிடமே கொண்டு செல்லும். 'நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம்' என்றார் இயேசு. ஒருவர் கடவுளின் கட்டளையைக் கடைப்பிடித்தால் பெறும் பெரும் பாக்கியம் இது. இந்த அன்பு நல்லுறவையும், அமைதியையும் ஏற்படுத்தும்.

- கடவுள் என் பக்கம் இருக்கிறாரா என்று கேட்கத் துணியும் நான் கடவுள் பக்கம் நான் இருக்கிறேனா என்று கேட்டதுண்டா?
- அன்பை வாழ்ந்து காட்டினால் அன்பாகிய கடவுளை உணர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12 - செவ்வாய் - வைகாசி 2009**

*திப 14: 19-28 திபா 145: 10-13, 21 யோவா 14: 27-31*

## அமைதி

தன் சீடர்களை வழிநடத்திய இயேசு அவர்களுக்கு தன் அமைதியையும் வாக்களித்தார். ஆனால் இந்த அமைதி உலகம் எண்ணும் அமைதி போலல்ல என்றும் எச்சரித்தார் அவர். இவ்வாறு அவரது போதனையும், உறுதிப்பாடும், வழிகாட்டல்களும் தொடர்கின்றன. இன்று அமைதி என்றால் என்ன?

### உலகப் பார்வையில் அமைதி

யுத்தம் இல்லா நிலை அமைதி என்றும் சத்தம் இல்லா நிலை அமைதி என்றும் உலகம் கருதுகிறது. இன்று யுத்தத்தால் எமது நாடும் இந்த உலகமும் அழிந்துகொண்டிருக்கிறது. வல்லரசு, அதிகாரம், அடக்குமுறை, ஆயுதம், ஆயுத கலாசாரம், யுத்தம், உள்நாட்டுப் போர், பேச்சுவார்த்தை முறிவு, என்பன இன்று நாம் அடிக்கடி கேட்கும் சொற்கள். இவை அமைதியற்ற நிலையையே காட்டுகின்றன. யுத்தம் இல்லையென்றால் அமைதி பிறந்து விட்டது என்று எண்ணுவது தவறானதே.

### இயேசு பார்வையில் அமைதி

அமைதி என்பது உள்ளத்திலிருந்து, நல்ல மனநிலையிலிருந்து, நம்பிக்கையிலிருந்து, நல்லுறவிலிருந்து வரவேண்டும். அதைக் கட்டாயப்படுத்திப் பெற முடியாது. ஆண்டவரை முழுமையாக விசுவசித்து, அவரை அன்பு செய்யும் போது ஒருவருள் அமைதி பிறக்கும். அந்த அமைதியைக் குலைக்க அலகையின் சோதனைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கும். இது பெரும் சவாலாகும். ஆயினும் ஆண்டவரில் ஒருவர் வாழும்போது பிறக்கும் அமைதியைவிட உலகம் தரும் அமைதி பெரிதாகவும் நிலையானதாகவும் இருக்க முடியாது.

ஆண்டவர் தருவது உண்மையான அமைதி, கலப்படமற்ற அமைதி, நிலையான அமைதி. அதற்கு எமக்குள் நம்பிக்கை வேண்டும். அன்பு செயலில் காட்டப்படவும் வேண்டும். தொடக்க திருச்சபையில் திருத்தூதர்கள் சொல்லொன்னா துன்பங்கள் அனுபவித்தாலும் அவர்கள் ஆண்டவரில் அமைதி கண்டார்கள். ஏனெனில் தாம் வாழ்வதும், இயங்குவதும் அவரில் தான் எனும் உறுதியான உணர்வு அவர்களுக்குள் இருந்தது.

- இன்று நான் எதில், எவரில் அமைதியைத் தேடுகிறேன்.
- ஆண்டவரில் நான் அமைதியை அனுபவித்து அமைதி தேடி அலையும் இந்த உலகிற்கும் நிலையான அமைதியைக் காட்டுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 - புதன் - வைகாசி 2009

எசா 61: 9-11 திபா 45: 11-12, 14-17 லூக் 11: 27-28

### பாத்திமா அன்னை விழா

இயேசுவைப் பாராட்ட விரும்பிய ஒருவர் அவரது அன்னையை போற்றினார். ஆனால் இயேசுவின் பதில் அவரது மனநிலையைக் காட்டியது. இறைபணிக்கு அழைக்கப்பட்டவர் யாராக இருந்தாலும் அவர் கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்போதுதான் உயர்வைப் பெறுகிறார். இன்று எனது அழைப்பு, மனநிலையை சிந்திக்க வாசகங்கள் அழைக்கின்றன.

**உணர்ச்சிவசப்படுதல்...**

வாழ்வின் சம்பவங்களால் ஒருவர் மகிழலாம், பெரும் துன்பத்தையும் அனுபவிக்கலாம். இந்த சந்தர்ப்பங்களில் அவர் உணர்வுகளால் உந்தப்பட்டவராக வார்த்தைகளைக் கொட்டலாம். ஆனால் ஒருவருக்கு எதிராக அவை அமையும்போது உறவு முறிவுகள் வந்துவிடுகின்றன. வாய்த் தர்க்கம், கைகலப்பு, பழிவாங்குதல் என்று முறுகல் நிலையும் துன்பங்களும் வந்தவண்ணமே இருந்துவிடும். சண்டைகள், கொலைகள் என்பன இதன் விளைவுகளே. தெளிவாக இருந்து பொறுமையோடு செயல்பட வேண்டியது அவசியம்.

**அழைப்புக்கேற்ப வாழ்வு**

கூட்டத்திலிருந்த ஒரு பெண் நல்ல வார்த்தைகளால் இயேசுவையும் அவரது தாயையும் பாராட்டினார். 'உம்மைத் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்' என்றார். இயேசுவின் போதனைகளில் இருந்த அதிகாரம், வழிகாட்டல், அவரது சக்தி, புகழ அனைத்தையும் பார்த்த இப் பெண் உணர்ச்சிவசப்பட்டு இந்த வார்த்தைகளை கூறியிருக்கலாம். ஆனால் இயேசுவோ அவரை உண்மை நிலைக்கு அழைத்து வந்தார். அதுவே முக்கியம். உணர்ச்சிவசப்படுவது மனித இயல்பு. ஆனால் அதைவிட நாளாந்த விடயங்களில் கீழ்ப்படிவுள்ளவராக வாழ்வதே முக்கியமானது. இதையே இயேசு வலியுறுத்தினார்.

மரியாவும் அதையே தொடக்கமுதல் செய்து வந்தார். தனது அழைப்பை உணர்ந்த அவர் நாளாந்த கடமைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார். அல்லது அவர் எலிசபெத்தை சந்திக்க சென்றிருக்க மாட்டார். ஆண்டவரே அனைத்தையும் பார்த்துக்கொள்வார் என்று சோம்பலாக இருந்திருக்கலாம்.

- இயேசுவின் கட்டளைகளுக்கு நான் முன்னுரிமை கொடுத்து வாழ்கிறேனா?
- மரியாவின் அர்ப்பணம், வாழ்வு, பணிவு என்னை வழிநடத்தட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 – வியாழன் - வைகாசி 2009

திப 1: 15–17, 20–26 திபா 103: 1–8 யோவா 15: 9–11

### அன்பு

அன்பின் செய்தி தரப்படுகின்றது. இது புதிய கட்டளை. ஆழமான செய்திகளைத் தரும் கட்டளை. தூய பவுல் 1கொரி 13ம் அதிகாரத்தில் அன்பின் தன்மைகளை விளக்குகிறார். இயேசு தந்த அன்பின் கட்டளைகளைப் பார்ப்போம். எமது வாழ்வில் அன்பு வாழ்ந்து காட்டப்படுகின்றதா?

**இயேசுவின் அன்பு...**

தந்தையின் அன்பை தெளிவுபடுத்திய இயேசு எம்மையும் அதே அன்பு வாழ்விற்கு அழைத்தார். அவர் அன்பில் வாழ்ந்தவர். இதனால் தந்தையோடு ஆழ்ந்த உறவில் இருந்தார். இது உலகிற்காக தனது உயிரையும் அர்ப்பணிக்கச் செய்தது. இந்த நிலைக்கு இயேசு செல்வதற்கு அவருக்கும் தந்தைக்கும் இருந்த பிரிக்க முடியாத அன்பே காரணமாகும். அதை இயேசுவே நற்செய்தியில் விளக்கினார். இயேசு எப்போதும் தந்தையின் அன்பில் நிலைத்திருந்தார். அதுவே அவரது பலமாக இருந்தது. அதுவே அவரை தன் பணிவாழ்வில் எப்போதும் நிலைக்கச் செய்தது. விசேடமாக அவர் பாடுகளை அனுபவித்தபோது தந்தையின் சக்தி, அன்பு இன்னும் அதிகமாக உணர்ந்திருப்பார்.

**எமது அன்பு...**

இயேசுபோல இன்று நாமும் எம் வாழ்வில் வெற்றி காண வேண்டுமானால் இயேசுவின் அன்பில் நிலைத்திருக்க வேண்டும். இதுவே எமது பலமாகும். இந்த உறவுக்கு இயேசு தன் சீடர்களை அழைத்தார். எமது அன்பு தூயதாக, கலப்படமற்றதாக, சுயநலமற்றதாக அமைய வேண்டுமானால் நாம் இயேசுவோடு இணைந்து செயல்பட வேண்டும். இது எப்படி முடியும்? சீடர்கள் தமது பணிவாழ்வின்போது துன்பங்கள் பல அனுபவித்தனர். கல்லெறி, பழிச்சொற்கள், சிறைவாசம் என்று பல துன்பங்கள். ஆனாலும் இவர்கள் ஆண்டவரில் நிலைத்திருந்ததால் ஆண்டவரின் வழிகாட்டலையும் உணர்ந்தார்கள். தமது பணி பற்றிய தெளிவையும் நிறைவாகப் பெற்றார்கள். இது இவர்களுக்கு அர்ப்பணத்திற்கான அதிக பலத்தைக் கொடுத்தது.

- இன்று நான் இயேசுவில் இணைந்து செயல்படுகிறேனா? அல்லது எனது சுயநல வாழ்வு பற்றிய சிந்தனையில் இருக்கிறேனா?
- இயேசுவில் இணைந்த வாழ்வு எனக்கும் அடுத்தவர்க்கும் அன்பையும் அமைதியையும் நிறைவாகத் தரும் என்பதில் உறுதியாக இருப்போன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 - வெள்ளி - வைகாசி 2009

திப 15: 22-31 திபா 57: 7-11 யோவா 15: 12-17

### *அன்பு*

அன்பு பற்றிய இயேசுவின் போதனை தொடர்கின்றது. உண்மை அன்பு ஒருவரை எந்தளவிற்கு இட்டுச் செல்லும் என்பதை இயேசுவின் போதனைகளிலிருந்து நாம் அறியலாம்.

**அன்பு துணிகிறது...**

'தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட...' இயேசுவின் போதனை ஆழமானது. உயிரைவிட மேலானதை யாரும் கொடுக்க முடியாது. அன்பின் எல்லை அது எனலாம். அந்த உயிரையும் கொடுக்கத் தூண்டுகின்றது அன்பு. அடுத்தவர் உயிரைப் பறிக்கத் துணியும் இந்த உலகில் தனதுயிரையும் கொடுத்தாவது அடுத்தவர்க்கு உயிர்கொடுக்க அழைக்கிறது இயேசு குறிப்பிடும் அன்பு. இது அன்பின் உச்சம். இதை இயேசு வெறும் போதனையோடு நிறுத்திவிடாமல் செயலிலும் காட்டினார். உலகத்தின் மீட்புக்காக தனதுயிரைக் கொடுத்து உலகிற்கு வாழ்வு தந்தார் அவர். அதேபோல இறைத் தந்தையின் அன்பு இயேசுவில் நிறைவாக வெளிப்பட்டது. மனித குலத்தை பாவத்தின் பிடியிலிருந்து மீட்க அவர் செயல்பட்டதை விவிலியத்தில் நாம் வாசிக்கிறோம்.

**அன்பு உறவை வளர்க்கிறது...**

இயேசு தன் சீடரை புதியதோர் உறவிற்கு அழைக்கிறார். 'உங்களை நான் நண்பர்கள் என்றேன்...' நட்பு என்பது ஆழமான உறவு. ஒரு உண்மையான நண்பரிடம் எதையும் பகிர்ந்து கொள்ளலாம். அதில் நம்பிக்கை உண்டு, அடுத்தவர் நலனில் அக்கறையும் உண்டு. தந்தையோடு தனக்கிருக்கும் அன்பையும் உறவையும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறார் இயேசு. இதற்காக ஒரு நிபந்தனையையும் முன்வைக்கிறார். இயேசு கொடுக்கும் கட்டளைகளை நிறைவேற்றுவதே அந்த நிபந்தனையாகும்.

அன்று ஊழியருக்கும் தலைவருக்கும் இடையே இருக்கும் வேறுபாடு யாவருக்கும் தெரிந்ததே. அதை உதாரணமாக வைத்து இயேசு இந்த அழைப்பைக் கொடுத்தார். எனவே சீடர்கள் இயேசுவின் போதனைகள், கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது மனநிலையைக் கொண்டிருக்கும்போது இயேசுவை மகிழ்ச்சிப்படுத்துவர். அவரது நட்பிலும் பங்கேற்பர்.

➠ அடுத்தவரை அன்பு செய்ய நான் முன்வைக்கும் நிபந்தனைகள் என்ன?

➠ எனது தூய அன்பு அடுத்தவர்க்கு வாழ்வு கொடுக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 - சனி - வைகாசி 2009

திப 16: 1-10 திபா 100: 1-3, 5 யோவா 15: 18-21

## தடைகள்

இயேசுவை வெறுத்த உலகம் அவர் சீடர்களையும் வெறுக்கப் போகிறது. இந்த உண்மையை அறிந்திருந்த இயேசு தன் சீடர்களை எச்சரித்தார். இது வெறும் வார்த்தைகளாக இருந்தாலும் தொடக்கத் திருச்சபையில் சீடர்கள் பட்ட துன்பம் இதற்கு சான்றாகின்றது. உலகின் மனநிலையைப் பார்ப்போம்.

### இயேசுவை வெறுத்த யூத உலகம்

இயேசு தனது போதனைகள், வாழ்வு மூலமாக தந்தையின் அன்பையும் இரக்கத்தையும் உலகிற்குக் காட்டி மனம்மாற அழைத்தார். அவரது போதனைகள் பலருக்கு சவாலாக வந்தன. இயேசுவின் புதுமைகள் உலகிற்குத் தடையாக இருந்தன. மனமாற்றத்திற்கான அழைப்பு உலகிற்குக் கசந்தது. ஆயினும் இயேசு தனது நற்பணியைக் குறைக்கவுமில்லை, நிறுத்தவுமில்லை. இதனால் பல முரண்பாடுகளையும், பகைமையையும், பழிவாங்கலையுமே உலகம் வளர்த்தது. வழியும் உண்மையும் வாழ்வுமாக வந்தவர் தனது நிலையிலிருந்து சிறிதும் மாறவில்லை. எனவே அவரது போதனையை வெறுத்த உலகம் அவரையும் வெறுக்கத் தொடங்கியது.

### சீடர்களை வெறுத்த உலகம்

இயேசு இஸ்ரயேல் இனத்தோடு தனது பணியை கட்டுப்படுத்தினார். சிதறுண்ட யூத இனத்திற்காகவே தான் வந்ததாகவும் கூறினார். ஆனால் சீடர்களது பணி யூத உலகையும் கடந்து பல இடங்களுக்கும் பரவியது. இயேசு தனது உலக வாழ்வின் இறுதியிலும் (மத் 28: 18-20), பவுலின் அழைப்பின் போதும் (திப 9: 15) நற்செய்திப் பணி உலக முழுமைக்குமானது என்று குறிப்பிட்டிருந்தார். சீடர்களின் போதனை யூதரில் மட்டுமல்ல ஏனைய சமூகங்களிலும் பல மனமாற்றங்களை ஏற்படுத்தியது. இதனால் பல நிலைகளிலிருந்தும் சோதனைகள், தடைகள், துன்பங்கள் சீடர்களுக்கு வந்தவண்ணம் இருந்தன. இதையே இயேசு சீடர்களுக்கு எச்சரித்திருந்தார். இயேசுவின் பெயரால் சீடர்கள் பல துன்பங்களை அனுபவித்தாலும் அவை இயேசுவிற்காகவே எனும் மனநிறைவோடு அவர்கள் செயல்பட்டார்கள்.

➻ நற்செய்தியை நான் வாழ்ந்து காட்ட முயலும்போது எதிர்கொள்ளும் சவால்கள் என்ன? அவற்றிற்கு நான் எவ்வாறு முகம்கொடுக்கிறேன்?

➻ தடைகள் வரினும் ஆண்டவரின் வழிகாட்டலில் வாழ்ந்திடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஸ்கா காலம் 6ம் ஞாயிறு
## 17 - வைகாசி 2009

*திப 10: 25-26, 34-35, 44-48 திபா 98: 1-4 1யோவா 4: 7-10 யோவா 15: 9-17*

### *அன்பு*

இயேசுவில் ஒருவர் வைத்திருக்கும் அன்பு இயேசுவின் கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும் தூண்டும். இந்த அன்பில் பிறக்கும் உறவால் ஒருவரது வாழ்வும் வளம்பெறும், அவர் அடுத்திருப்பவரையும் வளமான வாழ்வுக்கு அழைத்து வருவார் எனும் செய்தியை இன்றைய ஞாயிறு வாசகங்கள் தருகின்றன. இயேசுவையும் அடுத்திருப்பவரையும் அன்பு செய்யவும் வாழ்வு கொடுக்கவும் எம்மையும் இன்றைய சிந்தனை அழைக்கிறது.

**பேதுருவின் அனுபவம்**

இயேசுவைத் தொடக்கத்திலிருந்து அன்பு செய்தவர் பேதுரு. இயேசுவோடு நெருங்கியிருந்து அவரை அதிகம் அறிந்தும் இருந்தார் அவர். ஆயினும் அவரது மனித பெலவீனத்தால் இயேசுவை மூன்று தடவைகள் மறுதலித்த சம்பவத்தை பேதுரு வாழ்வில் மறந்திருக்கமாட்டார். தனது தவறை உணர்ந்ததும் மனம் நொந்து அழுதவர் அவர்.

தவறு செய்திருந்தாலும் மனம்மாறியபோது இயேசுவால் இன்னும் அதிகமாக அன்பு செய்யப்பட்டார். இந்த அனுபவத்தால் பேதுருவும் இயேசுவை அதிகமாக அன்பு செய்தார். அந்த அன்பின் வெளிப்பாடுகள் பேதுருவின் வாழ்வில் வெளிப்பட்டன.

**பேதுருவும் கொர்னேலியுவும்**

'எழுந்திடும். நானும் ஒரு மனிதன்தான்.' பேதுருவின் காலில் விழுந்த நூற்றுவர் தலைவர் கொர்னேலியுவுக்கு அவரது பதில் இது. தன்னைத் தாழ்த்தி பணிசெய்தவர் பேதுரு. ஆனால் ஏனைய யூதர்களைப் போல பிற இனத்தார் திருமுழுக்குப் பெறுவதானால் அவர்கள் யூத முறைப்படி விருத்தசேதனம் செய்ய வேண்டும் எனும் கொள்கையிலும் பேதுரு இருந்தவர். இந்நிலையில் அவர் ஆண்டவரால் வழிநடத்தப்பட்டு கொர்னேலியுவை எதிர்கொண்டார். இந்த அனுபவம் அவருள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆண்டவரின் கட்டளை இதுவென்றால் அதை நான் தயங்காமல் நிறைவேற்ற வேண்டுமென செயல்பட்டவர் அவர். இது அவரது அன்பின் வெளிப்பாடு. 'ஆண்டவர் ஆள்பார்த்து செயல்படுவதில்லை' என்று கூறி தனது அனுபவத்தைப் பகிர்ந்ததை திருத்தூதர் பணி நூலில் வாசிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பு செய்ய அழைப்பு...**

உண்மை அன்பிற்கு அழைப்பு விடுக்கிறார் இயேசு. அவரது கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்போது அவரில் ஆழமான உறவில் நிலைக்கலாம் எனும் நம்பிக்கையையும் தருகிறார் இயேசு. இந்த செய்தியை மூன்று பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கலாம்.

***1. அன்பில் நிலைத்திருப்பது...***

தனக்கும் இறைத் தந்தைக்கும் இடையேயுள்ள அன்பின் ஆழத்தையும் உறவையும் உதாரணமாக வைத்து அன்பு பற்றிய தன் போதனையைக் கொடுக்கிறார் இயேசு. அவர் எப்போதும் தந்தையில் நிலைத்திருந்தார். மாலை வேளைகள், இரவு என்று பல சந்தர்ப்பங்களில் அவர் தனிமையை நாடி தந்தையோடு செபத்தில் இருந்தார். தந்தை தந்த பணியே அவரது உணவு என்றும் கூறினார். இவ்வாறு தந்தையை முழுமையாக அன்பு செய்த அவர் இறுதிவரைக்கும் அதில் நிலைத்திருந்தார்.

***2. கட்டளைகளைக் கடைப்பிடிப்பது...***

தனது அனுபவத்தை தன் சீடர்களும் பெற வேண்டுமென தன்னில் நிலைத்திருக்கும்படி அவர்களை இயேசு அழைத்தார். இயேசு தன் தந்தைக்குக் கீழ்ப்படிந்து இருந்ததைப்போல தன் சீடர்களும் தனது கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் எனும் உண்மையையும் வலியுறுத்தினார். இதுவே உண்மை. இந்த உண்மையில் நிலைத்தால் வரும் நன்மைகள் என்ன?

***3. ஆழமான உறவுக்கு அறிமுகம்...***

இயேசு தரும் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பவர் இயேசுவோடு நிலையான உறவிலும் ஒன்றிப்பார் எனும் உறுதியையும் இயேசு தன் சீடர்களுக்குக் கொடுத்தார்.

யோவானும் தனது திருமடலில் அன்பைப் பற்றிக் குறிப்பிடும்போது நாம் அவரை அன்பு செய்ததில் அல்ல, மாறாக, அவர் நம்மை அன்பு செய்து தன்னைப் பலியாக்கியதில்தான் அவரது அன்பின் தன்மை விளங்குகிறது என்றார். எனவே கடவுள்தான் நம்மை முதலில் அன்பு செய்தார். அந்த அன்பின் வெளிப்பாடே மீட்புச் சரிதை, இயேசுவின் வருகை, மரணம். இந்த அன்பில் நிலைத்திருக்கவும் பகிரவும் இன்று எமக்கும் அழைப்பு உண்டு.

- இயேசுவை அன்பு செய்வதில் எனக்குள்ள ஆர்வம் என்ன?
- அனைத்துத் தடைகளையும் தாண்டி இயேசுவின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரில் என்றும் நிலைத்திருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 - திங்கள் - வைகாசி 2009

திப 16: 11-15 திபா 149: 1-6, 9 யோவா 15: 26-16: 4

### துன்பம்

சீடர்கள் தம் பணிவாழ்வில் எதிர்கொள்ளவிருக்கும் துன்பங்களை இயேசு முன்னறிவித்தார். இவர்கள் சவால்களும் துன்பங்களும் நிறைந்த சந்தர்ப்பங்களில் நம்பிக்கை இழந்துவிடாதிருக்க வேண்டும் என்பது இயேசுவின் எண்ணம். வாழ்வில் துன்பம் வரும்போது இயேசுவில் நிலைத்திருக்கின்றோமா என்று எம்மைப் பற்றி சிந்திக்கவும் வாசகம் தூண்டுகின்றது.

**நியாயப்படுத்துதல்...**

இயேசு குறிப்பிட்டவாறே சீடர்கள் தமது பணி வாழ்வில் துன்பங்கள் பல அனுபவித்தனர். இதில் நேரடியாக அதிகம் ஈடுபட்டவர் சவுல் எனும் இளைஞர் என்று திருத்தூதர் பணியில் வாசிக்கிறோம். இதில் வித்தியாசம் என்னவென்றால் இவர் யூத மறையைக் காக்கவே கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதாக நம்பியிருந்தார். 'இனம் முழுவதும் அழிந்துபோவதைவிட ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது என்பதை நீங்கள் உணரவில்லை' (யோவா 11: 50) என்று இயேசுவைப் பற்றி கயபா கூறியிருந்தார். இவ்வாறு இயேசுவின் காலம் தொடக்கம் தம் மதம், இனம், மோசே கொடுத்த சட்டம் இவற்றைக் காக்க வேண்டும் எனும் நோக்கத்துடன் கிறிஸ்துவையும் கிறிஸ்தவர்களையும் துன்புறுத்தியவர்கள் பலர் உள்ளனர். எனவே இவர்கள் தமது செயலை நியாயப்படுத்துவார்கள் என்று இயேசு முன்குறித்து வைத்தார்.

**தூய ஆவியின் துணை**

தூய ஆவியின் வருகை, பணி, வழிகாட்டல் பற்றி இயேசு தனது பிரியாவிடை உரையில் பல தடவைகள் குறிப்பிட்டுள்ளார். அவரது வழிகாட்டல் சீடர்களுக்கு அவசியம். இயேசுவிற்குப் பின் தூய ஆவியின் செயலை சீடர்களும் தம் பணிவாழ்வில் உணர்ந்திருந்தனர். அவர் சான்று பகர்வார், நினைவு படுத்துவார், கற்பிப்பார். தூய ஆவியின் சக்தியைப் பெறும் சீடர்கள் திடமடைவார்கள் என்பது சீடர்களின் நம்பிக்கை. ஏனெனில் கடுமையான எதிர்ப்புகளும் சவால்களும் சீடர்களுக்குக் காத்திருந்தன.

☆ என் வாழ்வில் சவால்களை எதிர்கொள்ளும்போது நான் யாரில் நம்பிக்கை கொண்டு அவற்றை எதிர்கொள்கிறேன்?

☆ ஆண்டவரில் நம்பிக்கை என்னை திடப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 – செவ்வாய் - வைகாசி 2009

*திப 16: 22–34 திபா 138: 1–3, 7–8 யோவா 16: 5–11*

## *தூய ஆவி*

தூய ஆவியின் செயல்கள் பல இருந்தாலும் நற்செய்தியில் இயேசு தூய ஆவியின் முக்கியமான பணியைக் குறிப்பிடுகின்றார். பாவம், நீதி, தீர்ப்பு பற்றிய உலகின் கண்ணோட்டம் தவறு என்று காட்டுவார் என்றார் இயேசு. அதன் விளக்கத்தைப் பார்ப்போம்.

### பாவம், நீதி, தீர்ப்பு

தூய ஆவி உலகில் இல்லை, அவர் விசுவாசியில் இருக்கிறார். விசுவாசியின் வாழ்வே நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையே நடைபெறும் போராட்டத்தின் நீதிமன்றமாகும். உலகம் இருளில் இருந்தது. அது ஒளியாம் இயேசுவைத் தேடி மறுத்தது எனும் உண்மையை யோவான் நற்செய்தியில் நாம் காணலாம்.

***1. பாவம்...*** ஏனெனில் அவர்கள் என்னிடம் நம்பிக்கை கொள்ளவில்லை. யோவான் நற்செய்தியில் பாவம் என்பது அவநம்பிக்கையைக் குறித்தது. உலகம் இருளை விரும்பியது. அது இயேசுவை நம்பாததால் பாவத்தில் இருந்தது. ஒளியாம் இயேசுவில் வாழ்வு பெற முயலவில்லை.

***2. நீதி...*** ஏனெனில் நான் தந்தையிடம் செல்கிறேன். இது பாவத்தின்மீது அவர் மேற்கொண்ட வெற்றியைக் குறிக்கலாம். இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டார். நான் தந்தையிடம் செல்கிறேன் என்பது (செல்லுதல்) அவரது மகிமையைக் குறிக்கின்றது. அவர் பாவங்களை அழித்ததன் மூலமாக அவர் நியாயப்படுத்தப்படுகிறார்.

***3. தீர்ப்பு...*** ஏனெனில் இவ்வுலகின் தலைவன் தண்டனை பெற்றுவிட்டான். இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டதன் மூலமாக இவ்வுலகின் தலைவன் தண்டிக்கப்படுகிறான் (யோவா 12: 31). இயேசுவின் சிலுவை மரணம் மனிதர் மீதும் உலகின் மீதும் இருந்த கடவுளின் விபரிக்க முடியாத அன்பை உணர்த்துகின்றது (யோவா 3: 16). உலகம் அவரது அன்பால் மீட்கப்படலாம். ஆனால் உலகம் இருளையும், பழியையுமே விரும்புகின்றது.

✻ இன்று இயேசுவின் முன்னிலையில் நான் கணக்குக் காட்ட முடியுமா?

✻ பாவம், நீதி, தீர்ப்பு பற்றிய எனது மனநிலை என்ன?

✻ எப்போதும் இயேசுவில் நம்பிக்கை வைத்து வாழ்வு பெறுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 - புதன் - வைகாசி 2009

*திப 17: 15, 22-18: 1 திபா 148: 1-2, 11-14 யோவா 16: 12-15*

### தூய ஆவி

உண்மையின் ஆவி சீடர்களை முழு உண்மையை நோக்கி வழிநடத்துவார் என இயேசு வாக்களித்தார். தூய ஆவி பற்றிய போதனையும் வாக்குறுதியும் தொடர்கின்றது. நற்செய்தி தரும் விளக்கம் என்ன?

**உண்மையின் ஆவி**

உண்மைக்கு சான்று பகர இயேசு உலகிற்கு வந்தார் (யோவா 18: 36). பரிந்து பேசும் தூய ஆவி இயேசுவின் சான்று பகரும் பணியைத் தொடர்வார். எனவே இவர் 'உண்மையின் ஆவி' என்றும் அழைக்கப்படுகிறார். இவர் நாசரேத்தூர் இயேசுவின் ஆவி. பரிந்து பேசும் ஆவி இறைமகனின் ஆவி அல்லது இறைவனின் ஆவி மட்டுமல்ல. அவர் இறைவனிலிருந்து மனிதாவதாரம் எடுத்த கிறிஸ்து இயேசுவின் ஆவியுமாகும். எனவேதான் தூய ஆவி சீடரில் வரவேண்டுமென்றால் கிறிஸ்து இறக்க வேண்டும். 'தூய ஆவி இன்னும் அருளப்படவில்லை. ஏனெனில் இயேசு மாட்சிப்படுத்தப் படவில்லை' (யோவா 7: 39) என யோவான் குறிப்பிடுகின்றார்.

**தூய ஆவியின் செயல்பாடுகள்**

1. கற்றுத்தருதல், நினைவூட்டுதல் (14: 26). கற்றுத் தருதல் என்பது தூய ஆவியின் முதன்மையாக பணியாகும். இயேசுவின் போதிக்கும் பணியைத் தொடர்பவர் இவர். இயேசுவின் போதனையை சீடர்களுக்கு நினைவூட்டி, விளக்கி, மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப சீடர்களை உண்மையில் வழிநடத்துவார்.
2. சான்று பகர்தல் (15: 26). சான்று பகர்வதன் மூலம் அவர் சீடர்களைத் திடப்படுத்துகின்றார். இயேசு தனது அமைதியை விட்டுச் சென்றார். இது யுத்தம் அற்ற நிலையல்ல. மாறாக, மீட்பு, வாழ்வு பற்றிய முழுமையாகும்.
3. திடப்படுத்தல் அல்லது தீர்ப்பிடுதல் (16: 8). பாவம், நீதி, தீர்ப்பு பற்றிய உலகின் கருத்து தவறானது என்று எடுத்துரைப்பார்.

இவ்வாறு தூய ஆவியின் பணி சீடர்களுக்கு மிக முக்கியமானது. இயேசுவே அவர்களோடு உடனிருந்து அவர்களைத் திடப்படுத்தி வழிநடத்தினார். பெந்தக்கோஸ்து விழாவின் பின்பு சீடர்களின் துணிவும், போதித்த வேகமும் இதற்கு சிறந்த சான்று.

✻ தூய ஆவியின் வழிகாட்டலை என் கிறிஸ்தவ வாழ்வில் நான் உணர்ந்து செய்படுவேன். அவரில் சக்தி பெற்று சான்று பகர்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 - வியாழன் - வைகாசி 2009

திப 18: 1–8 திபா 98: 1–4 யோவா 16: 16–20

### *சவால்*

கிறிஸ்தவம் ஒரு சவால். இயேசுவின் சீடராக வாழ்ந்து காட்டுவதென்பது பல சவால்கள், தடைகள் நிறைந்தது என்பதை இன்றைய நற்செய்தி காட்டுகின்றது. இரண்டு நிலைகளில் இதைப் பார்ப்போம்.

**காணமாட்டீர்கள் –காண்பீர்கள்**

இயேசு தம்மோடு இருப்பது சீடர்களுக்குப் பெரும் பலமாக இருந்தது. இயேசு போதித்த செய்தியையும் அதன் விளைவுகளையும் சீடர்கள் முழுமையாக இன்னும் அறிந்திருக்கவில்லை. ஆண்டவர் தம்மோடு இருக்கிறார் எனும் எண்ணம் அவர்களுக்கு இருந்ததால் அந்தக் கவலை இருக்கவில்லை. ஆனால் நேரம் வருகின்றது என்பதை அறிந்த இயேசு அவர்களை ஆயத்தம் செய்தார். இன்னும் சில காலத்தில் என்னைக் காணமாட்டீர்கள் என்று சொன்னதுமே சீடர்கள் குழம்பிப் போனார்கள். அவர் மறையப் போகிறாரா அல்லது இறக்கப் போகிறாரா? நம் தலைவர் இயேசு இல்லாமல் நாம் என்ன செய்வது போன்ற பல கேள்விகள் அவர்களை உலுப்பியிருக்கும்.

**துயரம் - மகிழ்ச்சி**

வரவிருக்கும் கலாபனைகளை மனதில் இருத்தி இயேசு தன் சீடர்களை எச்சரித்தார். இயேசுவின் சீடத்துவத்தில் ஒருவர் அனைத்தையும் இழக்கவும் அனைத்தையும் தாங்கவும் ஆயத்தமாயிருக்க வேண்டும். சீடத்துவத்தில் எல்லாவற்றையும் இழப்பது என்பது மக்களை கடவுளிடம் அழைத்து வரவும் நிலைவாழ்வுக்கு தகுதி பெறவுமே.

➻ ***துயருறுவீர்கள்:*** இந்த துயரைக் கண்டு உலகம் மகிழும். ஏனெனில் கிறிஸ்தவ சான்று உலகின் போக்கிற்கு முரணாக இருக்கப்போகின்றது. இருளை நாடும் உலகு சீடர்களை எதிரிகளாகப் பார்த்து அவர்களை அழிக்கவே விரும்பும்.

➻ ***மகிழ்ச்சியாக மாறும்:*** உலகில் சீடர்கள் இயேசுவின் பெயரால் துயருறுவது நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ளவே. இந்த நிலை அவர்களுக்கு நிறைவான மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பது தெளிவு.

✳ உண்மைக் கிறிஸ்தவராக வாழ்வதில் நான் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன? அடுத்தவரை கிறிஸ்துவிடம் அழைத்துவர என் முயற்சிகள் என்ன?

✳ இயேசுவுக்காக என்னை இழக்கவும் தயாராவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - வெள்ளி - வைகாசி 2009

*திப 18: 9-18 திபா 47: 1-8 யோவா 16: 20-23*

## துயரம்

இயேசு தொடர்ந்து சீடர்களை எச்சரிக்கிறார். அவர்கள் எதிர்கொள்ளப் போகும் துயரம் பற்றி அவர் சீடர்களுக்குக் கூறினாலும் அதைவிட அவரைக் காண்பதில் அவர்கள் அடையவிருக்கும் மகிழ்ச்சியையும் இயேசு குறிப்பிட்டார். நற்செய்தி தரும் நம்பிக்கையைத் தியானிப்போம்.

### மகிழ்ச்சியின் நிலைகள்...

**1. *துயருறும் தாய்:*** குழந்தை பெற்றெடுக்கும் ஒரு தாய் பேறுகாலத்தின்போது மிகவும் துன்பத்தை அனுபவிப்பார். ஆனால் அந்த துன்பங்களையும் கடந்து தனக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகின்றது என்பதை நினைத்து அல்லது குழந்தை தோன்றிவிட்டது என்று எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைவார். இந்த மகிழ்ச்சியால் தன் வேதனையை மறந்துவிடுவார்.

தூய பவுலும் தனது கலாத்திய சமூகத்திற்கு தனது பணி பற்றிய மனநிலையைக் கூறும்போது 'உங்களில் கிறிஸ்து உருவாகும்வரை உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்' (கலா 4: 19) என்றார். துன்பங்களையும் கடந்துவரும் மகிழ்ச்சி ஒரு தாய்க்கே தெரியும்.

**2. *நேரடியாகக் காண்பது:*** இயேசுவை இரு நிலைகளில் நேரடியாக சீடர்கள் பார்க்கப் போகிறார்கள். அவரது உயிர்ப்பிற்குப் பின்பும் இறுதி நாட்களிலும் அவரைக் காண்பார்கள். அப்போது இவர்களது மகிழ்ச்சி நிறைவாகும். ஆயினும் பணியின்போது இயேசுவின் பெயரால் துன்பங்கள் வந்தாலும் இயேசு அவர்களோடு இருக்கிறார் எனும் தைரியம் சீடர்களை வலுப்படுத்தும்.

### இயேசுவின் பெயரால்...

தான் சீடர்களை விட்டுச் செல்வதாக இயேசு கூறினாலும் அவர்களுக்குத் தேவையான நம்பிக்கையையும் கொடுத்தார். அவரது மறைமுகமான பிரசன்னம், இறைத் தந்தையின் ஆசீர் என்பன உறுதி செய்யப்பட்டன. என் பெயரால் தந்தையிடம் கேட்டால் அவர் உங்களுக்குத் தருவார் என்று வாக்களித்தார் இயேசு. இதுவும் அவர்களுக்குத் துணிவையும் வலிமையையும் தந்திருக்கும்.

எம் வாழ்வில் துயர்கள் வருவது தவிர்க்க முடியாதது. ஆனால் இயேசு எம்மோடு இருக்கிறார் என்பது பெரும் ஆறுதல்.

உண்மைக் கிறிஸ்தவ வாழ்வில் துயர் வந்தாலும் உண்மையாம் கிறிஸ்துவிற்குத் தவறாது சான்று பகர்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 – சனி - வைகாசி 2009

*திப 18: 23–28 திபா 47: 1–2, 7–9 யோவா 16: 23–28*

### தந்தை

பணிக்கென செல்லும் சீடர்கள் தந்தையோடும் இயேசுவோடும் நெருக்கமாக இணைந்திருக்க வேண்டுமென்பதை நற்செய்தி வலியுறுத்துகிறது. சீடர்கள் தனது கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்போது தந்தையும் அவர்களை அன்பு செய்து வழிநடத்துவார். இந்த நம்பிக்கையை சீடர்களின் உள்ளங்களில் விதைக்கிறார் இயேசு. எமது நம்பிக்கையையும் ஆராய அழைக்கிறது வாசகம்.

**தந்தையின் அன்பு...**

'தந்தையும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளார்' என்றார் இயேசு. ஏனெனில் சீடர்கள் இயேசுவின் வருகை, பணியை நம்பி அவரை ஏற்றுள்ளனர். எனவே தந்தையின் அன்பு இரண்டு பண்புகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1. இயேசு மீது அன்பு வைத்தல். இது மேலும் இன்னொரு செயலுக்கு ஒருவரைத் தூண்டும். அதுவே இயேசு கொடுத்த அன்புக் கட்டளையை நிறைவேற்றுதல். இயேசுவை அன்பு செய்வது அவரது கட்டளையை நிறைவேற்றுவது இரண்டும் இணைந்துள்ளன.

2. இயேசு கடவுளிடமிருந்து வந்தார் என நம்புவது. மெசியா என்பவர் கடவுளின் மகன், அபிஷேகம் செய்யப்பட்டவர் என்று பல பொருள்படும். இயேசுவோடு வாழ்ந்த சீடர்கள் அவரை அதிகம் அறிந்திருப்பார்கள். எனவே இயேசுவை மீட்பர் என்றோ கடவுளிடமிருந்து வந்தவர் என்றோ ஏற்றுக்கொள்வது இவர்களுக்குக் கடினமாக இருந்திருக்காது. பேதுருவும் 'ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன' என்று தனது நம்பிக்கையை வெளியிட்டிருந்தார்.

**தந்தையின் பராமரிப்பு...**

தன் பெயரால் இறைத் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் தருவார் எனும் நம்பிக்கையையும் இயேசு கொடுத்தார். பணிவாழ்வில் இவர்கள் துன்பங்களை அனுபவித்தாலும் இறைத் தந்தையின் ஆறுதல், வழிகாட்டல் நிச்சயம் இருக்கும் எனும் நம்பிக்கையும் கிடைக்கின்றது. இயேசுவால் தந்தையும் அறிமுகம் செய்யப்படுகின்றார்.

இறைவனின் வழிகாட்டலும் பராமரிப்பும் இன்றும் எமக்குண்டு. அதை உணர்ந்து அவரது மீட்புப் பணியில நானும் பங்கேற்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஸ்கா காலம் 7ம் ஞாயிறு
## 24 - வைகாசி 2009

*திப 1: 1-11 திபா 47: 1-2, 5-8 எபி 9: 24-28, 10: 19-23 மாற் 16: 15-20*

## ஆண்டவரின் விண்ணேற்பு

ஆண்டவரின் விண்ணேற்புத் திருவிழா இன்று. ஆண்டவர் தந்தையிடம் செல்ல வேண்டும். சென்று தான் வாக்களித்தவாறே உலகிற்கு தூய ஆவியை அனுப்பி வைக்க வேண்டும். தூய ஆவியைப் பெறும் அவரது சீடர்கள் துணிந்து எங்கும் சென்று நற்செய்தி முழக்கம் செய்ய வேண்டும். இறைவனின் மீட்புத் திட்டத்தில் இந்த நிகழ்வும் முக்கிய கட்டமாகின்றது. இயேசுவின் இறுதி அறிவுறுத்தல்களையும் அவரது விண்ணேற்பையும் தாங்கி வருகின்றன இன்றைய ஞாயிறு வாசகங்கள். அவை தரும் சிந்தனைகளைப் பார்ப்போம்.

### காத்திருங்கள்...

'என்னிடமிருந்து கேட்டறிந்த தந்தையின் வாக்குறுதி நிறைவேறக் காத்திருங்கள்' என்றார் இயேசு. தனது விண்ணேற்பிற்கு முன்பு ஆண்டவர் இந்த கட்டளையைத் தன் சீடர்களுக்குக் கொடுத்தார்.

அந்த வேளையிலும் அவர்கள் ஆண்டவரிடம் இஸ்ரயேலுக்கு ஆட்சியுரிமை தரும் காலம் இதுதானோ என்று கேட்க ஆண்டவரின் பதில் வித்தியாசமாக இருந்தது. தந்தை குறித்து வைத்துள்ள காலத்தையும் நேரத்தையும் அறிவது உங்களுக்குரியது அல்ல என்றார். இறையாட்சி பற்றிய தனது போதனையில் இயேசு அது ஏற்கெனவே வந்துவிட்டது, உங்களிடையே தொடங்கிவிட்டது, வளர்ந்து வருகின்றது என்று பல உவமைகளின் மூலமாகப் போதித்துள்ளார்.

### சாட்சிகளாக இருப்பீர்கள்...

இயேசு ஏற்கெனவே தன் சீடர்களை ஆயத்தம் செய்ததுபோல இப்போதும் அவர்களது முதன்மையான பணியை நினைவூட்டினார். உலகின் கடையெல்லைவரைக்கும் இயேசுவிற்கு இவர்கள் சாட்சிகளாக இருப்பார்கள். இஸ்ரயேலில் யூதருக்கு என்று தொடங்கிய பணி இறைவனின் திட்டத்தின் படி உலகின் அனைத்து மூலைகளுக்கும் தொடர வேண்டும். எனவே இவர்களது பணி தொடரவும் வெற்றியளிக்கவும் மனித சக்தியைவிட அபார சக்தி இவர்களுக்குப் பலமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும். இந்தப் பின்னணியில் தூய ஆவியை வாக்களித்தார் இயேசு. அதுவரை இவர்கள் பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உலகெங்கும் சென்று...

இயேசு தொடங்கிய பணியைத் தன் சீடர்கள் தொடர வேண்டுமென அவர் சீடர்களை ஆயத்தம் செய்தார். அவர்களைத் தன்னோடு வைத்திருந்து அவர்களுக்குப் பொறுமையோடு போதித்து, விளக்கம் கொடுத்து வழிநடத்தினார். இப்போது சீடர்கள் மீட்பு சரித்திரத்தில் சரித்திரம் படைக்கப் போகிறார்கள். பல துன்பங்களை எதிர்கொண்டாலும் சீடர்கள் தம் பணி செய்ய வேண்டும். யூதரோடு தொடங்கிய இப்பணி இப்போது உலகெங்கும் பரவ வேண்டும். ஆண்டவரோடு மூன்று வருடங்களாக வாழ்ந்தவர்கள் சீடர்கள். அவரையும் அவரது மனநிலையையும் தந்தையோடு அவருக்கிருந்த ஆழமான உறவையும் இவர்கள் அறிந்திருப்பார்கள். இதுவும் சீடர்களுக்கு பெரும் சக்தியாகும்.

திருமுழுக்கின் முக்கியத்துவத்தையும் இயேசு குறிப்பிட்டார். அது ஆண்டவரில் நம்பிக்கையின் அடையாளமாகும். நம்பிக்கை கொண்டோர் மீட்புப் பெறுவர். மீட்புக்குத் திருமுழுக்கு முதன்மையானதாகும். நம்பிக்கை கொண்டோரில் காணப்படும் அடையாளங்களையும் இயேசு குறிப்பிட்டார். திருத்தூதர் வழியாக இவை நடைபெற்றன (திப 5: 12).

1. என் பெயரால் பேய்களை ஓட்டுவர். பேதுரு நடந்து வரும்போது அவரது நிழல் உடல் நலமற்றோரின் மீது படவைக்க மக்கள் முயன்றனர். அவர் உடல் நலமற்றவர்களையும் தீய ஆவிகளால் துன்புற்றோரையும் குணமாக்கினார் (திப 5: 16)

2. புதிய மொழிகளைப் பேசுவர். பெந்தக்கோஸ்து விழாவின்போது சீடர்கள் புதிய மொழியில் பேசினார்கள் (திப 2: 1-4).

3. பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். தூய பவுல் மால்தாத் தீவில் தங்கியபோது விரியன் பாம்பால் தாக்கப்பட்டார். ஆனால் அவருக்கு எந்தத் தீங்கும் நடைபெறவில்லை (திப 28: 1-5).

4. கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது தீங்கிழைக்காது. தொடக்க திருச்சபையில் கொடிய நஞ்சைக் குடித்தும் குறை ஒன்றுமில்லாதிருந்த பர்சபா, யுஸ்துஸ் பற்றி பப்பியாஸ் தரும் வரலாறு விளக்குகிறது.

### ஆண்டவரின் உடனிருப்பு

சீடர்களோடு அவர்களது பணியில் உலக முடிவுவரை இயேசுவும் இருப்பதாக வாக்களித்தார். இது சீடர்களுக்கு ஆறுதலாக விளங்கியது. அவரை நேரடியாகப் பார்க்க முடியாவிட்டாலும் அவர் தம்மோடு இருக்கிறார் எனும் நம்பிக்கையே சீடரை வாழவைத்தது.

✝ இயேசுவின் பணியைத் தொடர இன்று நானும் அழைக்கப்படுகிறேன்.

✝ என் அழைப்பை உணர்ந்து பொறுப்போடு செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 - திங்கள் - வைகாசி 2009

*திப 19: 1-8 திபா 68: 1-6 யோவா 16: 29-33*

### <u>துன்பம்</u>

இயேசு தொடர்ந்து சீடர்கள் எதிர்கொள்ளவிருக்கும் துன்பங்களையும் அவர்களுக்கு இருக்க வேண்டிய நம்பிக்கை, துணிவு பற்றியும் எச்சரித்தார். தனக்குத் துன்பம் வரும்போது அவர்கள் நிலையையும், பணிவாழ்வின்போது அவர்கள் படவிருக்கும் கஷ்டங்களையும் இயேசு நன்றாகவே அறிந்திருந்தார். இன்று நாம் எதிர்கொள்ளும் துன்பங்களையும் இயேசுவில் கொண்டுள்ள நம்பிக்கையையும் ஒப்பிட்டுப் பார்க்க வாசகம் அழைக்கின்றது.

**அவரவர் வீட்டுக்கு...**

இயேசுவால் பெயர்சொல்லி அழைக்கப்பட்டவர்கள் அவரது சீடர்கள். மீன்பிடித் தொழிலையே அதிகமானோர் செய்தனர். அழைப்புக்குப் பின்பு முழு நேரமும் இயேசுவோடு எனும் நிலையில் வாழ்ந்தவர்கள் இவர்கள். இயேசுவே அவர்களுக்கு எல்லாம். ஆனால் இயேசு பிடிபட்டதும் இவர்களது நிலை என்ன? தம் தலைவர் இயேசுவைவிட தம்மால் எதையும் சாதிக்க முடியாது என்று தெரிந்திருந்தனர். எனவே துன்பம், ஆபத்து, மரணம் என்று வந்தால் அதை எதிர்கொள்ள இவர்களுக்கு சக்தியில்லை. ஆனாலும் இந்த நிலை நீடிக்காது என்பதையும் இயேசு அறிந்திருந்தார். தனது உயிர்ப்பிற்குப் பிறகு அவர்களுக்குள் மகிழ்ச்சி தொடரும்.

இயேசுவையும் தனியே விட்டு விடுமளவிற்கு அவர்கள் ஒரு பயங்கரமான சூழ்நிலையை எதிர்கொள்ளப் போகிறார்கள்.

**தந்தை என்னோடு...**

உலகமே தனக்கு எதிராக வந்தாலும், சீடர்கள் அவரை விட்டுப் போனாலும் இயேசு தயங்கவில்லை. இறைத் தந்தை தன்னோடு இருக்கிறார் எனும் நம்பிக்கை அவருள் இருந்தது. ஏனெனில் அவர் உலகிற்கு வந்தது, பணி செய்வது எல்லாம் தந்தைக்காகவே. இந்த உறுதிப்பாடு அவரை வழிநடத்தியது. இதே உறுதிப்பாடு சீடர்களையும் வழிநடத்த வேண்டும் என்பது இயேசுவின் எண்ணம். சீடர்களை எச்சரித்தாலும் தனது பிரசன்னம், வழிகாட்டல், தூய ஆவியின் செயல்பாடுகள் பற்றிய நம்பிக்கையையும் அவர் கொடுத்திருந்தார்.

★ துன்பம் அனுபவிப்பது அல்ல, மாறாக, இயேசுவோடு நான் இணைந்திருக்க வில்லையே எனும் எண்ணமே எனது கவலையாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 – செவ்வாய் - வைகாசி 2009

*திப 20: 17–27 திபா 68: 9–10, 19–20 யோவா 17: 1–11*

## *தூய பிலிப்பு நேரி*

இயேசு தனக்காகவும் தன் சீடர்களுக்காகவும் தந்தையிடம் வேண்டினார். இதை தலைமைக் குருவின் செபம் என்றும் அழைப்பார்கள். தந்தைக்கு முன்பாக நின்று அவர் தன் சீடர்களுக்காக செபித்தார். யோவான் நற்செய்தியில் மட்டும் நாம் காணும் இந்த செபத்தின் முக்கியத்துவத்தைப் பார்ப்போம்.

### மூன்று பிரிவுகள்

இந்த செபத்தை நாம் மூன்று பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கலாம்.

1. இயேசு தனக்காக செபித்தல் (17: 1–8).
2. இயேசு தன் சீடர்களுக்காக செபித்தல் (17: 9–19).
3. இயேசு அனைத்து விசுவாசிகளுக்காகவும் செபித்தல் (17: 20–26).

தன் பிரியாவிடை உரையின் பின்பு இயேசு செபித்தார். தனது சீடர்கள் படவிருக்கும் துன்பங்களை மனதில் கொண்டவராக தந்தையின் மகிமைக்காகவும் (17: 1–5), சீடர்களின் பாதுகாப்பு, ஒற்றுமைக்காகவும் (17: 6–19), தன் சீடர்கள் அன்பிலும் பணியிலும் இணைந்திருக்க வேண்டுமெனவும் செபித்தார் (17: 20–26). இந்த செபத்தைத் தொடர்ந்து அவர்

### மகனின் மாட்சிமை...

இயேசு தனது பணிவாழ்வில் அன்புச் செயல்கள் மூலமாக தன் தந்தையை மகிமைப்படுத்தியுள்ளார். அவர் சிலுவையில் உயர்த்தப்படுவது மகிமையின் மிக உயர்வான அடையாளமாகும். எனவே தலைமைக் குருவாக இயேசு செயல்பட்டு தன் சீடர்களுக்காக அவர் பரிந்து பேசினார். மாட்சிப் படுத்துவதே அவரது செபத்தின் நோக்கம். அதற்காகவே அவர் உலகிற்கு வந்தார். தந்தை கொடுத்த பணியை நிறைவேற்றுவதே அந்த மாட்சிமை. கடவுளின் பெயரை உலகிற்குத் தெரியப்படுத்துவதே அந்த பணியாகும். அன்பு என்பதே கடவுளின் பெயராகும். இவ்வாறு இயேசு தனது இரக்கச் செயல்கள் மூலமாக தந்தையின் பெயரை மாட்சிப்படுத்தி இப்போது தன்னை மாட்சிப்படுத்துமாறு வேண்டுகின்றார். சிலுவையில் அறையப்பட்டு மாட்சிப்படுத் தப்படுவதற்கு இயேசு தயாரானார்.

கடவுளின் செயல்களை நாம் இன்று நிறைவேற்றும்போது அவருக்குரிய மாட்சியை நாமும் கொடுக்கிறோம். அப்போது உரிய காலத்தில் தந்தை எம்மை மாட்சிப்படுத்துவார். எம் செயல்கள் கடவுள் புகழை எடுத்துரைக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 - புதன் - வைகாசி 2009

திப 20: 28-38 திபா 68: 28-29, 32-35 யோவா 17: 11-19

### தூய அகுஸ்தீன்

இயேசு தன் விசேட செபத்தின்போது தன் சீடர்களுக்காகவும் செபித்தார். ஏனெனில் அவர்கள் படவிருக்கும் துன்பங்களை அவர் அறிந்திருந்தார். கடவுள் தன் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருள வேண்டும் என்பது இயேசுவின் செபம்.

**ஒன்றாய் இருக்க...**

இயேசுவிற்குப் பின்பு சீடர்கள் பல துன்பங்களை அவர் பெயரால் அனுபவிப்பர். ஆயினும் இறைவனின் ஆற்றல் தம்மோடு இருந்து தம்மை வழிநடத்துகின்றது எனும் எண்ணம், நம்பிக்கை அவர்களுக்கு பணிவாழ்வில் தூண்டுதலாக அமையும். எனவே அவர்கள் ஒன்றாய் இருக்க வேண்டும். அதற்கு இயேசு முன்வைக்கும் உதாரணம் தந்தையும் இயேசுவும் காட்டும் ஒற்றுமையாகும். அவர்கள் ஒன்றாய் இருக்க வேண்டும் என்பது பணிவாழ்வின் வெற்றிக்கு மிக முக்கியமானது. இவர்கள் தமக்குள்ளும் ஒன்றாய் இருந்து இறைவனோடும் ஒன்றாய் இருக்க வேண்டும். இதை நாம் தொடக்க திருச்சபையில் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையிலிருந்து காணலாம் (திப 2: 42). இவர்களுக்குள் நட்பு, பகிர்வு, செபம், போதனை நிறைவாக இருந்தது. எனவே சீடர்களின் ஒற்றுமைக்காக இயேசு செபித்தார்.

**தீயோனிடமிருந்து...**

சீடர்கள் உலகைச் சார்ந்தவர்களல்ல. இவர்கள் உண்மையினால் அர்ச்சிக்கப்பட்டு உண்மைக்கு சான்று பகர வேண்டும். கடவுள் வார்த்தையே உண்மை. அவரது கட்டளைகளைப் போதித்து, கடைப்பிடிக்கும்போது உண்மைக்கு ஒருவர் சான்றுபகர்கின்றார். இயேசுவும் அதையே செய்தார். அதனால் எதிர்க்கப்பட்டார். சீடர்களது பணி, அழைப்பும் அதுவே. அவர்களும் எதிர்க்கப்படுவார்கள். எனவே தீயோனிடமிருந்து சீடர்களை காத்தருளும் என்று இயேசு வேண்டினார். தந்தையோடும் ஒருவர் ஒருவரோடும் இருக்க வேண்டிய உறவு, ஒற்றுமை, பகிர்வு ஆழமாக வேண்டும் என்பது இயேசுவின் விருப்பம்.

❀ அன்று தன் சீடர்க்காக மட்டுமல்ல, இன்று பல ஆபத்துகளையும் எதிர்கொண்டு உண்மைக்கு சான்றுபகரும் அனைவருக்காகவும் இயேசு செபிக்கிறார்.

❀ உண்மைக்காக உழைத்து, உண்மையுள்ளவராக வாழ்வதில் துன்பம் பல வந்தாலும் அது தரும் இன்பம் அதைவிடப் பெரியது. செயல்படுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 ~ வியாழன் - வைகாசி 2009

திப 22: 30, 23: 6-11 திபா 16: 1-2, 5, 7-10 யோவா 17: 20-26

### உண்மை

இயேசு தனக்கு, சீடர்க்கு என்று தொடங்கி தொடரும் தனது செபத்தில் தன்னில் நம்பிக்கை கொள்ளும் அனைவருக்காகவும் செபித்தார். தனது பணி இந்த உலகில் முடிவுற்றாலும் அது தன் சீடர்கள் மூலமாகத் தொடர வேண்டும். அவர்கள் மூலமாக நம்பிக்கை கொள்ளும் மக்களின் எண்ணிக்கையும் உயரும். இந்த மக்களின் ஒற்றுமை, வாழ்வு, பாதுகாப்பு அனைத்தும் இயேசுவின் எண்ணமே. அவர்களுக்காக செபித்தார்.

**கிறிஸ்தவர்களின் பணி...**

தந்தையின் செயல்களை செய்து முடித்து இயேசு தந்தையை மகிமைப் படுத்தினார் (17: 4). மகனாகிய இயேசு தன் சீடர்களை உலகிற்கு அனுப்புகிறார். தந்தையின் பணியை இயேசுவின் பெயரால் சீடர்கள் செய்து முடிக்க வேண்டும். இவ்வாறு இவர்களும் இயேசுவையும் தந்தையையும் மகிமைப்படுத்துவார்கள். இவர்களது பணியில் இணையும் அனைவருக்கும் துணை மிக அவசியம். ஏனெனில் இணைந்த கிறிஸ்தவர்களும் உண்மைக்கு சான்று பகர்ந்து, அந்த உண்மையை வாழ்ந்துகாட்டவும் வேண்டும். இது இவர்களது அழைப்பு, பணி. எனவே இந்த கிறிஸ்தவ சமூகங்களுக்காகவும் இயேசு செபித்தார்.

**வரக்கூடிய சவால்கள்**

அன்று உலகம் சீடர்களை வெறுத்ததுபோல இன்று அதே உலகம் கிறிஸ்தவர்களையும் வெறுக்கும். ஏனெனில் இவர்கள் ஒளியின் மக்கள், உலகமோ இருளையே விரும்பியது. உண்மையின் மக்களாக, ஒளியின் மக்களாக கிறிஸ்தவர்கள் வாழும்போது அதுவே உலகிற்கு ஒரு சவாலாகவும், உலகின் மனசாட்சியை உலுப்புவதாகவும் அமைந்துவிடும். எனவே தன்னை மாற்ற விரும்பாத உலகம் தனக்கு சவாலாக வரும் அனைவரையும் அழித்துவிடவே விரும்பும். இன்றும் ஆசிய நாடுகளில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக கொடுமைகளும், பழியும், கொலையும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. இதிலிருந்து தன் சீடர்களைக் காத்தருள இயேசு வேண்டினார்.

☝ உண்மைக்கு என்றும் சான்று பகர்ந்து வாழ வேண்டும். என் வாழ்வே உண்மை நிறைந்ததாக அமைய வேண்டும்.

☝ ஆபத்துகள் வந்தாலும் உண்மையில் வாழ்ந்திடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 – வெள்ளி - வைகாசி 2009

*திப 25: 13–21  திபா 103: 1–2, 11–12, 19–20  யோவா 21: 15–19*

### பேதுரு

இயேசுவின் உயிர்ப்புக்கு முன்பாக பேதுரு இயேசுவை மூன்று தடவைகள் மறுதலித்தார். உயிர்ப்புக்குப் பின் பேதுருவின் அன்பு இயேசுவால் மூன்று தடவைகள் சோதிக்கப்படுகின்றது. இது பற்றிப் பல கருத்துகள் கூறப்பட்டாலும் இப்பகுதி தரும் செய்தியைப் பார்ப்போம்.

**இவர்களைவிட மிகுதியாக...**

பேதுரு இயேசுவோடு இருந்தபோது தனது நம்பிக்கை, அன்பை வெளிப்படுத்தியுள்ளார். ஆயினும் இயேசுவை மறுதலித்த குற்ற உணர்வும் அவரை குழப்பியிருந்தது. இந்த அன்பை சுட்டிக்காட்டும் விதமாக இயேசு கேள்வி கேட்டார். தன் குற்றத்தினால் நொந்துபோயிருந்த பேதுரு இறைவனுக் குரிய அன்பால் அல்ல, நண்பருக்குரிய அன்பால் அன்பு செய்வதாகக் குறிப்பிடுகின்றார். இந்த அன்பு தன் நண்பரை மறுதலிக்கவும் செய்யும்.

**நீ என் மீது...**

இயேசு இரண்டாவது தடவையாகக் கேட்கும்போது 'இவர்களைவிட மிகுதியாக...' எனும் பதத்தைத் தவிர்க்கிறார். 'எல்லாரும் உம்மை விட்டு ஓடிப் போய்விட்டாலும் நான் ஒரு போதும் ஓடிப்போக மாட்டேன்' (மத் 26: 33) என்று சவால் விடுத்தவர் பேதுரு. ஆனால் இங்கு எதுவும் பேச முடியாத நிலையில் இருந்தார். எனவே 'இவர்களைவிட மிகுதியாக...' எனும் பதத்தை இயேசு தவிர்த்தார்.

**உனக்கு என்னிடம்...**

இயேசு பேதுருவின் நிலைக்கு இறங்கி வந்து இந்தக் கேள்வியைக் கேட்டார். 'உனக்கு என்னிடம் அன்பு உண்டா?' மறுதலித்தாலும் பரவாயில்லை, என்னை ஒரு நண்பரைப் போல அன்பு செய்கிறாயா என்று கேட்பதைப் போலுள்ளது இந்தக் கேள்வி. இங்கு பேதுருவுக்கு நம்பிக்கை பிறக்கின்றது.

யாரையும்விட பேதுருவை அதிகமாக அறிந்திருந்தவர் இயேசு. அவர் இனியவர், நல்லவர். ஆனால் சூழ்நிலைகள் அவரை மறுதலிக்கச் செய்தது. இயேசுவோ அவரில் வைத்திருந்த அன்பால் 'என் ஆடுகளை மேய்' என்றார்.

இன்று தவறுவதைவிட திருந்தி, திரும்பி இயேசுவிடம் வருவதே முக்கியம்.

பாவிகளையல்ல, பாவங்களை வெறுக்கும் இயேசுவிடம் வருவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 - சனி - வைகாசி 2009

திப 28: 16-20, 30-31 திபா 11: 4, 5. 7 யோவா 21: 20-25

## இறைபணி

பேதுருவிற்கு யோவானின் நிலை, எதிர்காலம் பற்றிய சந்தேகம் வர அவர் இயேசுவிடமே அந்த சந்தேகத்தை வெளிப்படுத்தினார். பேதுரு யோவான் பற்றிய வேறுபாடுகளையும் ஒற்றுமையையும் இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

### பேதுருவும் யோவானும்

நற்செய்திகளில் சில சந்தர்ப்பங்களில் பேதுருவையும் யோவானையும் ஒன்றாகப் பார்க்கிறோம். யோவான் நற்செய்தி 13-20ம் அதிகாரங்களில் இந்த ஒற்றுமையைக் காணலாம். இராவுணவின்போது (13: 23-25), தலைமைக் குருவின் மன்றத்தில் (18: 15), மரியா வந்து சொன்னதும் கல்லறையை நோக்கி ஓடியது (20: 3), வெறுமையான கல்லறை அனுபவம் (20: 5-8), திபேரியாக் கடலில் மீன்பிடித்தபோது இயேசுவைக் கண்டது (யோவா 21: 7) போன்றவற்றில் இருவரும் காட்டப்படுகின்றார்கள்.

திருச்சபைக்குத் தலைமை தாங்குவது பேதுருவின் அழைப்பாகும். பேதுரு தனது மறைசான்று மரணத்தினால் இயேசுவை மாட்சிப்படுத்துவார். யோவான் வேறுவிதமாக இயேசுவுக்கு சான்று பகர இருக்கிறார். இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவோ, குறைத்து மதிப்பிடுவதாகவோ கிடையாது.

### சீடர்களும் இன்றைய தலைவர்களும்

சில சந்தர்ப்பங்களில் இருவருக்கும் ஒருவித போட்டி நிலவுவதையும் காணலாம். விசேடமாக யோவான் 21ம் அதிகாரத்தில் இவர்களது பெயர்கள் அடிக்கடி தரப்படுவதால் யூதாசுக்கு இணையாக திருச்சபையில் சீடர்களின் அல்லது இன்று திருச்சபைத் தலைவர்களில் காணப்படும் சக்தி, பலவீனங்களை நற்செய்தியாளர் காட்டுகின்றார். இவர்களது இந்த தனித்தன்மைகள் இன்று திருச்சபைத் தலைவர்களை மட்டுமல்ல, திருச்சபையையும் அதில் உள்ள உள்ளார்ந்த உறவுகளையும் காட்டுகின்றது.

- இன்று திருச்சபையில் பல பணிகள் இருக்கின்றன. இவற்றில் எதையும் நாம் குறைவாக மதிப்பிட முடியாது. அனைத்தும் இறைபுகழுக்காகவே நடைபெறுகின்றன என்பதை உணர்ந்து ஏற்க வேண்டும்.
- யாருடைய பணி பெரிது, யார் பெரிது என்று பார்ப்பதில் நேரத்தை விரயம் செய்யாமல் என் பணி என்ன என்று பார்த்து அர்ப்பணிப்பதே சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை ஆவி பெருவிழா

## 31 - வைகாசி 2009

*திப 2: 1-11 திபா 104: 1, 24, 29-31, 34 1கொரி 12: 3-7, 12-13 யோவா 20: 19-23*

## சீடத்துவம்

பெந்தக்கோஸ்து பெருவிழாவில் சீடர்கள் பெரும் மாற்றத்தைக் கண்டார்கள். தமக்குள் ஏற்பட்ட மாற்றம் அவர்கள் மனநிலையையே மாற்றியது. துணிந்து எங்கும் சென்று நற்செய்தி முழக்கம் செய்தார்கள். தன் சீடர்களாக மாறி தன் பணியைத் தொடர இயேசு இவர்களை அழைத்திருந்தார். சீடத்துவத்தின் சவால்களை இனிமேல்தான் இவர்கள் உணரத் தொடங்குவார்கள். இந் நிலையில் சீடர்களின் அழைப்பு, பணி, அர்ப்பணத்தைத் தியானித்து எம் வாழ்விற்குத் தேவையான சக்தியைப் பெற இன்றைய இறை ஆவி பெருவிழா அழைக்கின்றது.

### பெந்தக்கோஸ்து அனுபவம்

பழைய ஏற்பாட்டில் எகிப்திலிருந்து விடுதலை பெற்ற அனுபவத்தைப் போல இஸ்ரயேல் மக்கள் வாழ்வில் மறக்க முடியாத அனுபவம் போல, புதிய ஏற்பாட்டில் இயேசுவின் சீடர்களின் அனுபவம் ஆழமான அனுபவம். வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாகும். அங்கு நடைபெற்ற சம்பவம் இவர்களுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. நடந்ததைப் பார்த்த அப்பகுதியில் நின்ற யூதர்களுக்கும் பெரும் ஆச்சரியமே காத்திருந்தது.

### சீடர்களுக்குப் பேரதிர்ச்சி

தூய ஆவியின் வருகைக்காக காத்திருங்கள் என்று இயேசு முன்கூறியது இவர்களுக்குத் தெரியும். கொடுங்காற்று போன்ற ஒரு இரைச்சல், நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் போன்ற அனுபவங்களை இவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் உயிர்த்த ஆண்டவர் காட்சி கொடுத்த போது எதுவுமே செய்யாமல் பயந்த நிலையில் இருந்ததுபோல, இங்கு இவர்கள் இருக்கவில்லை. மாறாக, இவர்கள் அயல் மொழிகளில் பேசத் தொடங்கினார்கள். இவர்களுள் தூய ஆவி அல்லது இறைவின் ஆவி செயல்படத் தொடங்கினார். இயேசு வாக்களித்தவாறே இன்றிலிருந்து பணி தொடங்குகிறது.

### பார்த்தோருக்கு அதிர்ச்சி

இவர்கள் கலிலேயர்கள். எனவே இவர்கள் எவ்வாறு எமது தாய் மொழிகளில் பேச முடியும். இந்த எண்ணம் தவறான முடிவுக்கும் கொண்டு சென்றது. இவர்கள் மது மயக்கத்தில் இருக்கிறார்கள் எனும் கருத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டு கிண்டல் செய்தனர். ஆனால் பேதுருவின் அருளுரையைக் கேட்டதும் இவர்கள் மனம்மாறி உள்ளம் குத்தப்பட்டவர்களாய் 'சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?' (திப 2: 38) என்று கேட்டார்கள். தூய ஆவியின் வருகையோடு திருத்தூதர்களிலும் ஏனைய சீடர்களிலும் பல மாற்றங்கள் ஏற்பட நற்செய்திப் பணி தொடர்ந்தது.

**உண்மை சீடத்துவம்...**

என்னைப் பின்செல்ல விரும்புவோர் தன் சொந்தங்கள், சொத்துகள், தன்னையும் மறந்து என்னைப் பின்செல்லட்டும் என இயேசு சொல்லியிருந்தார். பேதுரு ஆண்டவரிடம் பல அனுபவங்கள் பெற்றவர். இங்கு நற்செய்தியில் அவர் யோவானுக்கு என்ன ஆகும் என்று கேட்டார். இயேசுவின் பதிலோ உனக்கு அது என்ன? என்பதாகும்.

***1. திரும்பிப் பார்த்தல்***

பேதுரு ஆண்டவரின் சீடர். அவரைப் பின்செல்ல வேண்டியவர். ஆயினும் அவரது ஆர்வம் அவரது சிந்தனைகளைத் திசைதிருப்பியது. பின் செல்ல வேண்டியவர் திரும்பிப் பார்க்கிறார். 'கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல' (லூக் 9: 62). திரும்பிப் பார்த்து யோவானைப் பற்றி எதிர்வுகூறலைக் கேட்கிறார்.

***2. என்னைப் பின் தொடர்***

யோவான் நற்செய்தியில் ஆண்டவர் பேதுருவுக்குக் கடைசியாகச் சொன்ன வார்த்தை அல்லது கடைசியாகக் கொடுத்த கட்டளை, 'என்னைப் பின் தொடர்' (21: 19). ஏனெனில் பேதுருவின் சிந்தனை ஆண்டவரில் இருப்பதற்குப் பதிலாக யோவானில் நிலைத்திருந்தது.

**யோவானின் சான்று**

யோவான் பேதுருவைப் போல மறைசாட்சியாக இறக்காவிட்டாலும் அவர் தனது இறுதிக் காலங்களில் நற்செய்தி, திருமடல்கள், திருவெளிப்பாடு நூல்களை எழுதி திருச்சபைக்கு பெரும் பங்காற்றியிருக்கிறார். அவரது சான்று அளப்பரியது. இன்று கடவுளின் பணி செய்வதற்கு ஒரு வழிதான் உண்டு என்பதல்ல. மாறாக எமது சாதாரண நிலையிலிருந்து பாரிய பணிகளை நாம் செய்யலாம். அனைத்துப் பணிகளும் கடவுளின் மகிமைக்கே எனும் நோக்கோடு செய்யப்படும்போது அதில் நிலையான திருப்தியும் இருக்கும்.

- எனது சூழ்நிலையில் எவ்வாறு பணி செய்யலாம் என ஆராய்வேன்.
- ஆண்டவரின் மகிமைக்காகவே அனைத்தையும் செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது விவிலிய நூல்களின் பெயர்களும் சுருக்கக் குறியீடுகளும்

### *பழைய ஏற்பாடு*

| புதிய பெயர்கள் | பழைய பெயர்கள | சுருக்கக் குறியீடு |
|---|---|---|
| 1. தொடக்க நூல் | ஆதியாகமம் | தொநூ |
| 2. விடுதலைப் பயணம் | யாத்திராகமம் | விப |
| 3. லேவியர் | லேவியராகமம் | லேவி |
| 4. எண்ணிக்கை | எண்ணாகமம் | எண் |
| 5. இணைச்சட்டம் | உபாகமம் | இச |
| 6. யோசுவா | யோசுவா | யோசு |
| 7. நீதித்தலைவர்கள் | நீதிபதிகள் | நீத |
| 8. ரூத்து | ரூத் | ரூத் |
| 9. 1 சாமுவேல் | 1 சாமுவேல் | 1சாமு |
| 10. 2 சாமுவேல் | 2 சாமுவேல் | 2சாமு |
| 11. 1 அரசர்கள் | 1 அரசர்கள் | 1அர |
| 12. 2 அரசர்கள் | 2 அரசர்கள் | 2அர |
| 13. 1 குறிப்பேடு | 1 நாளாகமம் | 1குறி |
| 14. 2 குறிப்பேடு | 2 நாளாகமம் | 2குறி |
| 15. எஸ்ரா | எஸ்ரா | எஸ் |
| 16. நெகேமியா | நெகேமியா | நெகே |
| 17. எஸ்தர் | எஸ்தர் | எஸ் |
| 18. யோபு | யோபு | யோபு |
| 19. திருப்பாடல்கள் | சங்கீதங்கள் | திபா |
| 20. நீதிமொழிகள் | பழமொழி ஆகமம் | நீமொ |
| 21. சபை உரையாளர் | சங்கத் திருவுரை | சஉ |
| 22. இனிமைமிகு பாடல் | உன்னத சங்கீதம் | இபா |
| 23. எசாயா | இசையாஸ் | எசா |
| 24. எரேமியா | எரேமியாஸ் | எரே |
| 25. புலம்பல் | புலம்பல் | புல |
| 26. எசேக்கியேல் | எசேக்கியேல் | எசே |
| 27. தானியேல் | தானியேல் | தானி |
| 28. ஒசேயா | ஓசே | ஒசே |
| 29. யோவேல் | யோவேல் | யோவே |
| 30. ஆமோஸ் | ஆமோஸ் | ஆமோ |
| 31. ஒபதியா | அப்தியாஸ் | ஒப |
| 32. யோனா | யோனாஸ் | யோனா |
| 33. மீக்கா | மிக்கேயாஸ் | மீக் |
| 34. நாகூம் | நாகும் | நாகூ |
| 35. அபக்கூக்கு | அபாக்கூக் | அப |
| 36. செப்பனியா | செப்போனியாஸ் | செப் |
| 37. ஆகாய் | --- | ஆகா |
| 38. செக்கரியா | சக்கரியாஸ் | செக் |
| 39. மலாக்கி | மலாக்கியா | மலா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைத் திருமுறை நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. தோபித்து | தொபியாசு ஆகமம் | தோபி |
| 2. யூதித்து | யூதித் | யூதி |
| 3. எஸ்தர் | --- | எஸ் (கி) |
| 4. சாலமோனின் ஞானம் | ஞானாகமம் | சாஞா |
| 5. சீராக்கின் ஞானம் | சீராக் ஆகமம் | சீஞா |
| 6. பாரூக்கு | பாரூக் | பாரூ |
| 7. தானியேல் இணைப்புகள் | --- | தானி (இ) |
| 8. 1 மக்கபேயர் | 1 மக்கபே ஆகமம் | 1மக் |
| 9. 2 மக்கபேயர் | 2 மக்கபே ஆகமம் | 2மக் |

## புதிய ஏற்பாடு

| புதிய பெயர்கள் | பழைய பெயர்கள் | சுருக்கக் குறியீடு |
|---|---|---|
| 1. மத்தேயு நற்செய்தி | மத்தேயு | மத் |
| 2. மாற்கு நற்செய்தி | மாற்கு | மாற் |
| 3. லூக்கா நற்செய்தி | லூக்காஸ் | லூக் |
| 4. யோவான் நற்செய்தி | அருளப்பர் | யோவா |
| 5. திருத்தூதர் பணி | அப்போஸ்தலர் பணி | திப |
| 6. உரோமையர் | உரோமையர் | உரோ |
| 7. 1 கொரிந்தியர் | 1 கொரிந்தியர் | 1கொரி |
| 8. 1 கொரிந்தியர் | 2 கொரிந்தியர் | 2கொரி |
| 9. கலாத்தியர் | கலாத்தியர் | கலா |
| 10. எபேசியர் | எபேசியர் | எபே |
| 11. பிலிப்பியர் | பிலிப்பியர் | பிலி |
| 12. கொலோசையர் | கொலோசேயர் | கொலோ |
| 13. 1 தெசலோனிக்கர் | 1 தெசலோனிக்கேயர் | 1தெச |
| 14. 2 தெசலோனிக்கர் | 2 தெசலோனிக்கேயர் | 2தெச |
| 15. 1 திமொத்தேயு | 1 தீமோத்தேயு | 1திமொ |
| 16. 2 திமொத்தேயு | 2 தீமோத்தேயு | 2திமொ |
| 17. தீத்து | தீத்து | தீத் |
| 18. பிலமோன் | பிலமோன் | பில |
| 19. எபிரேயர் | எபிரேயர் | எபி |
| 20. யாக்கோபு | யாகப்பர் | யாக் |
| 21. 1 பேதுரு | 1 இராயப்பர் | 1பேது |
| 22. 2 பேதுரு | 2 இராயப்பர் | 2பேது |
| 23. 1 யோவான் | 1 அருளப்பர் | 1யோவா |
| 24. 2 யோவான் | 2 அருளப்பர் | 2யோவா |
| 25. 3 யோவான் | 3 அருளப்பர் | 3யோவா |
| 26. யூதா | யூதா | யூதா |
| 27. திருவெளிப்பாடு | திருவெளிப்பாடு | திவெ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திகளும் அவை பாவிக்கப்பட்டுள்ள தினங்களும்

## பங்குனி

| திகதி | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான |
|---|---|---|---|---|
| 01 | – | 1: 12–15 | – | – |
| 02 | 25: 31–46 | – | – | – |
| 03 | 6: 7–15 | – | – | – |
| 04 | – | – | 11: 29–32 | – |
| 05 | 7: 7–12 | – | – | – |
| 06 | 5: 20–26 | – | – | – |
| 07 | 5: 43–48 | – | – | – |
| 08 | – | 9: 2–10 | – | – |
| 09 | – | – | 6: 36–38 | – |
| 10 | 23: 1–12 | – | – | – |
| 11 | 20: 17–28 | – | – | – |
| 12 | – | – | 16: 19–31 | – |
| 13 | 21: 33–43,45–46 | – | – | – |
| 14 | – | – | 15: 1–3, 11–32 | – |
| 15 | – | – | – | 2: 13–25 |
| 16 | – | – | 4: 24–30 | – |
| 17 | 18: 21–35 | – | – | – |
| 18 | 5: 17–19 | – | – | – |
| 19 | 1: 16, 18–21,24 | – | – | – |
| 20 | – | 12: 28–34 | – | – |
| 21 | – | – | 18: 9–14 | – |
| 22 | – | – | – | 3: 14–21 |
| 23 | – | – | – | 4: 43–54 |
| 24 | – | – | – | 5: 1–3, 5–16 |
| 25 | – | – | – | 5: 17–30 |
| 26 | – | – | – | 5: 31–47 |
| 27 | – | – | – | 7: 1, 2, 10, 25–30 |
| 28 | – | – | – | 7: 40–53 |
| 29 | – | – | – | 12: 20–23 |
| 30 | – | – | – | 8: 1–11 |
| 31 | – | – | – | 8: 21–30 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திகளும் அவை பாவிக்கப்பட்டுள்ள தினங்களும்

## சித்திரை

| திகதி | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|
| 01 | – | – | – | 8: 31–42 |
| 02 | – | – | – | 8: 51–59 |
| 03 | – | – | – | 10: 32–42 |
| 04 | – | – | – | 11: 45–57 |
| 05 | – | 14: 1–15: 47 | – | – |
| 06 | – | – | – | 12: 1–11 |
| 07 | – | – | – | 13: 21–33, 36–38 |
| 08 | 26: 14–25 | – | – | – |
| 09 | – | – | – | 13: 1–15 |
| 10 | – | – | – | 18: 1–19: 42 |
| 11 | – | – | – | 19: 38–42 |
| 12 | – | – | – | 20: 1–9 |
| 13 | 28: 8–15 | – | – | – |
| 14 | – | – | – | யோவா 20: 11–18 |
| 15 | – | – | 24: 13–35 | – |
| 16 | – | – | 24: 35–48 | – |
| 17 | – | – | – | 21: 1–14 |
| 18 | – | 16: 9–15 | – | – |
| 19 | – | – | – | 20: 19–31 |
| 20 | – | – | – | 3: 1–8 |
| 21 | – | – | – | 3: 7–15 |
| 22 | – | – | – | 3: 16–21 |
| 23 | – | – | – | 3: 31–36 |
| 24 | – | – | – | 6: 1–15 |
| 25 | – | 16: 15–20 | – | – |
| 26 | – | – | 24: 35–48 | – |
| 27 | – | – | – | 6: 22–29 |
| 28 | – | – | – | 6: 30–35 |
| 29 | – | – | – | 6: 35–40 |
| 30 | – | – | – | 6: 44–51 |
| 31 | – | – | – | – |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திகளும் அவை பாவிக்கப்பட்டுள்ள தினங்களும்

### வைகாசி

| திகதி | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|
| 01 | 13: 54–58 | – | – | – |
| 02 | – | – | – | 6: 60–69 |
| 03 | – | – | – | 10: 11–18 |
| 04 | – | – | – | 10: 1–10 |
| 05 | – | – | – | 10: 22–30 |
| 06 | – | – | – | 12: 44–50 |
| 07 | – | – | – | 13: 16–20 |
| 08 | – | – | – | 14: 1–6 |
| 09 | – | – | – | 14: 7–14 |
| 10 | – | – | – | 15: 1–8 |
| 11 | – | – | – | 14: 21–26 |
| 12 | – | – | – | 14: 27–31 |
| 13 | – | – | 11: 27–28 | – |
| 14 | – | – | – | 15: 9–11 |
| 15 | – | – | – | 15: 12–17 |
| 16 | – | – | – | 15: 18–21 |
| 17 | – | – | – | 15: 9–17 |
| 18 | – | – | – | 15: 26–16: 4 |
| 19 | – | – | – | 16: 5–11 |
| 20 | – | – | – | 16: 12–15 |
| 21 | – | – | – | 16: 16–20 |
| 22 | – | – | – | 16: 20–23 |
| 23 | – | | – | 16: 23–28 |
| 24 | – | 16: 15–20 | – | – |
| 25 | – | – | – | 16: 29–33 |
| 26 | – | – | – | 17: 1–11 |
| 27 | – | – | – | 17: 11–19 |
| 28 | – | – | – | 17: 20–26 |
| 29 | – | – | – | 21: 15–29 |
| 30 | – | – | – | 21: 20–25 |
| 31 | – | – | – | – |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்புகளும்,
## அவை கொடுக்கப்பட்டுள்ள திகதிகளும்


| | | | |
|---|---|---|---|
| தண்ணீர் | பங் 1, | செபம் | பங் 3,21, |
| இறையன்பு | பங் 5,14, | அதிகாரம் | பங் 6, |
| இறையன்பு | பங் 5,14, | அதிகாரம் | பங் 6, |
| உறுதிப்பாடு | பங் 8, | தீர்ப்பு | பங் 9, |
| சட்டம் | பங் 10,18, | முரண்பாடு | பங் 11, |
| செல்வம் | பங் 12, | பொறுப்பு | பங் 13, |
| கோவில் | பங் 15, | மன்னிப்பு | பங் 17,30, |
| அழைப்பு | பங் 19, | இறையிரக்கம் | பங் 22, |
| அர்ப்பணம் | பங் 29, | இறைவாக்கு | சித் 2, |
| மரணம் | சித் 4, | மனநிலை | சித் 6, |
| யூதாசு | சித் 7,8, | உயிர்ப்பு | சித் 12, |
| சூழ்ச்சி | சித் 13, | மகதலா மரியா | சித் 14, |
| அனுபவம் | சித் 16, | ஒப்புரவு | சித் 17,19, |
| நிக்கதேம் | சித் 20, | வாழ்வு | சித் 21,29, |
| ஒளி | சித் 22, | அந்திரேயா | சித் 24, |
| மாற்கு | சித் 25, | உணவு | சித் 27, |
| யோசேப்பு | வைகா 1, | ஆயர் | வைகா 3,4, |
| உறவு | வைகா 5,7,8,10, | தந்தை | வைகா 9,23, |
| வழிகாட்டல் | வைகா 11, | அமைதி | வைகா 12, |
| தூய ஆவி | வைகா 20, | ஒற்றுமை | வைகா 27, |
| பேதுரு | வைகா 29, | இறைபணி | வைகா 30, |
| சீடத்துவம் | வைகா 31 | | |

| | | | |
|---|---|---|---|
| பணி | பங் 2, | சித் 26, | |
| அடையாளம் | பங் 4,23, | சித் 28, | |
| தடைகள் | பங் 16, | வைகா 16, | |
| சான்று | பங் 26, | சித் 23, | |
| நற்செயல்கள் | சித் 3, | வைகா 26, | |
| துன்பம் | சித் 5, | வைகா 18,21,22,25, | |
| மரியா | சித் 11, | வைகா 13, | |
| அன்பு | பங் 7,20,25, | சித் 9, | வைகா 14,15,17, |
| நம்பிக்கை | பங் 24,27, | சித் 18, | வைகா 2,6, |
| உண்மை | பங் 28, | சித் 1, | வைகா 28, |
| இயேசு | பங் 31, | சித் 15, | வைகா 24, |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org